# கோகுலம்

GOKULAM

ஜூலை 84 ரூ 2






லோகமான்ய பால கங்காதர திலகர்

பிறந்தநாள் ஜூலை 23



# கோகுலம்

மலர்—2 இதழ்—6 1984 ஜூலை மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

## அருமைச் சிறுவர் சிறுமியரே!

**'மோகினித் தீவு'**

இந்தப் பெயரை உங்களில் சிலர் கேள்விப்பட்டிருக்கலாம். உங்கள் பெற்றோர்கள் இந்தப் பெயரை நிச்சயம் கேள்விப்பட்டிருப்பார்கள்; இந்தக் கதையைப் படித்தும் இருப்பார்கள். இந்தக் கதையை எழுதியவர் சாதாரண ஓர் எழுத்தாளரா? இல்லை. எழுத்தாளருக்கெல்லாம் எழுத்தாளராக விளங்கிய பேராசிரியர் கல்கி அவர்கள்தான்! அவர் எழுதிய மோகினித் தீவை உங்களுக்கு ஏற்றபடி அவரது புதல்வி ஆனந்தி படக்கதையாக்கி அடுத்த இதழில் தருகிறார். உங்கள் அபிமான ஓவியர் வினு ஒவ்வொரு காட்சியையும் நேரில் காண்பது போன்ற உணர்வை ஊட்டுகிறார்.

'மாதம் ஒரு மணிக் கதை'யை இந்த இதழிலிருந்து உங்களுக்குத் தருகிறார்கள் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். ஆரம்பத்திலேயே அவர்கள் உங்களுக்கு 'நல்விருந்து' அளிக்கிறார்கள். உண்டு மகிழுங்கள்.

அடுத்த இதழில் புதுவிதமான ஒரு போட்டி வருகிறது. இந்த இதழ் — அதாவது ஜூலை இதழ் கையிலிருந்தால்தான் அந்தப் போட்டியில் வெற்றி பெற முடியும். எல்லா இதழ்களையுமே நீங்கள் பத்திரமாக வைத்திருப்பீர்கள் என்பது தெரியும். இருந்தாலும், இந்த ஜூலை இதழை யாருக்கேனும் படிக்கக் கொடுத்தாலும் மறக்காமல் திருப்பி வாங்கி விடுங்கள். போட்டியில் வெற்றி பெறுவோருக்கு முதல் பரிசு, இரண்டாவது பரிசு என இரு பரிசுகள் வழங்கப்பெறும். அத்துடன், அவர்களின் புகைப்படங்களையும் வெளியிடுவோம்.

'அது எப்படிப்பட்ட போட்டியாக இருக்கும்?' என்று உடனே சிந்திக்கத் தொடங்கி விட்டீர்களா? உம், சிந்தியுங்கள், நன்றாகச் சிந்தியுங்கள்!

அழ. வள்ளியப்பா



# வி.வெ.ம.ம. மண்ணாங்கட்டியைக் காட்டிக்கொடுப்பதா? முடியாது.!

உள் அட்டையில் இடம் பெற்ற புகழ் பெற்றவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது 'அதிசயப் பெண்மணி,' 'அன்புக் கவிமணி' என்று தலைப்புக் கொடுத்திருப்பது பொருத்தமாகவும் அருமையாகவும் உள்ளது.

—ஏ. எம். முஹம்மது நிஜாமுத்தீன், நீடூர்.

'பழைய கதை; புதிய பாடல்' ஏன் வெளியிடவில்லை? ஜூலை இதழிலிருந்தாவது தொடர்ந்து வெளியிட வேண்டும், கண்டிப்பாக வெளியிட வேண்டும்.

இரா. சம்பத்குமார், பெரிய நாயக்கன் பாளையம்.

கருணை விழிகள் கதையின் தலைப்பில் 'விழிகள்' என்பதற்குப் பதிலாக விழகள் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. அதேபோல் 100 பொற்காசுகளுக்குப் பதில் 1000 என்று தலைப்பு இருக்கிறது. தவறுதானே?

—எச். ராதாகிருஷ்ணன் (2448), முக்கூடல்.

(தவறுதான். இந்த இரு தவறுகளையும் சுட்டிக்காட்டிப் பல சிறுவர், சிறுமியர் எழுதியிருக்கிறார்கள். இனி இம்மாதிரித் தவறுகள் நேராதவாறு பார்த்துக் கொள்ளுகிறோம். —ஆசிரியர்.)

'விண்வெளியில் மஹாமண்டூர் மண்ணாங்கட்டி!' கதையைப் படித்துவிட்டு எங்கள் 'மார்க்கோனி மன்ற'த்துச் சிறுவர்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம். 'மண்ணாங்கட்டி' கிடைத்ததாகத் தகவல் வந்தால், இங்கு பொள்ளாச்சிக்கு அனுப்பி வையுங்கள். அவருக்கு மிகப் பெரிய பாராட்டு விழா ஒன்று ஏற்பாடு செய்யப் போகிறோம்.

—உறுப்பினர்கள், மார்க்கோனி சிறுவர் வானொலி மன்றம், பொள்ளாச்சி—6.

வி. வெ. ம.ம. மண்ணாங்கட்டியை 10 தடவை படித்து விழுந்து விழுந்து வயிறு குலுங்கச் சிரித்தேன்.

—க. நடராஜன் (5500), ஈரோடு—2.

இரண்டு கோடியே இருபத்திரண்டு லட்ச ரூபாய்க்கு ஆசைப்பட்டு எங்களை இன்பமாகச் சிரிக்க வைத்த மஹாமண்டூர் மண்ணாங்கட்டியைக் காட்டிக் கொடுத்து விடுவோமா என்ன? வேண்டுகோள் விடுத்த கதை ஆசிரியரிடம் 'முடியாது' என்று சொல்லிவிடுங்கள்.

—வி. முரளிதரன், சென்னை—14.

'நெஞ்சம் குளிர' என்ற பாடல் பிறருக்கு உதவும் பெருங்குணத்தை எடுத்துக் காட்டுகிறது.

—என். சந்திரன் (4785), பாவட்டக்குடி.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பற்றிக் கேள்வி கேட்ட சிற்பி சோமுவுக்கும், அவற்றிற்கு அருமையாகப் பதிலளித்த சிறுவர்களுக்கும் ஒரு சபாஷ்!

—வி. ஜெயவேலு, அத்திமலைப்பட்டு.

'யவக்ரீதன்' படக்கதை அருமை. இதை என் சினிமாப் பைத்திய நண்பன் கீழ்வருமாறு கூறினன்: ஆனந்தி அவர்களின் டைரக்ஷனில் உருவான யவக்ரீதன் மர்மப்படம் அருமை. திகில், சஸ்பென்ஸுடன் விஜு அவர்களின் கேமரா மிகத் தெளிவாகப் படம் பிடித்திருக்கிறது!

—எம். ஏ. பாஷா, சின்னசேலம்.

உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை வரிசையில் 'மாலுமி சிந்துபாத்' வெளியிட்டிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. ஆங்கிலத்தில் படித்ததை விட, தமிழ்ச் சுருக்கம் படித்துப் பெரும் மகிழ்ச்சி அடைந்தேன்.

—நீ.க.ப. ஸ்ரீசங்கர் (250), கோவை—15.

'இளமையில் இவர்கள்' 'அப்புசாமி—குப்புசாமி' வெளியிடமாட்டீர்களா?

—வெ. கோகுல் (4827), திருநெல்வேலி—1.

(புதிய புதிய பகுதிகளை ஆரம்பிக்கும் போது, சில பழைய பகுதிகளை நிறுத்தாமலிருக்க முடியவில்லையே! —ஆசிரியர்.)

ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் 'நல்விருந்தை' உண்ண ஆவலோடு இருக்கிறேன்.

—த. அன்புச்செழியன், ஆம்பூர்.

பிருந்தாவனக் கதையரங்கமும், கவியரங்கமும் அருமை! இளைய தலைமுறைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதில் 'கோகுலம்' முன்னணியில் இருக்கிறது.

—ரமேஷ்பாபு, உடையார் கோயில்.


என் போன்ற சிறுவர்களின் கதைகளையும், பாடல்களையும் வெளியிட்டு, 'பிருந்தாவனக் கதாசிரியர்கள்', 'பிருந்தாவனக் கவிஞர்கள்' என்ற முத்திரையையும் குத்தி அவர்களுக்குப் பெருமையும், ஊக்கமும் அளிக்கும் உங்களை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை.

—என். வளர்மதி, மேலூர்.

...குறிப்பாக 'கேள்வி இங்கே; பதில் எங்கே?' 'மாவட்ட வினா—விடை' பகுதிகள் மிக அருமை.

—ஜி. என். விஜயா நெடுஞ்செழியன், பண்ணுருட்டி.

## இந்த இதழ் எழுத்தாளர்கள்


பல்லவன்


இரா. சுராஜ்


ம. கணபதி



க. சிந்துகுமார்


பா. ராஜா



ஜ.ா. சந்திரகுமார்


ஆ. பரணிபிரபு

## பிருந்தாவனக் கதாசிரியர்கள்


க. அருள்சிவபாலன்


ச. நிரஞ்சன்


எா். செந்தில் வேலன் (ஜாசா)

## பிருந்தாவனக் கவிஞர்கள்

• பா. ராகவன், ஜி. ஏகலைவன்
இருவர் படங்களும் முன்பே வெளிவந்துள்ளன.



# மாவட்ட வினா-விடை

கேள்விகேட்பவர்: **மீனு நீலகண்டன்**

பங்குகொள்வோர்: **ஈ. வாணி, பி. நடராஜ், ராஜேஸ்வரி.**

மீனு நீலகண்டன்: நம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. என்ன என்று உங்களுக்குத் தெரிந்திருக்குமே!

நடராஜ்: ஓ! நன்றாகத் தெரியுமே! நம் பாரத தேசத்தின் தெற்கு எல்லையே கன்னியாகுமரிதானே? இங்கு மூன்று கடல்களும் கூடி முழங்குகின்றனவே!

மீனு: நன்றாகச் சொன்னாய் நடராஜ்... வாணி, நடராஜ் சொன்ன மூன்று கடல்கள் என்ன, என்ன?

வாணி: வங்காள விரிகுடா, அரபிக் கடல், இந்தியப் பெருங்கடல்.

மீனு: ஆம், பாரதத் தாயின் பாதச் சிலம்பொலியாக இந்த மூன்று கடல்களும் சதா முழங்கிக் கொண்டேயிருக்கின்றன. குமரிமுனையில் அரியதொரு காட்சியையும் காணலாம். அது என்ன?

ராஜேஸ்வரி: சூரியன் உதிப்பதையும், மறைவதையும் இந்த ஒரே இடத்திலிருந்து பார்க்கலாம்.

மீனு: அது மட்டுமா? சித்திரா பௌர்ணமி நாளில் ஒரே நேரத்தில் சூரியன் மேற்கே மறைவதையும், சந்திரன் கிழக்கே எழுவதையும் காணலாம். கன்னியாகுமரியிலுள்ள பகவதி அம்மன் கன்னியாக —குமரியாக இருப்பதாகப் புராணம் கூறுகிறது. அந்தக் கதை உங்களுக்குத் தெரியுமா?

நடராஜ்: என் அம்மா சொல்லியிருக்கிறார்கள். பகவதிக்கும் தாணுமாலயனுக்கும் இங்கே திருமணம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம். கலகம் செய்வதில் கைதேர்ந்தவரான நாரதர், பொழுது விடியு முன்பே சேவலைக் கூவ விட்டாராம். இதனால், 'பொழுது விடிந்து விட்டது; முகூர்த்த நேரம் தவறி விட்டது' என்று நினைத்துத் தாணுமாலயன் சுசீந்திரத்திற்குத் திரும்பிப் போய் விட்டாராம். திருமணம் நடைபெறவில்லையாம், ஆகையால் பகவதி அம்மன் கன்னியாகவே இங்கு நின்று தவம் செய்கிறாளாம்.

மீனு: தேவலையே! கதையை நன்றாக நினைவில் வைத்திருக்கிறாயே!

வாணி: அந்தக் கதையில் இன்னொரு விஷயத்தை நடராஜ் கூற மறந்து விட்டானே!

மீனு: அது என்ன விஷயம்?

வாணி: அப்போது பகவதியம்மனுக்குத் திருமணப் பரிசுகளாகப் பொன்னும், மணியும், நெல்லும் நிறைய நிறைய வந்தனவாம். அவைதான் இன்று குமரிக் கடற்கரையில் பல நிற மணல்களாக மாறிக் கிடக்கின்றனவாம்!

ராஜேஸ்வரி: நான்கூட அந்த மணலை அள்ளி வந்து வீட்டிலே வைத்திருக்கிறேனே!

மீனு: இந்த அம்மன் — அதாவது பகவதி அம்மன் பெயர் உங்கள் வீட்டில் யாருக்காவது உண்டா?

நடராஜ்: என் தூரத்து உறவினர் ஒருவர் — மாமா முறை வேணும், அவர் பெயர் பகவதி. அவருடைய மருமகள் பெயரும் பகவதிதான்.

மீனு: இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆணுக்கும் இந்தப் பெயரை வைக்கிறார்கள்; பெண்ணுக்கும் இந்தப் பெயரை வைக்கிறார்கள்... சரி, கன்னியாகுமரிக்குப் போனபோது, முக்கியமாக எந்த எந்த இடத்தைப் பார்த்தீர்கள்?

வாணி: காந்தி மண்டபம் பார்த்தேன். அங்கே காந்தித் தாத்தா அஸ்தி வைத்திருக்கும் இடத்திற்கு மேலே ஒரு துவாரம் இருக்கிறது

துவாரத்தின் வழியாக காந்தித் தாத்தா பிறந்த அக்டோபர் இரண்டாம் தேதி சூரிய ஒளி வந்து அதன் மீது விழுமாம்!

ராஜேஸ்வரி: அங்கு விவேகானந்தர் பாறை இருக்கிறது. அதில் இப்போது நினைவுச் சின்னம் கட்டியிருக்கிறார்கள்.

மீனு: விவேகானந்தர் அமெரிக்காவுக்குப் போய் இந்து மதத்தின் பெருமையை எடுத்துக் கூறுவதற்கு முன்பு இங்கு வந்து அந்தப் பாறையில் உட்கார்ந்து தவம் செய்தாராம்!

பட்ட மக்களுக்குத் திறந்து விட்ட போது காந்திஜியை அரசாங்கமே அழைத்துக் கோயிலுக்குள் சென்று, வழிபட ஏற்பாடு செய்தது. நமது மாவட்டத்தில் கன்னியாகுமரிக்கு அடுத்தபடியாக உள்ள முக்கியமான ஸ்தலம் எது?

வாணி: சுசீந்திரம்.

மீனு: ஆம், அங்குள்ள சுவாமி பெயர் தெரியுமா? அந்த சுவாமி எந்த மாதிரி அமைந்திருக்கிறது?

நடராஜ்: சுவாமி பெயர் தாணுமாலயப்பெருமாள். பிரம்மா, சிவன், விஷ்ணு மூன்றும் ஒன்றுடன் ஒன்று










நடராஜ்: மகாத்மா காந்தி கூட இங்கே வந்ததாக என் தாத்தா சொல்லியிருக்கிறார்.

மீனு: ஆம், ஒரு முறையல்ல; இரு முறை வந்திருக்கிறார். முதல் முதலாக அவர் வந்தபோது, குமரியம்மன் கோவிலுக்குள் சென்று வழிபட விரும்பினார். 'காந்தி கடல் கடந்து வெளிநாடு சென்றவர். ஆகையால் அவரைக் கோயிலுக்குள் விட மாட்டோம்' என்று கூறி விட்டார்களாம், அப்போதிருந்த அரசாங்கத்தார். பிறகு, கோயில்களையெல்லாம் தாழ்த்தப்

இணைந்து இருக்கின்றன. இதை என் அம்மா சொன்ன போதுதான் நான் உற்றுப் பார்த்தேன்.

மீனு: அந்தக் கோயில் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை...

வாணி: ஒரு பெரிய தூணில் 24 தூண்களைச் செதுக்கியிருக்கிறார்கள். அதில் தட்டினால், ஓசை கேட்கிறது!

ராஜேஸ்வரி: அங்கேயிருக்கும் ஆஞ்சநேயர்... அடேயப்பா! எவ்வளவு உயரமாக இருக்கிறது! இன்னும் அங்கே பெண் உருவத்திலே பிள்ளையார் இருக்கிறார்! வெள்ளைக் கல்லால் ஆன நந்தியும் இருக்கிறது!



துணியைக் கடித்து இழுக்காதே! சோறும் கறியும் தருவேன் நான்!

புகைப்படம்: எம். நடராஜன்

## ?-வது அட்டையில்
## பால கங்காதர திலகர்

நம் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய பெரும் தலைவர்களில் ஒருவர். தேசபக்தியை மக்களுக்கு ஊட்டுவதற்காக ஆங்கிலத்தில் 'மராட்டா' என்ற பத்திரிகையையும், மராத்தியில் 'கேசரி' என்ற பத்திரிகையையும் நடத்தி, ஆங்கிலேயரின் ஆட்சியை, அவர்கள் செய்த அநியாயங்களை அஞ்சாமல் எழுதி வந்தார். பல மேடைகளில் முழக்கி வந்தார்.

அக்காலத்தில் காங்கிரஸில் ஒருவர் உறுப்பினராகச் சேர வேண்டுமென்றால், அவர் ஆங்கிலம் கற்றவராக இருக்க வேண்டும். இல்லாது போனால், சேர முடியாது. ''தேசபக்தி உள்ள எவரும் சேரலாம்; ஆங்கிலம் கற்றிருக்க வேண்டிய அவசியமில்லை'' என்று கூறி, எல்லோரையும் உறுப்பினராகச்சேர்க்கப் பாடுபட்டார் திலகர்.

இவருக்குத் திருவிழாக்கள் நடத்துவதிலே ஆர்வம் அதிகம். கணபதி விழா, சிவாஜி விழா என்று பல விழாக்களை நடத்தி மக்களை ஒன்று சேர்ப்பதிலே இவருக்கு ஒரு மகிழ்ச்சி!

இவரை ஆங்கில அரசாங்கம் பல தடவைகள் சிறையிலே அடைத்தது. ஒரு தடவை ஆறு ஆண்டுகள் அந்நிய நாட்டுச் சிறையிலே அடைத்து வைத்தது. பர்மாவிலுள்ள மாந்தலே என்ற ஊர்ச் சிறைதான் அது. அங்கிருந்தபோது, அவர் எழுதிய ஒரு புத்தகம், மிகச் சிறந்த புத்தகமாக எல்லோராலும் போற்றப்படுகிறது. அதன் பெயர்; 'கீதா ரகசியம்'

இவருக்கு மணிவிழா நடந்தபோது பொது மக்கள் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று போட்டு, ஒரு லட்ச ரூபாயை இவருக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்கள். 70 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு லட்ச ரூபாய் என்பது ஒரு பெரும் தொகை. அந்தப் பணத்தில் ஒரு பைசாவைக்கூட இவர் தமக்காக வைத்துக் கொள்ளவில்லை; அப்படியே அந்தப் பணம் முழுவதையும் பொதுப் பணிகளுக்கே கொடுத்துவிட்டார்!



மீனு: நன்றாகக் கவனித்திருக்கிறீர்கள். நமது மாவட்டத்திற்கு மிகுந்த பெருமையைத் தேடித் தந்திருக்கும் கவிஞர் யார்?

மூவரும்: கவிமணி.

மீனு: சபாஷ்! மூவரும் ஒரே குரலில் கூறுகிறீர்களே! தேனொழுகக் கவி பாடும் அவர் பெரியவர்களுக்கு மட்டுமல்ல; உங்களுக்கும் நிறையப் பாடல்களை எழுதியிருப்பதால்தான் இவ்வளவு பிரியமாகக் கூறுகிறீர்கள் திரைப்படத் துறையிலே மிகுந்த புகழுடன் விளங்கினரே அவர்யார்?

வாணி: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

மீனு: சபாஷ், அவரைப் போலவே இங்கு பிறந்த ஒருவர் நாடக உலகில் பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்தார்...

நடராஜ்: அவ்வை டி. கே. சண்முகம் தானே!

மீனு: ஆம், அவரும் அவரது சகோதரர்களும் நாடகக் கலைக்குச் சிறப்பாகத் தொண்டாற்றியிருக்கிறார்கள். அவ்வை என்றதும், எனக்கு ஆத்திசூடி பாடிய ஔவையார் நினைவு வருகிறது. அந்த ஔவையாருக்கு நம் மாவட்டத்தில் ஒரு கோயில் இருக்கிறது. எங்கே என்று தெரியுமா?

வாணி: செண்பக ராமன்புதூர் என்ற ஊரில்.

மீனு: சரியாகச் சொன்னாய். தமிழ் நாட்டில் ஔவையாருக்கு இங்கு மட்டும்தான் கோயில் இருக்கிறது. ஆடிச் செவ்வாய்களில் இங்கு கூட்டம் கூட்டமாக மக்கள் வந்து வழிபடுகிறார்கள்... முன்பு இந்தப் பகுதி திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தது. 1956–ஆம் ஆண்டு மொழி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டதே, அப்போது, குமரி மாவட்டம் ஏற்படுத்தப்பட்டுத் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட்டது. நாகர்கோயில் இம்மாவட்டத்தின் தலைநகரம் என்பது உங்களுக்குத் தெரியும். இங்குள்ள நாகராஜர் கோயிலுக்கு யாராவது போனதுண்டா?

வாணி, ராஜேஸ்வரி: நாங்கள் போயிருக்கிறோம்.

மீனு: அங்கு என்ன விசேஷம்? வாணி, நீ சொல்லு?

வாணி: அங்கு கர்ப்பக்கிரகத்தில் எப்போதும் நீர் ஊறிக் கொண்டே இருக்கிறது...

**ராஜேஸ்வரி:** அதில் உள்ள புற்று மண்ணைத்தான் எங்களுக்கெல்லாம் பிரசாதமாகக் கொடுத்தார்கள்.

**மீனு:** சரி, கன்னியாகுமரி அம்மனுக்கு வந்த பரிசுகள் பல நிற மணலாக மாறியதாகச் சொல்கிறார்களே, அந்த மணல்களில் உலோகக் கலப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ரூட்டைல், இல்மனைட், டிட்டானியம், மோனஸைட் என்னும் கனிப் பொருள்களெல்லாம் அந்த மணல்களில் இருக்கின்றனவாம்! இந்த மாவட்டத்திலுள்ள இயற்கை வளங்களைப் பற்றிக் கூற முடியுமா?

**நடராஜ்:** மழை நன்றாகப் பெய்வதால், வேளாண்மை நன்றாக நடைபெறுகிறது. வாழைத் தோட்டங்களும் ஏராளமாக இருக்கின்றன.

**மீனு:** அவ்வளவுதானா? ரப்பர், தேயிலை, காப்பி, முந்திரி, தென்னை, புகையிலை, பருத்தி, பாக்கு எல்லாம் கிடைக்கின்றன. மலேசியா நாட்டு ரப்பருக்கு அடுத்தபடியாகச் சிறந்து விளங்குவது குமரி மாவட்ட ரப்பர் தானாம்!... இம் மாவட்டத்தில் இரண்டு கோட்டைகள் இருக்கின்றன. பெயர்கள் தெரியுமா?

**வாணி:** உதயகிரிக்கோட்டை... இன்னொன்று...

**ராஜேஸ்வரி:** வட்டக்கோட்டை.

**மீனு:** தேவலையே. இருவரும் சேர்ந்து இரண்டு கோட்டைகளையும் பிடித்துவிட்டீர்கள்! இவற்றில் வட்டக் கோட்டை டிலன்னாய் என்ற டச்சுக்காரரால் கட்டப்பட்டது. உதயகிரிக்கோட்டை முன் காலத்தில் ராணுவ முக்கியத்துவம் பெற்றிருந்ததாம். இக்கோட்டையில் துப்பாக்கிகள், துப்பாக்கி மருந்துகள், இரும்புக் குண்டுகள் இன்னும் போருக்குத் தேவையான பல கருவிகளையும் செய்தார்களாம். ...முன்பு 'சக்கரம்' என்ற நாணயம் இங்கு புழக்கத்தில் இருந்தது. ஒரு ரூபாய்க்கு 28 சக்கரம் கிடைக்கும். ஒரு சக்கரத்திற்கு எத்தனை காசுகள் என்று தெரியுமா?

**நடராஜ்:** 16 காசுகள என்று கேள்வி.

**மீனு:** ரூபாய்க்கு 28 சக்கரங்கள்; ஒரு சக்கரத்திற்கு 16 காசுகள். அப்படியானால், ஒரு ரூபாய்க்கு...?

**வாணி:** 448 காசுகள்!

**மீனு:** அந்தக் காலத்தில் இந்தச் சின்னஞ்சிறு நாணயத்திற்குக் கூடப் பொருள்களை வாங்க முடிந்ததாம். ஆனால் இப்போதோ...?



## 3-வது அட்டையில்... மறைமலை அடிகளார்

நாகப்பட்டினத்தில் நான்காம் வகுப்பு வரைதான் படித்தார். ஆயினும், இந்த நாடே போற்றுகின்ற நல்ல தமிழ் அறிஞரானார். பள்ளியில் சேர்ந்து படித்தால்தான் படிப்பா? அறிஞர்களிடம் சென்று, அவர்களிடம் ஆர்வத்தோடு பாடம் கேட்டார். தமிழில் மட்டுமன்று, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் வல்லவராக விளங்கினார். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் சில காலம் பணி புரிந்தார்!

நல்ல ஆசிரியர் என்ற பெயர் எடுத்தார். அத்துடன் சிறந்த ஆராய்ச்சியாளர், இனிய சொற்பொழிவாளர் என்ற புகழையும் பெற்றார்.

1916—ஆம் ஆண்டு முதல், இவர் தனித் தமிழிலே எழுத வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். சுவாமி வேதாசலம் என்ற தமது பெயரை 'மறைமலை அடிகள்' என்று மாற்றி வைத்துக் கொண்டார். இவர் நடத்திய 'ஞான சாகரம்' என்ற மாத இதழும் 'அறிவுக் கடல்' ஆயிற்று!

இவர் பெரியவர்களுக்காகப் பல ஆராய்ச்சி நூல்களையும், கற்பனைக் கதைகளையும் எழுதியதோடு சிறுவருக்காகவும் இரு புத்தகங்களை எழுதினார்: 1. சிறுவர்க்கான செந்தமிழ், 2. அறிவுரைக் கொத்து.

இவர் தமது வருவாயிலே பெரும் பகுதியைப் புத்தகங்கள் வாங்குவதிலே செலவிட்டார். தாம் சேர்த்து வைத்திருந்த ஆயிரக் கணக்கான புத்தகங்கள் தமக்குப் பிற்காலத்தில் பொது மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்று ஆசைப்பட்டார். அவர் விருப்பம் போல் இப்போது பயன்பட்டு வருகின்றன. ஆம், சென்னை லிங்கிச் செட்டித் தெருவிலுள்ள 'மறைமலையடிகள் நூல் நிலைய'த்துக்குச் சென்றால் அவர் படித்த புத்தகங்களை நாமும் படித்துப் பயன் பெறலாம்.

# திருக்குறள் புதிர்







மேலே இரண்டு படங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும், ஒரு திருக்குறளை நினைவுபடுத்தும்!

எங்கே உங்கள் நினைவுக்கு வரும் திருக்குறளைத் தனித் தாளில் எழுதிக் கொள்ளுங்கள். பிறகு 15—ஆம் பக்கம் பாருங்கள். சரியாக இருந்தால் 'சபாஷ்!' என்று உங்கள் முதுகில் நீங்களே தட்டிக் கொள்ளுங்கள்!




# வசியம் மிக்க ஜிம்னாசியம்..!

ஜிம்னாசியம் உடலால் செய்யும் பயிற்சிகளே; அது விளையாட்டுக் கலையும் கூட. கிரேக்க நகரங்களில் உள்ள பயிற்சிக் கூடங்களில் இளைஞர்களும், பெண்களும் ஜிம்னாசியப் பயிற்சிகளைக் கல்விப் பயிற்சிகளில் ஒன்றாகக் கருதினர். பிரிட்டிஷ் ராணுவ வீரர்களுக்கு ஜிம்னாசியம் கற்றுத் தருவதற்காக ஸ்விஸ் நாட்டு ராணுவ வீரர் காப்டன் கிளெயஸ் நியமிக்கப்பட்டார். முதல் ஜிம்னாசியப் போட்டி 1896—ல் நடைபெற்றது. ஜிம்னாசியம் ஒலிம்பிக்கிலும் இடம் பெற்றது.

மாண்ட்ரியால் 1976 ஒலிம்பிக்கில் ஜிம்னாசியத்துக்கு வந்த கூட்டம் 18,000—க்கும் மேலிருக்கும். ஜிம்னாசிய விற்பன்னர்கள் தங்கள் திறமையினால், உடல் வாகுவினால் பல ரஸிகர்களது உள்ளங்களைக் கவர்ந்தனர்.

ரஷ்ய ஜிம்னாசிய வீராங்கனைகளில் லாரிஸா லாட்டினினா புகழ் பெற்றவர். இவரது ஸ்டைலும், லாகவமும், திறமையும் அனைவரையும் மெய்ம் மறக்க வைத்தன. ஒலிம்பிக் போட்டிகளில் ஒன்பது தங்கப் பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் பெற்றுச் சிறப்புற்றிருக்கிறார்.

தேசிய, சர்வதேசியப் போட்டிகளில் ஜிம்னாசியத்துக்கு ஆறுவகைப் பயிற்சிகள் ஆடவர்களுக்காக இருந்தன. தரைப் பயிற்சிகள், வால்ட், பொட்டல் குதிரைகள், பார் பயிற்சிகள், வளையங்கள், செங்குத்து பார் பயிற்சிகள் ஆகியவை. பெண்களுக்கு நான்கு பயிற்சிகளே உண்டு. அவை தரைப் பயிற்சிகள், வால்ட், உத்தரம், பார் பயிற்சிகள், எனப்படும்.

ஜிம்னாசியப் போட்டிகளை நிர்வகிக்க நான்கு நீதிபதிகள் இருப்பார்கள். அதோடு முதிய நீதிபதி, அல்லது ரிபரி இருப்பார்.

ஒவ்வொரு போட்டியாளரும் ஒவ்வொரு கருவியிலும் இரண்டு செட் பயிற்சிகளைச் செய்வார்கள். ஒன்று கட்டாயமாகச் செய்வது; அடுத்தது வாலண்டரியாகச் செய்வது. ஒவ்வொரு பயிற்சிக்கும் பூஜ்யத்திலிருந்து பத்து வரை மார்க் தரப்படும். எந்தப் போட்டியாளர் சராசரி விகிதத்தில் அதிக எண்ணிக்கை பெறுகிறாரோ அவருக்கு, முதல் இடம் தரப்படும்.

ஜிம்னாசியக் கலைஞர்கள் சில தவறுகளுக்கு எண்ணிக்கைகளை இழப்பார்கள். நிதானமிழத்தல், நம்பிக்கை இழத்தல், கருவியிலிருந்து விழுதல், நேர்த்தியற்ற சாதனைகளினால் எண்ணிக்கை இழக்க நேரிடும். தரைப் பயிற்சிகள் 12 மீட்டர் சதுரப் பாயில் நிகழும்.

உடல் கண்ட்ரோல், நிதானம், பலம் ஆகியவற்றைப் பல கோணங்கிப் பயிற்சிகளினால் நிறைவேற்றுவது ஜிம்னாசியம். பல போட்டியாளர்கள் குறிப்பிட்ட ஒரு ஜிம்னாசியக் கலையில் தேர்ந்தவர்களாக இருந்தாலும் மற்றப்

பயிற்சிகளிலும் விற்பன்னர்களாக இருக்க வேண்டியது அவசியம். அத்தனை பயிற்சிகளிலும் யார் அதிக அளவு எண்ணிக்கையை எடுக்கிறாரோ, அவரே ஆல்ரௌண்ட் சாம்பியனாகக் கருதப்படுவார். ஒரு தேர்ந்த ஜிம்னாசியக் கலைஞருக்கு இடைவிடாத பயிற்சி, ஒழுக்கம், உடல், மனக்கட்டுப்பாடு தேவை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஒரு ஜிம்னாசியக் கலைஞருக்கு அவ்வளவு பிரசாரம் கிடைப்பதில்லை! அமெரிக்காவில் பேஸ்பால் ஆட்டத்துக்குக் கிடைக்கும் ஆதரவு கூட ஜிம்னாசியக் கலைஞருக்குக் கிட்டுவதில்லை!

அந்த நாளில் கிரேக்க மன்னர்கள் உடல் வாகு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று கூறியதில் பல ஜிம்னாசிய அரங்குகள் தோன்றின.



**நாட்டுப் பற்று**

இந்த மண்ணில் நான் பிறந்தேன்
இதுவே பாக்கியம்.
சொந்த மண்ணைக் காக்க உயிரைத்
துறப்பேன்; நிச்சயம்.

என்றன் மீது தாயைப் போல
அன்பு கொண்டது;
என்னை உயர்த்த இந்த நாடு
யாவும் தந்தது.

காற்றும், நீரும், உணவும் தந்து
கவனமாகவே
நேற்றும், இன்றும், நாளை போதும்
போற்றிக் காப்பது.

எனது மூச்சு, எனது செல்வம்,
எனது உடமைகள்,
இனிமையான இந்தப் பெரிய
மண்ணின் உரிமையே

கடவுளுக்குச் செலுத்துகின்ற
காணிக்கையென
இடமனத்தினோடு தியாகம்
செய்து காட்டுவேன்.

**—புவனா கலைச்செழியன்—**

நவீன காலத்தில் பளு தூக்குதல் தனிக்கலையாகக் கருதப்பட்டாலும் அந்தக் காலத்தில் கிரேக்கர்கள் ஜிம்னாசியத்தோடு பளு தூக்கும் கலையையும் இணைத்தே பார்த்து வந்தனர். கிரேக்க இளைஞர்கள் அந்தக் காலத்தில் ஜிம்னாசிய அரங்குகளில் பல அழகிய பெண்களைச் சந்திக்கும் இடமாக இருந்ததால் இந்த விளையாட்டு பிராபல்யமாயிற்று. அந்த நாளில் கிரேக்க நகரங்களில் ஜிம்னாசிய அரங்கு இல்லாத இடமே இல்லை!

கிரேக்க நாட்டின் மீது ரோமர்கள் படையெடுத்த போது ஜிம்னாசியக் கருத்தை ரோமர்களும் கடைப்பிடித்தனர். ஆனால் 392 கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு ரோம அரசர் தியோடஸிஸ் உடற்பயிற்சிகள் கட்டாயமல்ல என்று அறிவித்தார். ஜிம்னாசிய அரங்குகளும் மூடப்பட்டன. ஆனால் ரோம அறிவாளிகள் அந்த ஜிம்னாசிய அரங்குகளை முழுதும் அடைப்பது தவறு என்று சுட்டிக் காட்டினர். மறுபடியும் ஜிம்னாசியத்துக்குப் புத்துணர்ச்சி பிறந்தது!

அமெரிக்காவில் ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்களே ஜிம்னாசியத்தில் அக்கறை செலுத்தினர். அதனால் அன்னியச் சீமை மக்களே ஜிம்னாசியக் கலையில் தேர்ந்தவர்களாக விளங்கினர்.

1940—ம் வருஷம் கல்லூரியிலும் ஜிம்னாசியக் கலை உட்புகுந்தது. இல்லினாய்ஸ் சர்வகலாசாலை தேசிய ஜிம்னாசியப் போட்டியில் வெற்றிக்கொடி நாட்டியது. பள்ளிகளிலும் இந்தக் கலையைக் கற்கும் ஆர்வம் துளிர்த்தது!

ஹெல்சிங்கி ஒலிம்பிக்குக்கு இருபத்தி மூன்று நாடுகள் தங்கள் ஜிம்னாசியக் கலைஞர்களை அனுப்பி வைத்தது! இந்த ஒலிம்பிக்கில் கிட்டத்தட்ட 183 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

1982 ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் இந்திரபிரஸ்த ஸ்டேடியத்தில் நடைபெற்ற ஜிம்னாசியப் போட்டிகள் தான் ரசிகர்களின் அமோகப் பேராதரவைப் பெற்றன. குளுகுளு அறையில் கண்ணுக்கினிய காட்சியாக அழகிய பெண்கள் உடலை வளைத்து நெளித்து பார் விளையாட்டுக்கள் ஆடியதைக் கண்டு மெய்மறக்காதவர் இல்லை! உடல் வனப்பும், ரப்பரைப் போல் வளையும் தன்மையும் கொண்ட அழகிகளின் அற்புத ஜிம்னாசிய விளையாட்டுக்கள் அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டன.


# பிருந்தாவனம்

## கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் பகுதி

### பை, பை

கீழே உள்ள ஒவ்வொரு சொல்லைப் பார்த்ததும், அதனுடன் தொடர்புடைய — ஆனால், கடைசியில் 'பை' என்று முடியும் சொல் நினைவுக்கு வர வேண்டும். ஒன்பதில் உங்களால் எத்தனை கண்டுபிடிக்க முடிகிறது, பார்க்கலாமா?

1. அமாவாசை,
2. சபரிமலை,
3. கேழ்வரகு,
4. கூளம்,
5. தொந்தி,
6. நாய்,
7. பானம்,
8. நசுக்கல்,
9. ஓர் ஊர்.



விடைகள்: (1) தர்ப்பை, (2) பம்பை, (3) கேப்பை, (4) குப்பை, (5) தொப்பை (6) கோப்பை, (7) கோம்பை, (8) சப்பை, (9) செம்பை.

—எஸ். பாலாஜி, ( ), சென்னை-4



### கொண்டு வந்தது ஏன்?

காலையில் எலிப்பொறி ஒன்றை ஒரு சிறுவன் பக்கத்து வீட்டுக்காரரிடமிருந்து வாங்கிச் சென்றான். சென்ற அரை மணி நேரத்திலே திருப்பிக் கொண்டு வந்தான்.

''இவ்வளவு சீக்கிரம் திருப்பிக் கொண்டு வந்து விட்டாயே! ஒரு இரவு கூட வைத்திருக்கவில்லையே!'' என்று கேட்டார் எலிப் பொறி கொடுத்தவர்.

''எலிப்பொறியைத் திருப்பிக் கொடுக்க நான் வரவில்லை. பொறியில் அகப்பட்டுக் கொண்ட என் விரலை எப்படி எடுப்பது என்று கேட்கத்தான் வந்தேன்'' என்று வேதனையுடன் கூறினான் அந்த அப்பாவிப் பையன்.

—கோ. ஸ்ரீதர் (1128), சேலம்—



### எது? எது? எது?

1. குடிக்க முடியாத 'நீர்' எது?
2. ஒடிக்க முடியாத 'கோல்' எது?
3. படிக்க முடியாத 'எழுத்து' எது?
4. பிடிக்க முடியாத 'தம்' எது?
5. அடிக்க முடியாத 'கை' எது?
6. மடிக்க முடியாத 'டை' எது?

விடை: 1. கண்ணீர் 2. தூண்டுகோல் 3. தலையெழுத்து 4. சத்தம் 5. நம்பிக்கை 6. அரட்டை.

—ஆர். சிவகாமி (3084), திருச்சி-17.

### '33 பல்'

''அதோ மெதுவா நடந்து போகிறாரே, அவருக்கு 33 பல்லு.''

''அதெப்படி?''


''32 பல் + சோம்பல்' = 33.'

—பாலகோவிந்தராஜன், மதுரை—2



# நறுக்குகள்

## நாாாார் காலி





**வார்த்தை ஜாலங்கள்**

—பானுரேகா மொபார்(5079)
புதுச்சேரி-8

**தமிழ்ப் பற்று!**

தமிழ் மேல் மிகுந்த பற்றுடையவர் மகேந்திரன். அதனால்தான் அவர் தன் பெயரின் கடைசியில் உள்ள 'ரன்' என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் கண்டுபிடித்து மாற்றிவைத்துக் கொண்டிருக்கிறார். அப்படியானால், இப்போது அவர் பெயர் மகேந்திரன் அல்ல; மகேந்திஓடு.

—எஸ் அனந்த் (5751)



**கழுதைத் தூக்கம்**

மிருகங்களிலே மிகவும் குறைந்த நேரம் தூங்குவது கழுதைதான்! ஒரு நாளில் 30 நிமிடங்களே தூங்குமாம்!

—எஸ். மாதவன் (204), திருச்சி—14.

**மலையருவி**

சமீபத்தில் நான் ஒரு புத்தகத்தைப் பார்த்தேன். அதன் பெயர் 'மலையருவி'. ஏராளமான தமிழ்நாட்டு நாடோடிப் பாடல்கள் அதில் இருந்தன. இந்தப் பாடல்களையெல்லாம் தேடிப் பிடித்துத் திரட்டியவர் யார் தெரியுமா? ஓர் ஆங்கிலேயர்! சென்னை மாகாணத்தில் பல மாவட்டங்களில் கலெக்டராக இருந்தவர். பெயர் பார்லி மாக்லீன் ஐ.சி.எஸ். பல இடங்களுக்கும் சென்று, அங்கிருந்த மக்களுடன் பேசிப் பழகி, அவர்கள் பாடிய நாடோடிப்பாடல்களை, வரிக்கு இத்தனை அணா என்று பணம் கொடுத்துப் பெற்றாராம்!

—ஏ. எல். ராமு (3674), மதுரை.




**காந்தியின் நகைச்சுவை**

மகாத்மா காந்தி ஒருமுறை, வயலின் மேதை சௌடையா அவர்களின் வயலின் இசையைக் கேட்டார். பிறகு, "சௌடையா அவர்கள் ஒரு பெரிய வயலினிஸ்ட்; நானோ ஒரு சாதாரண நான்வயலினிஸ்ட்," அதாவது அகிம்சை வாதி" என்றார்.

—'சிந்தனைக்கு விருந்து 1000' என்ற நூலிலிருந்து தந்தவர்:
—ந. சண்முகவர்தராஜ் (1348), கோவை—1.






## இணைக்க முடியுமா?

ஒரு சங்கிலியில் தனித்தனியாக 5 பாகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாகத்திலும் மூன்று மூன்று வளையங்கள் உள்ளன. சங்கிலிக்குச்சொந்தக்காரர் அவற்றைக் கொல்லரிடம் கொடுத்து நன்றாக இணைக்கச் சொல்கிறார். கொல்லர் நான்கு முனைகளை வெட்டி ஒன்றாக இணைத்து விடுகிறார். இன்னும் குறைவான முனைகளைக்வெட்டி இணைக்க முடியுமா?

விடை: ஒரு பாகத்தில் உள்ள 3 வளையங்களைத் தனித்தனியாக எடுத்து மற்ற நான்கு பாகங்களின் முனைகளையும் இணைத்து விடலாமே.

—டி. சுமதி (1125), மதுரை—3.



## அந்த எண் அதுதான்!

சைபரைத் தவிர வேறு ஏதாவது ஒற்றைப்படை எண்ஒன்றை நினைத்துக் கொள்ளுங்கள். அதை மூன்றால் பெருக்குங்கள். ஒன்றை அதனுடன் கூட்டுங்கள். திரும்பவும் மூன்றால் பெருக்குங்கள். நீங்கள் முதலில் நினைத்த எண்ணை இப்போது அதனோடு கூட்டுங்கள். அந்த மூன்றை நீக்கி விட்டால் மிஞ்சியிருப்பது நீங்கள் நினைத்த எண்தான்!

—இ. அண்ணா (5531), சென்னை—63.

## லேசான ஆகாரம்

முனியாண்டி ஒரு மக்கு அவன் ஒருநாள் அளவுக்கு மீறி விருந்துச் சாப்பாடு சாப்பிட்டதால், வயிற்று வலி வந்து விட்டது. டாக்டரிடம் சென்றான் அவர் அவனைப் பரிசோதித்து,'' லேசான ஆகாரமாக உட்கொள்'' என்றார்.

முனியாண்டிக்கு அவர் சொன்னது புரியவில்லை. இருந்தாலும் பேசாமல் வீட்டுக்கு வந்தான். ''லேசானது தண்ணீர். அதைவிட அதன் மேல் மிதக்கும் எண்ணெய் லேசானது. எண்ணெயில் மிதக்கும் வடை, முறுக்கு, எல்லாமே அதைவிட லேசானவைதானே!'' என்று நினைத்து, அவற்றையெல்லாம் வாங்கி வயிற்றில் அடைத்தான். பிறகு, அவன் வயிற்று வலி என்ன ஆயிற்று என்று கூறவும் வேண்டுமோ?

—ஏ. ஆர். பிரபா (5561),கோவை.



## மேதாவியின் பதில்!


ஒரு மேதாவி இடது கையிலே பலத்த கட்டுப் போட்டிருந்தார். அவரைப் பார்த்த நண்பர் காரணம் என்னவென்று கேட்டார். ''இயந்திரத்தில் சிக்கிக் கொண்டு இதுமாதிரி ஆகி விட்டது'' என்றார் மேதாவி.

''நல்ல காலம். இடது கையாகப் போயிற்று. வலது கையாக இருந்திருந்தால் உங்களுக்கு எவ்வளவோ நஷ்டமாச்சே!'' என்றார் நண்பர்.

''அது எனக்குத் தெரியாதா? அதனால்தான் கடைசி நேரத்தில் வலது கையைச் சட்டென்று எடுத்துக் கொண்டு இடது கையைக் கொடுத்தேன்'' என்றார் மேதாவி.

—இ. முரளி (3405), மேற்கு தாம்பரம்.





## படங்கள் இல்லாமல் புத்தகங்களா?

கோடை விடுமுறையில் சென்னையிலுள்ள என் தார்த்தா வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கே ஏராளமான சிறுவர் புத்தகங்கள் தமிழில் இருந்தன. ஆனால் நூற்றுக்குத் தொண்ணூறு புத்தகங்களில் உள்ளே ஒரு படம்கூட இல்லை! குஜராத்தியிலும், ஆங்கிலத்திலும் அழகழகான படங்களுடன் வெளிவரும் சிறுவர் புத்தகங்களைப் பார்த்துப் பார்த்து ஆனந்தமடையும் எனக்கு, தமிழ்ப் புத்தகங்கள் இப்படி இருப்பது கண்டு வருத்தமாக இருக்கிறது. படங்கள் போட்டால் விலை அதிகமாகுமாம்; அதற்காகப் படங்களே இல்லாமல் எங்களுக்குப் புத்தகங்கள் வெளியிடுவதா?

—ஏ. பிரபு (641), பரோட்டா.

---




## தினசரி வாழ்வில் உடல் உறுப்புக்கள்

சரியான முடிவு எடுக்கத்திணறும்போது:
ஆற்றிலே ஒரு கால்;
சேற்றிலே ஒரு கால்,
புதிய ஊரில்: வாயில் இருக்கிறது வழி.
துணிந்தவனுக்கு: கடலும் முழங்கால் அளவு.
விஷமி: உச்சி முதல் உள்ளங்கால் வரை.
எது சொன்னாலும் ஏற்காவிடில்: செவிடன் காதில் சங்கு.
சமயத்தில் உதவ: ஒரு கை கொடு.
ஜாக்கிரதையான நண்பனுக்கு: பிடரியில் கண்.

—வே. செந்தில்குமார் (65) திருத்தணி

---



## வேண்டாம் நில்!


காசி அல்வாவைக்
கவர்ச்சியான தட்டில்
அலங்காரமாய்க் கொண்டுவா.
ஆட்சேபம் இல்லை.

மைசூர்ப் போண்டாவை
மயக்குகிற தட்டில்
கொண்டு வந்து வை.
கூட இரண்டு வை.

பேப்பர் மசாலாவைப்
பெரியதொரு தட்டில்
சொகுசாகக் கொண்டுவா.
ஜோராக வையப்பா.

ஆனால்,
வெறும் கையில் கொண்டுநீ
வேகமாய் வருகிறாயே,
வேண்டாம் நில்;
அது என் பில்!

—ஆர். சீதாலட்சுமி(4012), கோவை.



## திருக்குறள் புதிர் - விடை

### புதிர்-23

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (1)

'அ' என்ற எழுத்தில் இருந்தே எல்லா எழுத்துக்களும் தோன்றின. எல்லா எழுத்துக்களுக்கும் முதலில் இருப்பதும் அதுதான். அதைப் போலத் தான் இந்த உலகத்துக்கெல்லாம் முற்பட்டவராகிய இறைவனையே இவ்வுலகம் முதலாகக் கொண்டிருக்கிறது.


### புதிர்-24

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் (66)

குழல் ஓசை இனியதுதான். யாழ் இசையும் இனியதுதான். ஆயினும் பெற்ற குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டு இன்புறாதவர்கள் தான் குழலோசையையும், யாழ் இசையையும் இனிமையானவை என்று கூறுவார்கள்.


# விந்தை உலகம்

ஓவியர்கள் வரைவதற்காக உபயோகிக்கும் மையை 'இந்தியன் இங்க்' என்று சொல்லுகிறார்கள். உண்மையில் இது இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது அல்ல. சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இன்னமும் பிரான்ஸில் இதனை 'சைனா இங்க்' என்றே அழைக்கிறார்கள்.





'கெமிலியான் ஆர்சிட்' மெக்ஸிகோ நாட்டில் மட்டுமே உள்ள பூ. இந்தப் பூ காலை. மாலை. இரவு ஆகிய நேரங்களில் நிறம் மாறும் தன்மை கொண்ட ஒரு பச்சோந்தி பூ.



ஜாவா மலேசியத் தீவுகளில் ஒரு வகைப் பறக்கும் பாம்புகள் இருக்கின்றன. இவைகள் தட்டையாக ரிப்பனைப் போல இருப்பதால் மரத்திற்கு மரம் சுழன்று கொண்டே பறக்கின்றன.

— செந்தமிழ்ச்செல்வன் —



ஆப்பிரிக்காவில் 'நகடா' என்ற காட்டு இன மக்கள் தங்களில் யாராவது இறந்து விட்டால் இறந்து போனவனைப் போல எட்டு அடி உயரமுள்ள மரச்சிலையை உருவாக்கி. அச்சிலையின் உள்ளே ஓர் இடைவெளியை உண்டாக்கி அந்த இடைவெளியில் பிணத்தை வைத்துப் புதைத்து விடுவார்கள்.

# நல் விருந்து



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

அறுபத்து மூன்று சிவனடியார்களைப் பற்றிக் கூறுவது பெரிய புராணம். அச்சிவனடியார்கள் நாயன்மார்கள் என்று அழைக்கப்பட்டனர்.

இளையான்குடி மாற நாயனார் அந்த அறுபத்து மூவரில் ஒருவர். பாண்டிய நாட்டில் உள்ள இளையான்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்.

அவர் அதிகாலையில் எழுந்து நாட்கடன்களை முடிப்பார். நதியில் நீராடுவார். 'நமசிவாய' என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே மலர்களைப் பறிப்பார். வீட்டுக்கு வந்து கிரமமான முறையில் சிவபூஜை செய்வார். கற்பரசியான அவர் மனைவியார் அவருக்கு எல்லா விதத்திலும் உதவி செய்வார்.

இருவரும் இல்லற தர்மத்தைக் கடைப்பிடித்து வந்தனர். எவர் வந்து உணவு கேட்டாலும், உடனே உணவு வழங்குவார்கள். பிறருக்கு உணவிட்ட பிறகுதான் அவர்கள் உணவு உண்பார்கள். இரவு பகல் எந்த நேரமானாலும் உணவு என்று கேட்டு வந்தவர்களுக்கு மனம் கோணாமல் முகம் சுழிக்காமல் உணவிடுவார்கள்.

இவர்களுடைய பக்தியை உலகுக்குக் காட்டச் சிவபெருமான் விரும்பினார். ஒருநாள் இரவு மழை பெய்து கொண்டு இருந்தது. சிவபெருமான் துறவி போல வேடம் தாங்கினார். நேராக மாற நாயனார் வீட்டிற்குச் சென்றார். தமக்குப் பசிப்பதாகவும் உணவிடுமாறும் அவர் நாயனாரை வேண்டினார்.

மாற நாயனார் மகிழ்ச்சியுடன் வீட்டிற்குள் சென்றார். மனைவியிடம் உணவு சமைக்குமாறு சொன்னார். மனைவி கையைப் பிசைந்தார். வீட்டில் ஒரு மணி அரிசிகூட இல்லை. இருந்த நெல்லையும் அன்று காலை வயலில் விதைத்து விட்டார் மாறன். இருவரும் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தனர்.

மாற நாயனாருக்கு ஒரு யோசனை தோன்றியது. காலையில் வயலில் விதைத்த நெல்லை எடுத்துவந்து அரிசியாகக் குத்த நினைத்தார். வந்த துறவிக்குத் தெரியாமல் வீட்டின் பின்புறமாகச் சென்றார். இறைவன் கருணை





யால் மழை அதிகமாகப் பெய்யத் தொடங்கியது. அத்தனை கஷ்டத்திலும் மாறநாயனார் மனம் தளராமல் வயலுக்குச் சென்றார். மிகுந்த சிரமப்பட்டு ஒவ்வொரு நெல்லாகப் பொறுக்கினார். வீட்டுக்கு வந்தார். நெல்லை மனைவியிடம் கொடுத்தார்.

மனைவியார் நெல்லைக் குத்தி அரிசியாக்கினார். உணவு சமைத்துக் கணவருக்கு அறிவித்தார்.

மாற நாயனார் துறவியாக வந்த இறைவனை அழைத்தார். இலை போட்டு உணவு பரிமாறப்பட்டது. இறைவனான துறவி திடீரென்று மறைந்துவிட்டார்! நாயனாரும் அவரது மனைவியும் மனம் கலங்கினார்கள். ஏதாவது தவறு ந்கழ்ந்து விட்டதா என்று தவித்தார்கள்.

சிவபெருமான் ரிஷப வாகனத்தில் உமா தேவியாருடன் காட்சி அளித்து அவ்விருவருக்கும் மோட்சம் கொடுத்தார்.

குறள் வாக்கு:

செல்விருந்து ஓம்பி வருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

# மின்மினிக் கதைகள்



## பெண் கேட்ட சிங்கம்



காட்டிலே, விறகு வெட்டிக் கொண்டிருந்தான் ஓர் ஏழைக் குடியானவன். அப்போது, அவ்வழியாக வந்த சிங்கம் அவனைப் பார்த்து விட்டது. உடனே ஓடிவந்து அவன் மீது பாயப் போனது.

அப்போது அந்த விறகுவெட்டி, ''மிருக ராஜனே. எனக்கு மனைவி இல்லை. ஒரே ஒரு மகள்தான் இருக்கிறாள். அவளுக்குத் திருமணம் செய்த பிறகு, நானே உன்னைத் தேடி வருகிறேன். அப்போது என்னை அடித்துச் சாப்பிடு. இப்போது விட்டுவிடு'' என்று கெஞ்சினான்.

''அப்படியா! சரி, உன் மகளை எனக்கே திருமணம் செய்து கொடுத்து விடு'' என்றது சிங்கம்.

''ஆஹா! அப்படியே செய்கிறேன். ஆனால் ஒன்று... என் மகள் மிகப் பயந்தவள். உங்களுடைய கூர்மையான பற்களையும், குத்திக் கிழிக்கும் நகங்களையும் கண்டால் நடுநடுங்குவாளே! ஆகையால்...?'

''ஆகையால் என்ன? இப்போதே என் நகங்களையும் பற்களையும் அகற்றிவிடு.''

உடனே விறகுவெட்டி கோடரியால் கால் நகங்களையும், பற்களையும் அகற்றினான். சிங்கத்தால் வலி தாங்க முடியவில்லை. ஆனாலும் வெளியில் சொல்லவில்லை.

பிறகு, சிங்கராஜனை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றான் விறகுவெட்டி. வாசலில் நிற்க வைத்துவிட்டு, உள்ளே சென்றான். வெளியில் வரும்போது அவன், மகளை அழைத்து வரவில்லை. கையிலே ஒரு கனத்த உலக்கையுடன் வந்தான்.

''என் மகளா உனக்கு வேண்டும்? இதோ உன் மண்டையைப் பிளக்கிறேன் பார்'' என்று கூறி உலக்கையை ஓங்கினான். பல்லும் நகமும் போன பிறகு, சிங்கத்தால் என்ன செய்ய முடியும்? உலக்கைக்குப் பயந்து ஓட்டம் பிடிக்க நு

## கழுகும் காக்கையும்



காட்டிலே செம்மறி ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அப்போது ஒரு கழுகு வேகமாகக் கீழ் நோக்கிப் பாய்ந்தது. ஒரு சிறிய ஆட்டுக் குட்டியைத் தூக்கிக்கொண்டு பறந்து போனது. அதைப் பார்த்தது ஒரு காகம்.

''இந்தக் கழுகு சின்னஞ்சிறிய ஆட்டைத் தானே தூக்கியது! நான் போய் ஒரு கொழுத்த ஆட்டைத் தூக்கி வரப் போகிறேன்'' என்று கூறிப் பறந்து சென்றது. நன்கு கொழுத்திருந்த ஓர் ஆட்டின் முதுகில் போய் உட்கார்ந்து அதைத் தூக்க முயன்றது. முடியவில்லை. அதன் முதுகிலுள்ள மயிர்களைக் காலால் நன்கு முறுக்கியது. பிறகு மூச்சை அடக்கித் தூக்கப் பார்த்தது. அவ்வளவு பெரிய ஆட்டை அதனால் அசைக்கக்கூட முடியவில்லை! வெகுநேரம் முயன்று களைத்துப் போனது. ''சரி, ஆடு வேண்டாம். பறந்து போகலாம்'' என்று நினைத்துப் பறக்க முயன்றது. கால்கள் சிக்கிக் கொண்டதால் பறக்க முடியவில்லை. சிறகுகளைப் படபடவென்று அடித்தது; பயனில்லை.

இதற்குள் ஆட்டுக்காரன் அங்கே வந்துவிட்டான். அவன் காக்கையைச் சிரமப்பட்டு வெளியில் எடுத்து அதன் இறக்கைகளை ஒட்ட வெட்டினான். பிறகு வீட்டுக்குக் கொண்டு சென்றான்.

''அப்பா, இது என்ன பறவையப்பா?'' என்று அவனுடைய குழந்தை ஆச்சரியத்துடன் கேட்டது.

''கழுகு என்று நினைத்துக் கொண்ட காக்கை தாண்டா மகனே!'' என்றான் அவன்.

## பையனின் கேள்வி



சந்தை கூடும் இடத்திலே, சாலை ஓரத்திலே ஒரு சோதிடர் உட்கார்ந்திருந்தார். வருவோர் போவோருக்கெல்லாம் அவர் சோதிடம் பார்த்துக் கூறிக் கொண்டிருந்தார்.

''அதிர்ஷ்டப் பரிசு கிடைக்குமா?'' ''ஆண் குழந்தை பிறக்குமா?'' ''வழக்கு வெற்றி அடையுமா?'', ''மனத்தில் கவலை நீங்குமா?''

—இப்படிப் பல வகையான கேள்விகளுக்கும் அவர் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்போது, அங்கு வேகமாக ஓடி வந்தான் ஒரு சிறுவன், ''ஐயா, சோதிடரே, தீ! தீ! உங்கள் வீடு தீப்பிடித்து எரிகிறது!'' என்று கதறினான்.


உடனே சோதிடர் சுற்றியிருந்த கும்பலைத் தள்ளிக் கொண்டு அலறியவாறு வீடு நோக்கி ஓடினார். மற்றவர்களும் அவர் பின்னாலே ஓடினார்கள்.

வீட்டை நெருங்கினால், அங்கே புகையுமில்லை; தீயுமில்லை. வீடு பத்திரமாக இருந்தது. உடனே, தகவல் கொடுத்த பையனைப் பிடித்து, ''ஏண்டா, இப்படிப் புரளி செய்தாய்?'' என்று மிரட்டிக் கேட்டார்.

''நாட்டுக்கெல்லாம் சோதிடம் பார்ப்பதாகச் சொல்கிறீர்களே, உங்கள் வீட்டிலே தீ என்றதும் ஏன் இப்படி விழுந்தடித்து ஓடிவந்தீர்கள்? எந்த

விஷயம் நடந்தாலும் எனக்குத் தெரியும் என்கிறீர்களே! உங்கள் சொந்த விஷயம் அறிந்திடச் சோதிடத்தால் முடிந்ததா?'' என்று கேட்டான் சிறுவன்.

இதைக் கேட்ட அனைவரும் கைகொட்டிச் சிரித்தார்கள்.



## ஜாதி நாய்

உயர்ந்த ஜாதிநாய் ஒன்று தெருவிலே தன் குட்டியுடன் சென்று கொண்டிருந்தது. அப்போது தெருவின் ஓரமாக நின்ற சொறி நாய்களும் வெறி நாய்களும், அந்தக் குட்டியைப் பார்த்துக் குரைத்தன.

ஆனால், ஜாதிநாய் தலைநிமிர்ந்தபடி நடந்து சென்றது. அந்த நாய்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை!

அதைப் பார்த்த ஜாதிநாயின் குட்டி, ''அப்பா, நம்மை உயர்ந்த ஜாதி என்கிறார்கள். ஆனாலும் இந்த வெறிநாய்களும் சொறிநாய்களும் என்னைப் பார்த்துக் குரைக்கும்போது நீங்கள் சும்மா இருக்கிறீர்களே! உடனே இவற்றைக் கடித்துக் குதறிக் கொல்ல வேண்டாமா?'' என்று கேட்டது.

''மகனே, இவைகளெல்லாம் மிகவும் கோழைகள். இப்படிக் குரைக்கத்தான் தெரியும். இந்த மாதிரிச் சொறி நாய்களும் வெறி நாய்களும் இருப்பதால்தானே நம்மை 'உயர்ந்த ஜாதி' நாய் என்கிறார்கள்? ஒன்றுடன் இன்னொன்று இருந்தால் தானே உயர்ந்தது எது என்று தெரிந்து கொள்ள முடியும்? ஆகையால் இவற்றை நாம் ஒன்றும் செய்யக் கூடாது. இவை நீடூழி வாழட்டும்'' என்று கூறிக்கொண்டே நடந்தது அப்பா நாய்.



## கூண்டிலே அடிமை

கூண்டிலே அடைபட்டிருந்த ஒரு பெண் புறா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. காரணம், அதற்கு நான்கு குஞ்சுகள் பிறந்திருந்தன. அப்போது அந்த வழியாகப் பறந்து சென்ற ஒரு காக்கை கூண்டின் அருகிலே வந்து உட்கார்ந்தது. அதனிடத்தில் புறா மிகுந்த மகிழ்ச்சியோடு சொன்னது: ''இது வரை நான் மட்டுமே இருந்தேன். இப்போது என் குஞ்சுகளைச் சேர்த்து ஐவராக இருக்கிறோம். என் குடும்பம் வளர்ந்திருக்கிறது!''

இப்படிப் பெருமையாகக் கூறிக் கொண்டிருந்த புறாவைப் பார்த்துக் காக்கை சிரித்தது. ''அட, புத்தி கெட்ட புறாவே, உனக்குப் பிறந்திருக்கிற பிள்ளைகளை நினைத்து நினைத்து நீ பெருமைப்படுகிறாயே! இதில் என்ன பெருமை இருக்கிறது? நீயோ கூண்டில் அடைபட்டு அடிமையாய் இருக்கிறாய். உனக்குப் பிறந்திருக்கும் பிள்ளைகளும் உன்னைப் போல் அடிமைகள்தானே! இந்தக் கூண்டிலே வளர்கின்ற குடும்பம், அடிமை வாழ்வை வளர்க்கின்ற குடும்பமல்லவா? இதை நீ உணரவில்லையே!'' என்று கூறிவிட்டுப் பறந்து சென்றது.

—கருத்து: ஈசாப்.



# கப்பல் ஓட்டினர்

இரா. சுராஜ்



கப்பல் ஓட்டினர் வ. உ. சி
கடலைத் தாண்டினர்.
எப்பொழுதும் சொந்த நாட்டை
எண்ணி உருகினர்!

சிப்பி ஏந்தினர்; சிறையில்
செக்கைத் தள்ளினர்.
அப்பொழுதும் இந்த நாட்டின்
ஆசை பெருக்கினர்!

கல் உடைத்திடும் கையால்
கவிதை எழுதினர்.
நல்ல தமிழையே வளர்க்க
நாளும் உதவினர்!

• • •

சிதம்பரனார் பெயரை என்றும்
சிந்தை செய்குவோம்.
சுதந்திரத்தைப் பாதுகாக்க
விரதம் பூணுவோம்!

# நாட்டை ஆளப் போகிறேன்!

பழையனூர் மா. கணபதி



நாட்டை ஆளப் போகிறேன் — நல்
ஆட்சி செய்யப் போகிறேன்.
கோட்டை கட்டி ஏழையை — அதில்
குடியமர்த்தப் போகிறேன்!

படிக்க வைக்கப் போகிறேன் — யாவரும்
படித்து முடித்த உடனடியே
பதவி அளிக்கப் போகிறேன் — இந்தப்
பாரை உயர்த்தப் போகிறேன்!

நல்ல திட்டம் பலப்பல — நான்
நயமாய்த் திட்டப் போகிறேன்.
வேலையில்லாத்திண் டாட்டம் — அதை
விரைவில் ஒழிக்கப் போகிறேன்!

வறுமையின்றி மக்களை — என்றும்
வாழவைக்கப் போகிறேன்.
தொண்டு செய்யப் பிறந்திட்டேன்
— நல்லவை
தொடர்ந்தே செய்வேன் உறுதியே!

# பசுவம்மா

பல்லவன்



பிறந்தேன் அந்நாள் முதலாக — மடி
சுரந்தே எனக்குப் பாலூட்டிப்
பரிந்து வளர்த்த தாயவளாம் — நற்
பசுவாம் எனது தாயவளாம்!

அரிசி களைந்த நீர்தந்தேன் — பசுவே
அமுதைப் பொழிந்து நீதந்தாய்!
சிறுகட்டுப் புல் தந்தேன் — உன்
செந்நீர் மாற்றிப் பால் தந்தாய்!

எம்மா நிலத்தில் இருந்தாலும் — நீ
எங்கள் தமிழை மறவாமல்
அம்மா என்னும் போதினிலே — பால்
அருவி பாயும் காதினிலே!

கள்ளம் அறியாத் தாய்ப்பசுவே! — நன்றி
கூறும் என்றன் வாய்ப்பசுவே!
உள்ளம் பால்போல் உனக்குண்டு —
உண்மை
உனக்கும் எனக்கும் உறவுண்டு!




# சுவை மண்டலத்தில் சுகமான பயணம்!

**கார்டூன் மில்க் பிஸ்கெட்ஸ்**
**சுவையும் ஊட்டமும் நிறைந்த பாலமுதம்.**
சுவைத்துப் பாருங்கள். மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்.






**இந்தியன் ஃபுட்ஸ்**
பிரைவேட் லிமிடெட்
'ரிவர்சைட்', திருப்புவனம் 623611


**கார்டூன் மில்க் பிஸ்கெட்ஸ்—**
**பிஸ்கெட் உலகின் புதிய கவிதை!**

தமிழ் நாடெங்கும் கிடைக்கும். விற்பனையாளர்கள் இல்லாத இடங்களில் விற்பனையாளர்கள் தேவை.

ADWAVE IF 2046

# மாலியும் ஜூலியும் 4

கருத்து: எம்.ஆர்.ராஜன்





# கருணை விழிகள்

ஆர். பொன்னம்மாள்

## 6

அம்மா. 'பாபு,' 'பாபு'ன்னு அலறியதைக் கூறியதும், "பின்னே இருக்காதா... ஒரே பையன்... ஆமாம். அந்த லாரி டிரைவரைப்பிடிச்சுட்டாங்களா?'' என்று கேட்டான் மோகன்.

''அவன் அகப்படுவானா... ஆக்ஸிடெண்ட் ஆன உடனேயே ஓடிட்டான். பாபுவோட மாமா அங்கேயே செத்துட்டாரு... பாபுவுக்குக் கண்ணு போயிடுச்சு... மோட்டார்பைக்கே அக்கு வேறே ஆணி வேறேயா சிதைஞ்சு கிடந்தாம்!''

''எனக்குக்கூடப் பார்க்க வரணுமின்னு எண்ணம்தான். ஆனால் ராமபத்ரன் என்ன மனநிலையிலே இருக்காரோ? அந்தப் பையன் ஒரு மாதிரின்னு அன்னிக்கே சொன்னாரா...''

''வேண்டாம் மோகன்... நமக்குப் பையனைத் தெரியாது... அவங்க முகத்துக்காகத்தான் போகணும். பொண்ணு நல்ல குணம். அவங்க அம்மா, அப்பாவைப் போல... ஆமாம்... பையன் எப்படிப் பரீட்சை எழுதுவான்...? இந்த வருஷம் வீணாப் போயிடும், இல்லே?''

''நீ என்னப்பா... கண்ணே போயிட்டதுன்னு இடிஞ்சு கிடக்கிறப்போ பரீட்சையாவது! வீடே எரியுதாம்!... இவன் மெழுகுவர்த்தி விளையாடுமேன்னு கவலைப்படறான்... சரி, நேரமாச்சு.... நாளைக்குப் பார்க்கலாம்... வரட்டுமா?''

• • •

''மிஸ்டர் ராமபத்ரன், உடம்பிலே கூனல் இருந்தா நிமிர்த்தலாம். இவனுக்கு மனக்கூனல். நாம எவ்வளவுதான் மருந்து கொடுத்தாலும், தனக்குக் குணமாகணுங்கற ஆர்வமும், குணமாகுங்கற நம்பிக்கையும் இவனுக்கு இருக்கணும். நிச்சயம் கால் முன்னைப் போல நடக்க முடியும். பிளாஸ்டர் போட்டு பாண்டேஜ் கட்டியிருக்கேன்... மெதுவா கட்டையை ஊன்றிண்டு நடந்து பழகணும்... பயிற்சியில்லாட்டி எலும்பு விறைச்சுக்கும். மனசு உற்சாகமா இருக்கணும்''

பாபுவைச் சோதித்துவிட்டு வெளியே வந்து வராந்தாவில் நின்றபடி பேசிக் கொண்டிருந்தார் டாக்டர், ஸ்ரீநிவாசன். அவர் ராமபத்ரனின் குடும்ப டாக்டர்.

பம்பாயில் விபத்து நடந்ததென்று தந்தி வந்ததும் ராமபத்ரன் குடும்பத்தினர் உடனே போய்ப் பாபுவை மருத்துவ மனையில் சேர்த்தார்கள். ஆரம்ப வேகங்கள் முடிந்த பிறகு — அவசர நிலை சற்றே குறைந்த பிறகு — ராமபத்ரன் பாபுவை வெகு பாதுகாப்பாகச் சென்னை அழைத்து வந்தார். கண்களும் போய், கால் எலும்பும் முறிந்ததும் இயற்கையிலேயே முரடனான பாபு, மூர்க்கனாகவே மாறி இருந்தான்!


வேளைக்குச் சாப்பிடுவதில்லை. உணவு கொண்டு போனவர்கள் மேல் — அது தாயாயிருந்தாலும் சரி — கையில் கிடைப்பதைவிட்டெறிந்தான். ''என்னைச் சாக விடுங்களேன்... வலி தாங்க முடியவில்லையே!'' என்று சதா கத்தல். பிள்ளையின் உடல்நிலை ஒருபக்கம். அவன் படுத்துகிற பாடு மறுபக்கமாக ராமபத்ரன் தம்பதிகள் மறுகினர்.

எத்தனே நாள்தான் ஊசி போட்டுத் தூங்க வைப்பது? பணிப்பெண்கள் நெருங்கவே பயந்தனர்.

ஒரு நர்ஸின் முகத்திலே டம்ளரை விட்டெறிந்து ரத்தக் காயம்! அவள் சொல்லாமலே நின்று கொண்டாள்.

டாக்டர் யோசித்தார்.

''ஆங், ஓர் வழி இருக்கு, ராமபத்ரன். எங்க ஆஸ்பத்திரியிலே ஒரு பையன்...கிட்டத்தட்ட பாபு வயசு தான் இருக்கும்... என்ன பொறுமை..!



புத்திசாலித்தனம்! ஞாயிற்றுக்கிழமை தோறும் காலையிலே வந்த எல்லா நோயாளிகளுக்கும் விபூதி, குங்குமப் பிரசாதம் கொடுத்து ஆறுதல் சொல்லுவான். திருஞான சம்பந்தர், குமரகுரு

பரர் மாதிரி... ரொம்ப தேஜஸ்.... சின்னச் சின்ன வேடிக்கைக் கதைகள் சொல்லி உம்முணாமூஞ்சியைக்கூடச் சிரிக்க வைச்சுடுவான்! இத்தனையும் எப்போ எப்படிப் படிச்சானோ....!

''சொந்தக்காரங்க வரவைவிட இவன் வருகிறதை நோயாளிங்க எவ்வளவு ஆசையா எதிர்பார்ப்பாங்க, தெரியுமா? ஒரு வாரம் அவன் வராட்டி எவ்வளவு கேள்வி, எத்தனை கோபம்? அவன் ரொம்ப அன்பா அமைதியா, நிதானமா நடந்துக்கு வான்.

''என்னடா, இதையெல்லாம் சொல்லி ஒரேயடியா அந்தப் பைய னுடைய பெருமையைப் புகழுகிறு னேன்னு பார்க்கிறீங்களா? பையன் குணத்தை நீங்க சரியாப் புரிஞ்சிக்க ணுங்கறதுக்காகத்தான் சொன்னேன்! அவன் பிறர் உதவியை எதிர்பார்க்கவே மாட்டான். சொந்தக் காலிலே நிற்க ஆசைப்படுகிறன்.''

டாக்டர் நிறுத்தியதும் ராமபத்ரன் கேட்டார்.

''நீங்க சொல்றது புரியுது. அந்தப் பையன் நமக்கு உதவுவாளு? அவன் மனசு நோக நாங்க யாரும் நடக்க மாட்டோம். கௌரவமா நடத்த லாம்... ஆனல், பாபுவின் துஷ்டத் தனத்தை அவனல் சமாளிக்க முடி யுமா?''

''நோயாளிங்க எத்தனை எரிஞ்சு விழுந்தாலும் முகம் சுளிக்காத பையன் அவன்... ஒரு ஞாயிற்றுக்கிழமை, அவன் ஒரு நோயாளியிடத்திலே விபூதியைக் கொடுத்தநம். அவர்



**பையன் செய்த வேலே!**

**"உங்க பையனுக்கு முந்தாநாள் காய்ச்சல்னு சொன்னீங்க. இன்னிக்குத் தொண்டையிலே ஆபரேஷன்னு கேள்விப்பட்டேனே!"**

**"ஆமாங்க. முந்தாநாள் டாக்டர் அவன் வாயிலே வச்ச தர்மாமீட்டரைக் கடிச்சுத்தின்னு தொலேச்சிட்டான்!"**

-டி. எல். ரெட்டி

'இந்தச் சாம்பலிலேதான் குணமாகப் போகுதா? எத்தனை டாக்டர்கள், எத்தனை வகை ஊசிகள்! எல்லாத் துக்கும், பெப்பெப்பேங்குது... இதைக் கொண்டு வந்து நீட்டுறியே'னு அவன் முகத்துலே விட்டெறியாத குறையாக வீசி எறிஞ்சாரு.

உடனே அவன் சிரித்துக்கொண்டே அவரைப் பார்த்து, ''ஐயா, அந்த ஊசியையும், மருந்தையும் மனுஷன் கண்டுபிடிச்சான். மனுஷனே உருவாக் கின கடவுள்கிட்டே மன்றாடினு நிச்ச யம் பலன் கிடைக்கும். பத்து மாசம் கழிச்சுக் குழந்தை பிறக்கும்னு சொல்ற நமக்கு மரணம் எப்ப வருமென்று சொல்ல முடிகிறதா? ஏழாம் நம்பர் கான்ஸர் நோயாளி மூணு மாசத்திலே செத்துடுவாருன்னு டாக்டர் சொன் ஞரு. அவர் சொல்லி ஏழு மாச மாச்சு. அவரென்ன ஆண்டவஞ?'' இப்படிச் சொன்னதைக் கேட்டு நான் அசந்துட்டேன்.''

இப்படி டாக்டர் சொன்னதையெல் லாம் கேட்கக் கேட்க ராமபத்ரனுக்கு எப்படியாவது அந்தப் பையனை அழைத்து வந்து விட வேண்டுமென்ற ஆசை மிகுந்தது.

''சரி! பையனை எப்ப அழைச்சிண்டு வரீங்க?'' என்று கேட்டார்.

''நாளைக்கு என்னுடன் பையன் வரு வான்'' ராமபத்ரன் டாக்டரை வழி அனுப்பிவிட்டு வந்தார்.

''எங்கே போறேும்?''

''போன உடனே தெரிஞ்சுக்கோ.'' மோகனுக்கு எல்லாம் மர்மமாக இருந் தது. டாக்டர் திடீரென்று வந்தார்.

நேற்று பாட்டியிடம், ''மோகனை ஒரு இடத்துக்குக் கூட்டிண்டு போறேன். நேரமானால் கவப்படாதீங்கோ. நாளைக்கு பீச்சிலே கடைவேண்டாம். அப்புறம் 'பருப்பு ஊற வைச்சுட்டேனே'ங்காதீங்கோ'' என்று சொல்லி விட்டுப் போனார். காலையிலே வந்து 'ஏறுடா'ன்னார். ''பாட்டிக்குச் சமையலுக்கு எல்லாம் இருக்கா''ன்னார். எல்லாம் விசித்திரமாயிருக்கு! என்னவாயிருக்கும்...! எதற்குக் குழப்பம்.... போனால் தெரிகிறது என்று பொறுமையாயிருந்தான். காரில் வரும்போதே பாபுவின் நிலையை விளக்கினார் டாக்டர்.

கார் போர்டிகோவில் நின்றது. 'இது ராமபத்ரன் சார் வீடாச்சே.... இங்கே என்ன வேலை?' அதற்குள் கார் சப்தம் கேட்டு ராமபத்ரனே வந்து விட்டார்.

மோகன் இறங்கினான்.

''நீ, நீ... உன் பேர் மதன்... இல்லியா... கபாலி கூட,'' நெற்றியில் தட்டிக் கொண்டார் ராமபத்ரன்.

''இவனை உங்களுக்கு முன்னாலேயே தெரியுமா? சரியாப் போச்சு... இவன் பேர் மதன் இல்லே, மோகன்'' டாக்டர் ஆச்சரியத்துடன் திருத்தினார்.

''ஆங், மோகன்... நேத்திக்குப் பேரைக் கேட்க மறந்துட்டேன்..... பேரைக் கேட்டா மட்டும் யூகிச்சுடுவேனா... எத்தனை மோகனோ... இவன் ரொம்ப நல்ல பையன். அப்புறம் நான் சந்திச்ச விஷயத்தை விளக்கறேன்... பாபுவைப் பத்தி விவரமாச் சொல்லிட்டீங்களா?''


டாக்டர் தலை அசைத்தார். ''சார், கபாலி உங்க பையனுக்கு அடிபட்ட விஷயத்தைச் சொன்னான். நீங்க பம்பாயிலிருந்து திரும்பிய உடனேயே வந்து பார்க்கலாமின்னுதான் இருந்தேன். நீங்க தொழிலாளர்களையே வர வேண்டாம்னு சொல்லிட்டீங்களாம்.''

**'எல்' போர்டு!**

**''ஏன்டா உன் சின்னத் தம்பி கழுத்திலே 'எல்' போர்டு மாட்டிக்கிட்டுப் போறான்?''**

**''இப்பத்தானே பள்ளிக் கூடத்திலே சேர்ந்துபடிக்கப்பழகுகிறான், அதனாலே தான்''**

**-கீழை அ. கதிர்வேல்**



''அதான் இப்போ வந்துட்டியே... வா, மாடிக்குப் போகலாம்...'' ராமபத்ரன் பின்னால் டாக்டரும் மோகனும் தொடர்ந்தனர்.

உடம்பைத் துடைத்து விட வைத்திருந்த நீரைக் கையால் தள்ளிமெத்தையெல்லாம் நனைத்திருந்தான் பாபு. தரையெல்லாம் கசகசவென்று கால் வைக்க முடியாதபடி ஈரம். நர்ஸின் உடை பாதி நனைந்திருந்தது. வேலைக்காரி துடைத்துக் கொண்டிருந்தாள். உடையெல்லாம் நனைந்தும் பாபு எழுந்திருக்க முடியாதென்று கத்திக் கொண்டிருந்தான்.

''டாக்டரய்யாவும், அப்பாவும் வராங்க... கூச்சல் போடாமல் இரு. அப்புறம் கோவிச்சுக்குவாங்க'' நர்ஸ் தாழ்ந்த குரலில் மிரட்ட, 'ஐயோ, எனக்கு ஊசி வேண்டாம்... நான் போட்டுக்க மாட்டேன்'' கத்திக் கொண்டே எழுந்து கட்டுப்போட்ட காலைச் சிரமத்துடன் ஊன்றி ஓட ஆரம்பிக்கவும், டாக்டர் இரண்டெட்டில் விரைந்து சென்று அவனைப் பிடித்து அழுத்திக் கட்டிலில் அமர்த்தினார்.

''பாபு, பேசாமல் இரு....டா இதென்ன அட்டகாசம்! ஊசிவேண்டாம்... அதுக்காக இப்படிக் காலை அசைச்சா கால் மறுபடி முறிஞ்சிடும். இல்லே கோணலாகிடும்'' டாக்டர் பயமுறுத்தி அடக்கினார்.

''ஒழுங்கா இருந்தால் மட்டும் சரியாப் போயிடப் போறதா? நான் இனிமே நொண்டிதான்! உலகத்திலே எதையும் ரசிக்க முடியாத குருடு

தான்...'' இயலாமையால் அழும் குரலில் குமுறினன் பாபு.

''இவன்தான்... பார்த்தாயா?'' என்று அர்த்தம் தொனிக்க மோகனைப் பார்த்தார் ராமபத்ரன்.

பாபுவை டாக்டர் கட்டிலில் உட்கார்த்தி வைத்ததும், ''இவனு... இவனுக்கா... இவன் பெயர் வாசு இல்லையா!'' — அடித்து வைத்த சிலையாய் அப்படியே நின்று விட்டான் மோகன்.

அந்தப் பிரமிப்பை ராமபத்ரன் தவருகக் கணித்தார்.

''சின்னப் பையன்தானே! எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற பயம் வந்திருக்கும்! குருவி தலையில் பனங்காயை வைத்தது போல இது பெரும் சுமைதான்... டாக்டர் என்னவோ.'' இந்த ரீதியில் அவர் சிந்தனை சென்றது.

மிக மெல்லிய குரலில் ''கொஞ்சம் கீழே போவோம் சார்'' என்றுன் மோகன். அதேசமயம் டாக்டரும் இவர்களைப் பார்க்க, ராமபத்ரன் சைகையால் கீழே போவதைத் தெரிவித்தார்.

● ● ●

''அவன் பெயர் வாசு இல்லியா?'' எடுத்த எடுப்பில் மோகன் கேட்ட முதல் கேள்வியே இதுதான்!

'ஏன், உனக்கு வாசுவை முன்னுலேயே தெரியுமா?'' பதில் வினைத் தொடுத்தார் ராமபத்ரன்.

இந்தச் சமயம் உள்ளேயிருந்து பாபுவின் அம்மா ஜானகியும் மாடியிலிருந்து டாக்டரும் வந்தனர்.



**படிக்க வழி!**

"ஏண்டா உனக்குச் சரியாப் படிக்கவே தெரியல்லியே, நீ என்ன செய்யப் போகிறய்."

"அப்பாகிட்டே சொல்லி, கண்ணடி போட்டுக்கிறேன் சார்."

-ஆர். பி. ராஜ்

''அவன் ஏழாம் வகுப்பு படிக்கிறன் இல்லையா?''

''ஆமாம்.''

''ஏன் அவனை பாபுன்னு கூப்பிடறீங்க?'' ஜானகி முந்திக் கொண்டு பதில் சொன்னள்.

''எங்க மாமனர் பேர் வாசுதேவாச்சாரியார். போன வருஷம்தான் அவர் தவறிப் போனர். அதுவரை எங்ககூடத்தான் இருந்தார். தலையிலடிச்சாப் போல அவர் பேரைச் சொல்லிக் கூப்பிட வேண்டாம்னு 'பாபு'ன்னு செல்லமாக் கூப்பிடறோம். பள்ளிக்கூடத்திலும், நண்பர்கள் மத்தியிலும் தான் அவன் வாசு...''

''என்ன விஷயம்?'' இது டாக்டர்.

''ஒண்ணுமில்லே சார். நான்போன வருஷம் வாசுவோட படிச்சேன். அவனுக்கு என்னைக் கண்டால்ஆகாது. ஒரு வருஷப் பழக்கம் தான். ஆனலும், என்ன காரணத்தாலோ என்னை வெறுப்பான். இப்போ என் குரலைக் கேட்டால் அடையாளம் தெரிஞ்சுக்குவானேன்னு யோசிச்சேன்... அதான்.. ஆங்.. என் பேரை மோகன்னு யாரும் கூப்பிடாதீங்க! சார் சொன்ன மாதிரி இந்த வீட்டைப் பொறுத்த வரை நான் மதனகவே இருந்துடறேன். எனக்குப் பாட்டி மட்டும்தான் இருக்காருங்க. அம்மா, அப்பா இல்லேன்னு அவனுக்குத் தெரியும். அதனலே அம்மா, அப்பாவோட நான் இருக்கறதா இருந்தாத்தான் அவன் நம்புவான். பாட்டியைப் பத்தி மூச்சுக் காட்டாதீங்க! அவன் என்ன கத்தினலும் நான் சொல்லாமே யாரும் அவன் அறைக்குள்ளே வரவேண்டாம்! யாரையும் நான் அந்த அறைக்குள்ளே இருக்கறப்போ முன் அறிவிப்பு இல்லாம அனுப்பாதீங்க... நான் யாருன்னு தெரிஞ்சா நிலைமை இப்போதைவிட மோசமாயிடும். உங்களுக்குத்தான் கஷ்டம்... ஒரே ஒரு கேள்வி. உங்களுக்கு இத்தனை வசதி இருக்கறப்போ —அதிலேயும் அவன் ஒரே பிள்ளை — அவனைக் கான்வென்டிலே சேர்க்காமல் ஏன் சாதாரண ஸ்கூலிலே சேர்த்தீங்க?''

(தொடரும்)

# அரேபிய தேசத்துக் குட்டிக் கதைகள்

## தேவி

### எருதுக்குப் பதில்

மிருகங்கள் பேசுவதை அறியக் கூடிய சக்தி ஒரு விவசாயிக்கு இருந்தது.

அவரிடம் ஓர் எருதும் ஒரு கழுதையும் இருந்தன. காலை முதல் மாலை வரை உழைத்துவிட்டு அந்த எருது வீடு திரும்பும். அது திரும்பி வரும்போது கழுதை வேலை எதுவும் இல்லாமல் புல்லைத் தின்றுகொண்டு இருக்கும். அல்லது, காரட்டுகளைக் கடித்துக் கொண்டிருக்கும்.

காளை, கழுதையைப் பார்த்து, ''உன் பாடு தேவலை. எந்த வேலையும் செய்யாமல் சுகமாகத் தின்று கொண்டிருக்கிறாய்'' என்றது.

இதை அந்த விவசாயி கேட்டுக் கொண்டிருந்தான். கழுதை அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறது என்பதையும் உற்றுக் கேட்டான்.

''நீ ஒரு ஏமாளி. நான் சொல்கிறபடி செய்தால், நீயும் கொஞ்ச நாள் ஓய்வு எடுக்கலாம். அதற்கு நீ என்ன செய்ய வேண்டும், தெரியுமா? உடல் நலமில்லாதது போல் நடிக்க வேண்டும். தரையிலே நன்றாக நீட்டிப் படுத்துக் கொள். எதுவும் சாப்பிடாதே. அடித்தால்கூட எழுந்திருக்காதே. உனக்குச் சில நாட்களாவது ஓய்வு கிடைக்கும்.''

கழுதை இப்படிக் கூறியதைக் கேட்ட விவசாயி, ''அப்படியா சங்கதி!'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு வீட்டுக்குள் சென்று விட்டான்.

மறுநாள் காலையில் ஒரு வேலையாள் விவசாயியிடம் வந்து, ''எருதுக்கு உடம்பு சுகமில்லை. என்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.


''கழுதை சும்மாதானே நிற்கிறது? அதை ஓட்டிச் சென்று எருதுக்குப் பதிலாக ஏரிலே பூட்டி ஓட்டு'' என்றார்.

இரண்டு நாட்கள் கழுதையைக் கட்டி வயலிலே நன்றாக உழுதார்கள். அது கொஞ்சம் இடக்குச் செய்தால் போதும், முட்டியில் அடிப்பார்கள். காலை முதல் மாலை வரை அது வேலை செய்து மிகவும் களைத்துவிட்டது. இதிலிருந்து தப்ப என்ன செய்யலாம் என்று யோசித்தது.

இரண்டாம் நாள் இரவு மெதுவாகக் காளையிடம் சென்று, 'கெட்ட செய்தி ஒன்று என் காதில் விழுந்தது. நாளைக் காலை வரை பார்ப்பார்களாம். அப்போதும் உன் உடம்பு சரியாகாது போனால், கசாப்புக் கடைக்காரரை அழைத்து வந்து உன்னை வெட்டப் போகிறார்களாம். விவசாயி வேலையாளிடம் கூறிக் கொண்டிருந்தார்'' என்று தந்திரமாகக் கூறியது.

''அப்படியா! சரிசரி, நான் இப்போதே முன்போல் எழுந்து நிற்கிறேன். இரையைத் தின்கிறேன். எனக்கு உடம்பு நன்றாகத்தானே இருக்கிறது!'' என்றது எருது.

மறுநாள் வேலையாள் வந்து பார்த்தான். ''எருதுக்கு நோய் தீர்ந்து விட்டது. வயலுக்கு ஓட்டிச் செல்கிறேன்'' என்றான்.



எருது வயலை நோக்கிச் சென்றது. அப்பாடா! கெட்டயோசனை சொல்லப் போய் முட்டியைப் பெயர்த்து விட்டார்களே!' என்று கூறிப் பெருமூச்சு விட்டது கழுதை!

**மனிதனாக மாறிய கழுதை!**

ஒரு முட்டாளிடம் ஒரு கழுதை இருந்தது. ஒருநாள் அவன் தெருவிலே கழுதையுடன் சென்றுகொண்டிருந்தான். கழுதையைக் கட்டியிருந்த கயிற்றின் நுனி அவன் கையில் இருந்தது.



இதை இரு திருடர்கள் கண்டார்கள். உடனே அவர்களில் ஒருவன் மெதுவாகச் சென்று கழுதையை அவிழ்த்து, மற்ருெரு திருடனிடம் கொடுத்துவிட்டு, கயிற்றைத் தன் கழுத்தில் மாட்டிக்கொண்டு கழுதைக்காரன் பின்னுல் சென்ருன். எங்கேயோ பார்த்துக்கொண்டு முன்னுல் சென்ற கழுதைக்காரன் சிறிது தூரம் சென்ற பின்பே திரும்பிப் பார்த்தான். கழுதைக்குப் பதிலாக ஒரு மனிதன் இருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டான். ''ஐயோ! என் கழுதை எங்கே? நீ யார்?'' என்று கேட்டான்.

''நான் வேறு யாருமில்லை. உங்களுடைய கழுதையேதான்! பல ஆண்டுகளுக்கு முன்பு மனிதனுகத்தான் இருந்தேன். நான் நிறைய நிறையக் குடிப்பேன். ஒருநாள் குடிவெறியில் என் தாயாரை அடித்து விட்டேன். அவள், 'நீ கழுதையாகக் கடவாய்' என்று சாபம் போட்டுவிட்டாள். உடனே நான் கழுதையாகி உங்களிடம் இத்தனை நாட்களாக வேலை பார்த்தேன். இப்போது என் தாயாருக்கு அதிக வயதாகியிருக்கும். என் மேல் இரக்கப்பட்டு, மீண்டும் என்னை மனிதனுக்கிவிட்டாள் என்று நினைக்கிறேன். இவ்வளவு நாட்கள் என்னை

ஆதரித்ததற்கு நன்றி'' என்றான் திருடன்.

''ஐயோ பாவம். நீ உன் வீட்டுக்குப் போய் இனியாவது உன் தாயாரிடம் நல்லபடியாக நடந்துகொள்'' என்றான் சூதுவாது அறியாத அந்தக் கழுதைக்காரன்.

சில நாட்கள் சென்று வேறொரு கழுதை வாங்குவதற்காக அவன் சந்தைக்குப் போனான். அங்கு முன்பு தான் வைத்திருந்த அதே கழுதையைக் கண்டான். இன்னொரு திருடன் அதைச் சந்தையில் விற்பதற்காகக் கொண்டு வந்திருந்தான். அதை அறியாத அந்த அப்பாவி அக்கழுதையின் அருகில் போய் உற்றுப் பார்த்தான். அது தான் முன்பு வைத்திருந்த கழுதைதான் என்பதை அறிந்ததும், ''அட புத்தி கெட்ட பயலே! திரும்பவும் உன் தாயாரை அடித்துவிட்டு இப்படிக் கழுதையாக வந்து நிற்கிறாயே? சேசே, இனி உன்னை நான் வாங்க மாட்டேன்'' என்று கூறிக் கொண்டே வேறுபக்கம் சென்றுவிட்டான்!

## ஜாடிக்குள் பூதம்!




செம்படவன் ஒருவன் நாள் முழுவதும் கடலிலே வலை போட்டும் ஒரு மீன்கூட அகப்படவில்லை. சூரியன் மறையும் நேரம். அவன் வலையில் ஏதோ சிக்கிக் கொண்டது போல் தெரிந்தது. வலையைக் கரைக்கு இழுத்துப் பார்த்தான். அதற்குள், ஒரு ஜாடி இருப்பதைக் கண்டான்.

அந்த ஜாடியின் மூடி அழுத்தமாக மூடப்பட்டிருந்தது. செம்படவன் மிகுந்த சிரமப்பட்டு மூடியை அகற்றினான். உடனே அதற்குள்ளிருந்து 'புஸ் புஸ்' என்று புகை வந்தது. பிறகு அந்தப் புகையெல்லாம் சேர்ந்து ஒரு பூதமாகக் காட்சி அளித்தது! செம்படவன் பயந்து போனான்.

''என்னை வெளியில் வரச் செய்த உன்னை என்ன செய்யப் போகிறேன், தெரியுமா? கொல்லப் போகிறேன்'' என்று கோபமாகக் கூறியது பூதம்.

''நான் நல்லதுதானே செய்தேன்? என்னை ஏன் கொல்ல வேண்டும்?''

''சாலமன் என்ற அரசருக்கு நான் கீழ்ப்படியவில்லையாம். அதனால், என்னை அவர் இந்த ஜாடிக்குள் அடைத்துக் கடலுக்குள் போட்டார். நூறு ஆண்டுகள் இந்தக் கடலின் அடியிலேயே கிடந்தேன். 'எவனாவது என்னைக் காப்பாற்றினால், அவனுக்கு நிறையப் பொன்னும் பொருளும் கொடுக்கலாம்' என்று நினைத்தேன். எவனும் என்னைக் காப்பாற்றவில்லை. மேலும் நூறாண்டுகள் ஆயின. 'என்னைக் காப்பாற்றுகிறவனுக்கு உலகத்தில் உள்ள எல்லாச் செல்வங்களையும் கொடுக்க வேண்டு'மென்று நினைத்தேன். அப்போதும் எவனுமே வரவில்லை. எனக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது. 'இனி, என்னை எவன் காப்பாற்றினாலும் அவனைக் கொன்றுவிடுவது' என்று சபதம் போட்டேன்.''

செம்படவன் எப்படி அதனிடமிருந்து தப்புவது என யோசித்தான். ஒரு யுக்தி தோன்றியது.

''நான் என்ன முட்டாளா? என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்? நீயோ இவ்வளவு பெரிதாக இருக்கிறாய். எப்படி உன்னால் இத்தனை ஆண்டுகளாக இந்த ஜாடிக்குள் இருக்க முடிந்தது? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்றான்.

''என்ன, என் பேச்சை நீ நம்பவில்லையா? இதோ பார்!'' என்று கூறி, அது மீண்டும் புகையாகி ஜாடிக்குள் புகுந்தது. செம்படவன் ஒரு விநாடி கூடத் தாமதிக்கவில்லை. மூடியை எடுத்து நன்றாக அழுத்தி மூடிக் கடலுக்குள் எறியப் போனான். ஆனால், பூதம் அவனை மிகவும் கெஞ்சியது. அல்லாவின் பெயரைச் சொல்லி, ''உன்னை நான் ஒன்றும் செய்யமாட்டேன்'' என்று வாக்களித்தது.

செம்படவன் இரக்கப்பட்டு அதை மீண்டும் வெளியில் வரச் செய்தான். பூதம் வாக்களித்தபடி அவனுக்கு எந்த விதமான தொல்லையும் கொடுக்கவில்லை. பதிலாக நிறையச் செல்வத்தைக் கொடுத்தது!

உலகப் புகழ் பெற்ற
சிறுவர் கதை-16

# கடத்தப்பட்ட சிறுவன்




மூலம்: ராபர்ட் லூயி ஸ்டீவன்சன்
தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

**1751**—ஆம் ஆண்டு ஜுன் மாத ஆரம்பம். ஸ்காட்லாந்தின் தென் கிழக்குத் தாழ்நிலத்திலுள்ள எஸ்ஸென் டீன் என்னும் கிராமம். அங்கிருந்த எங்கள் எளிய குடிலின் கதவைக் கடைசி முறையாகச் சாத்திவிட்டு இந்தப் பரந்த உலகத்தில் என் துணிச்சலான பயணத்தைத் தொடங்கினேன்.

முதல் காரியமாக மிஸ்டர் காம்ப்பெல் என்னும் எங்கள் மதகுருவைச் சந்தித்தேன். சமீபத்தில் இறந்து போன என் அம்மா, அப்பாவைப் பற்றி அவருக்குத் தெரிந்த சில விவரங்களைச் சொன்னார். பிறகு, அப்பா எனக்கு விட்டுப் போன ஒரே ஒரு சொத்தான ஒரு கடிதத்தை என் கையில் கொடுத்தார். ''ஷா பரம்பரையை சேர்ந்த எபனீயர் பால்போர் என்பவருக்கு என் மகன் டேவிட் பால்போர் இந்தக் கடிதத்தைக் கொடுக்க வேண்டும்'' என்று உறையின் மேல் எழுதப்பட்டு முத்திரை வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பதினேழு ஆண்டுகளாக எனக்கு எந்த உறவினர்களையும் தெரியாது. ஷா மாளிகை மிகவும் பெரியது. செல்வம் நிறைந்தது. அத்தகைய பணக்காரர்களுக்கு நான் உறவினன் என்ற எண்ணமே எனக்குப் பெருமையாக இருந்தது. அப்பா ஏன் அவர்களிடமிருந்து விலகியிருந்தார் என்ற விஷயம் எனக்கு ஒரு புதிராக இருந்தது. புதிய உறவினர்களைப் பிடிக்காவிட்டால் கிராமத்துக்கே திரும்பும்படியும், அங்குள்ள நண்பர்கள்

எனக்கு உதவி செய்வார்கள் என்றும் மிஸ்டர் காம்ப்பெல் கூறினர். நம்பிக்கையோடு நான் புறப்பட்டேன்.

வழியில் விசாரித்தேன். ஒருவராவது ஷா மாளிகையைப் பற்றி நல்ல அபிப்பிராயம் சொல்லவில்லை. ''நீ ஏன் தம்பி வலுவிலே போய்க் கஷ்டத்திலே மாட்டிக்கிறே? பேசாமல் திரும்பிப் போ!'' என்று சிலர் எனக்குப் புத்திமதி கூறினர். இரண்டு நாட்கள் நடந்து வெகு தூரத்தைக் கடந்து வந்திருந்தேன். மாளிகை அருகில் வந்து விட்டது. ஆகவே, திரும்பிச் செல்ல எனக்கு மனம் வரவில்லை. மாளிகையைக் கூர்ந்து நோக்கினேன். அது அப்படி ஒன்றும் பிரமாதமாகக் காட்சி அளிக்கவில்லை. ஒரு பகுதி முடிக்கப்படாமல் அரைகுறையாக இருந்தது. ஜன்னல்களுக்குக் கதவுகள் இல்லை. அவற்றின் மூலம் வெளவால்கள் பறந்து கொண்டிருந்தன. புகைப்போக்கி வழியாக விருந்தினரை வரவேற்கும் புகை எதுவும் வரவில்லை. முன் கதவின் மீது கூரான ஆணிகள் துருத்திக் கொண்டிருந்தன.

இருட்டும் நேரம். கதவைப் பல முறை இடித்தேன். துப்பாக்கியும், கையுமாக உறவினர் வந்தார். என்னை உள்ளே அழைத்துச் சென்றார். மாளிகையின் உள்ளும், புறமும் இருள் சூழ்ந்திருந்தது. ''விளக்கு ஏன் ஏற்றவில்லை?'' என்று கேட்டேன். ''வெளிச்சம் எனக்குப் பிடிக்காது'' என்று அவர் பதிலளித்தார். இருண்டிருந்த அந்த மாளிகையை விட இன்னும் அதிகப் பயங்கரமாகத் தோற்றமளித்தார், அதில் தன்னந்தனியாக வசித்த என் உறவினர்.

தன் பெயர் எபனீயர் என்றும், தான் அப்பாவுக்குச் சகோதரர் என்றும் அவர் தம்மை அறிமுகம் செய்து கொண்டார். நான் கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். பார்த்தார். பிறகு ''உன் எதிர்கால நலனுக்காக நான் சில திட்டங்களை வைத்திருக்கிறேன். நீ இங்கேயே தங்கி எனக்கு உதவியாக இருப்பாயா?'' என்று என்னிடம் கேட்டார். நான் இசைந்தேன். அவர் என் அப்பாவுக்கு மூத்தவரா, இளையவரா என்று சரியாகத் தெரியவில்லை. மூத்தவராக இருப்பார் என்று நம்பினேன். இருந்தாலும், 'கதைகளில் வருவது போல என் அப்பாவை ஏமாற்றி எங்கள் சொத்துக்களை அவர் கைப்பற்றி இருப்பாரோ' — என்ற சந்தேகம் எனக்கு வந்தது.

ஒருநாள் இரவு. பெரியப்பா என்னை அன்போடு அழைத்து, ''டேவிட், மாடியின் உச்சி அறையில் ஒரு பெட்டி இருக்கிறது. அவசரமாக வேண்டும். அதை எடுத்து வா. படிக்கட்டு நன்றாக இருக்கிறது. விளக்குத் தேவையில்லை'' என்று சொல்லி என் கையில் ஒரு சாவியைக் கொடுத்தார்.

அன்று நல்ல இருட்டு. வெளியே புயல் உருவாகிக் கொண்டிருந்தது. மாடிப்படிக் கதவைத் திறந்தேன். நீண்ட படிக்கட்டுகள். கைகளால் தடவிக்கொண்டே நெடுநேரம் ஏறினேன். திடீரென மின்னல் வெட்டியது. எதிரில் இருந்த படிக்கட்டு பளிச்செனத் தெரிந்தது. நான் உச்சிக்கு வந்திருந்தேன். இன்னும் ஒரே ஒரு படிதான் பாக்கி! அங்கே அறையோ, பெட்டியோ எனக்காகக் காத்திருக்கவில்லை! கடைசிப்படி மொட்டையாக ஆகாயத்தில் நீட்டிக் கொண்டிருந்தது! மேலும் ஓர் அடி வைத்திருந்தால் நான் சாவைச் சந்தித்திருப்பேன்! மழை தொடங்கியது. படிக்கட்டுகள் சறுக்கின. பெரியப்பா மீது கோபமாக வந்தது. ஒவ்வொரு படியாகப் பிடித்துக் கொண்டு கவனமாகக் கீழே இறங்கினேன்.

மீண்டும் என்னை உயிரோடு பார்த்ததில் பெரியப்பா திகைத்துப்போனார். அவருடைய சதித் திட்டம் எனக்கு ஒருவாறு விளங்கியது. ஆகவே சொத்துக்களைப் பற்றி அவரிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டேன். ''டேவிட். இனிமேல் நான் எது பேசினாலும் நீ நம்ப மாட்டாய். நாளை ராங்கெய்லரைச் சந்திப்போம். அவர் நம் குடும்ப வக்கீல். குவீன்ஸ் பெர்ரியில் வசிக்கிறார். உன் கேள்விகளை எல்லாம் அவரிடமே கேள். அவர் பதில் அளிப்பார்'', என்றார் பெரியப்பா. எனக்கு அது நல்ல யோசனையாகப்பட்டது.

மறுநாள் நாங்கள் வக்கீலைக்காண்பதற்காகக் குவீன்ஸ் பெர்ரியை நோக்கி நடந்தோம். வழியில் ஒசசன் என்னும் கப்பல் தலைவரைச் சந்தித்தோம். 'காவ்னெண்ட்,' என்னும் அவருடைய கப்பல் அருகிலேயே நங்கூரம் போட்டு நின்றிருந்தது.

பெரியப்பாவும், கப்பல் தலைவரும் தந்திரமாக ஒரு பொய்யைச் சொல்லி ஏமாற்றி, என்னைக் கப்பலில் ஏற்றி விட்டனர். கப்பல் ஸ்காட்லாந்தின் கிழக்குக் கரையை விட்டு நகர்ந்தது. நான் இறங்க முயன்றேன். கப்பலில் இருந்தவர்கள் தடுத்தனர். தலையில்

பலமான அடி விழுந்தது. நான் மயங்கி விழுந்தேன்.

மயக்கம் தெளிந்த போது சுற்றிலும் மை இருட்டு. உடம்பெல்லாம் வலி! கை, கால்களில் கட்டுகள். தளம் ஆடிக் கொண்டிருந்தது. வெளியே காற்று ஊளையிட்டது. கப்பலின் அடித் தளத்தில் நான் சிறை வைக்கப்பட்டிருந்தேன். பெரியப்பாவின் வஞ்சகச் செயல் நினைவுக்கு வந்ததும் மறுபடியும் மயங்கிப் போனேன்.

என்னைச் சுற்றிலும் அழுக்கு, குப்பை கூளம், துர்நாற்றம். இரவு, பகல் வித்தியாசம் தெரியாத இருட்டு.



தொடர்ந்து பட்டினி. எத்தனை நாட்களை அப்படிக் கழித்தேன் என்று தெரியாது. 'கப்பல் பாறையில் மோதி உடையாதா? எனக்கு விடுதலை கிடைக்காதா?' என்று ஏங்கிக் கொண்டே தூங்கிப் போனேன்.

தலையில் பட்ட காயம் பெரிதாகியது. எனக்கு ஜுரம் வந்தது. கப்பல் அதிகாரி ஒருவர் என் மீது இரக்கப்பட்டு என்னை மேல் தளத்தில் இருந்த ஓய்வு அறைக்கு மாற்றினார். மருத்துவ உதவி கிடைத்தது. நான் குணமடைந்தேன். அப்போது கப்பல் மாலுமிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் முரடர்கள். ஆனாலும் என்னிடமிருந்து பறித்துக் கொண்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்தனர். கப்பல் அமெரிக்காவுக்குப் போகிறதென்றும், கரோலினா ராஜ்யத்திலிருந்த புகையிலைத் தோட்டத்தில் என்னை அடிமையாக விற்கப் பெரியப்பா ஏற்பாடு செய்துள்ளார் என்றும் மாலுமிகள் என்னிடம் கூறினர்.

கப்பலின் உணவு அறையில் ஒரு வேலைக்காரச் சிறுவன் இருந்தான். அவன் சரியாக உணவு பரிமாறவில்லை என்ற காரணத்திற்காகக் குடிபோதையில் இருந்த ஓர் அதிகாரி கோபங்கொண்டு அவனை நன்றாக அடித்தான். அடி தாங்காமல் அந்தச் சிறுவன் இறந்தான். அந்த அதிகாரியைக் காப்பாற்றுவதற்காக அவன் தற்செயலாகக் கடலில் விழுந்து மூழ்கி விட்டதாக ஒரு செய்தியைப் பரப்பி விட்டனர். இறந்த சிறுவனுக்குப் பதிலாக அவர்களுக்கு ஒரு வேலைக்காரன் தேவைப்பட்டது. கப்பல் தலைவர் எனக்கு அந்த வேலையை அளித்தார். அதை ஏற்ற பிறகு என் துன்பங்கள் குறைந்த மாதிரித் தோன்றின.

கப்பல் ஸ்காட்லாந்திற்கு வடக்கில்

போய்க் கொண்டிருந்தது. ஒரு வார மாகப் பருவநிலை படுமோசம். கன மான மூடுபனி. எதிரில் இருந்த கரை யும், பாறைகளும் கண்ணுக்குத்தெரிய வில்லை. அலைகள் சுருண்டு சுருண்டு பாறைகளின் மீது மோதும் ஓசை பயங்கரமாகக் கேட்டது. அதிகாரி களும் மாலுமிகளும், மேல்தளத்தில் நின்று கொண்டு வந்த ஓசையை உற்றுக் கேட்டனர். கப்பல் பாறை களின் மீது மோதும் அபாயத்தை அது அறிவிப்பது போல இருந்தது.

அன்று இரவு நான் அதிகாரிகளுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தேன். கப்பல் ஏதோ ஒன்றின் மேல் மோதும் பெரிய சப்தம் கேட்டது. எல்லோரும் மேல் தளத்திற்குச் சென்று எட்டிப் பார்த்தோம். எங்கள் கப்பல் ஒரு படகை இடித்து மூழ்கடித்திருந்தது. அதில் இருந்த பயணிகள் நீரில் மூழ்கி இறந்து விட்டிருந்தனர். ஒரே ஒருவர் மட்டும் தப்பிப் பிழைத்து, எங்கள் கப்பலின் பக்கத்தைப்பிடித்துக்கொண்டு மேலே ஏறினான்.

கப்பல் தலைவர் அந்த மனிதரை உச்சியிலிருந்த வட்டமான உணவு அறைக்கு அழைத்து வரச் சொன்னார். அவர் பெயர் ஆலன்பிரெக். குள்ள உருவம். படு சுறுசுறுப்பு. நேர்மை யான முகம். அலைபாயும் கண்கள். இடுப்பில் ஒரு பெரிய வாள். கையில் துப்பாக்கி. விலை உயர்ந்த கோட்டும் ஆடைகளும் அணிந்திருந் தார். உடைகள் நனைந்து அழுக்கேறி இருந்தன. தம்மைக் காப்பாற்றியதற் காக அவர் கப்பல் தலைவருக்கு மன மார நன்றி தெரிவித்தார். பிறகு ஆலன்பிரெக் தமது கதையைச் சுருக்க மாகச் சொன்னார்.

''என் நண்பர்களும், தானும் பிரான்சுக்குப் போகும் கப்பலைப் பிடிக்க நினைத்தோம். மூடு பனியின் காரணமாக முடியவில்லை. துரதிர்ஷ்ட வசமாக என் நண்பர்கள் இறந்து விட் டனர். அரசாங்க அதிகாரிகள் என்னைத் தேடுகின்றனர். ஆபத்து என்னைத் துரத்துகிறது. என் இனத்தவர்கள் வசிக்கும் மேட்டுநிலப் பகுதிக்குச் செல்ல விரும்புகிறேன். அத்தகைய ஒரு பாதுகாப்பான இடத்தில் என்னைச் சேர்த்து விடுங்கள். உங்களுக்கு அறுபது பொன் காசுகள் தருகிறேன்!'' என்று சொல்லித் தலைவரிடம் ஆலன் தமது பணப்பையைக் காட்டினார். பேராசை பிடித்த தலைவர்அதற்கு உடன்பட்டார்.

ஆலனுக்கு நான் உணவு கொடுத் தேன். அவர் பிராந்தி கேட்டார். பண்டக சாலையின் சாவி தலைவரிடம் இருந்தது. சாவிக்காக அவரைத் தேடிப் போனேன். ஓரிடத்தில் தலைவ ரும், இதர அதிகாரிகளும் ஆலனைப் பிடிக்கச் சதித் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். தற்செயலாக நான் அதை அறிய நேர்ந்தது.

பேராசை பிடித்த அந்த முரட்டுச் சதிகாரர்களின் பிடியிலிருந்து எப்படி யாவது ஓடிவிடலாம் என்று முதலில் எண்ணினேன். ஆனால், இன்னும் அதிகத் துணிச்சலான ஓர் எண்ணமும் வந்தது. அவர்கள் முன்னால் சென்று, ''விருந்தாளிக்குப் பிராந்தி வேண்டும். சாவி கொடுங்கள்'', என்று கேட் டேன்.

தலைவர் என்னை விளித்து, ''டேவிட்! நம்முடைய விருந்தாளி சாதாரண ஆள் இல்லை. நம் அரசருக்கு விரோதி. நம் கப்பலுக்கும், நமக்கும் ஆபத்தை உண்டாக்கக் கூடியவன். இப்போது நமக்கு ஒரு பெரிய பிரச்னை. துப் பாக்கிகள் எல்லாம் உச்சி அறையி லேயே இருக்கின்றன. ஓரிரு துப்பாக்கி களை மறைவாக என்னிடம் எடுத்துவா. கரோலினாவிற்குப் போன பிறகு நான் உனக்கு வேண்டிய உதவிகளைச் செய் கிறேன்'', என்று அன்பான குரலில் கூறினார். அவர் விருப்பப்படியேநடப்ப தாகச் சொல்லி, சாவியை வாங்கிக் கொண்டேன். உச்சி அறையைநோக்கி நடந்தேன்.

என் மனதிற்குள் ஒரு போராட்டம் எழுந்தது. ''இந்தக் கப்பலில் இருப்ப வர்கள் எல்லோரும் முரடர்கள்; திருடர்கள். என்னைக் கடத்திக் கொண்டு செல்பவர்கள்; பணிசெய்யும் சிறுவனைக் கொன்றவர்கள். இப்போது இன்னும் ஒரு நல்ல மனிதரைக் கொல்ல விரும்புகின்றனர். இவர்களை எதிர்த்தாக வேண்டும். ஆனால், நாங்கள் இருவரும் சேர்ந்து இவ்வளவு பெரிய முரட்டுக் கூட்டத்தை எப்படிச் சமாளிக்க முடியும்?'' என்று யோசித்துக் கொண்டே நடந்தேன்.

உச்சி அறையை அடைந்து ஆலனைக் கண்டதும் ஒரு தீர்மானத்துக்கு வந் தேன்.

''இங்குள்ளவர்கள் எல்லோரும் கொலைகாரர்கள். ஒரு சிறுவனை ஏற் கெனவேகொன்றிருக்கின்றனர். அடுத்து உன்னைக் குறி வைத்துள்ளனர்'', என்று ஆலனிடம் சொன்னேன்.

''நீ எனக்குத் துணை நிற்பாயா?'' என்று அவர் கேட்டார்.

''நான் இந்தக் கூட்டத்தைச் சேர்ந் தவனில்லை. கட்டாயம் உங்களுக்குத்

துணை செய்வேன்'', என்று உறுதி அளித்தேன்.

நேரத்தை வீணாக்காமல் முதல் வேலையாக எங்கள் அறையின் பாதுகாப்பை ஆராய்ந்தோம். உச்சி அறை வட்ட வடிவில் உறுதியாகக் கட்டப்பட்டிருந்தது. இரண்டு கதவுகள், இரண்டு ஜன்னல்கள், கூரையில் ஒரு ஜன்னல் — ஆக ஐந்து திறப்புகள் இருந்தன. ஒரு கதவைத் தவிர பாக்கி எல்லாத் திறப்புக்களையும் மூடித் தாழிட்டோம். ஆலன் அறையில் இருந்த துப்பாக்கிகளில் குண்டுகளை நிரப்பி என்னிடம் கொடுத்து ''டேவிட் கவனமாகக் கேள். இந்தத் திறந்த கதவை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். என் உயிருக்கு ஆபத்து வந்தாலொழிய நீ இந்தப் பக்கம் சுடாதே. மற்றத் திறப்புகளை நீ கவனித்துக் கொள். மூடியுள்ள கதவுகளை உடைத்துக் கொண்டு எதிரிகள் உள்ளே வர முயன்றால், அவர்களை நோக்கிச் சுடு'', என்று சொன்னார். பிறகு அவர் ஒரு கையில் நீண்ட வாளையும், மறு கையால் குத்துவாளையும் எடுத்துக் கொண்டு தயாராக நின்றார்.

எங்களைத் தாக்கப் போகும் முரட்டுக் கூட்டத்தை ஒருமுறை எண்ணிப் பார்த்தேன். என் மனம் இடிந்தது. தொண்டை வறண்டது. வெளியே கடல் அலைகள் கொந்தளித்தன. ''நாளைக்கு உயிரற்ற என் உடலை அலைகள் கரையில் ஒதுக்கப் போகின்றன'', என்று என் மனம் கற்பனை செய்தது. இருந்தாலும் 'முன் வைத்த காலைப் பின் வைக்கக்கூடாது' என்ற உறுதியுடன் நானும் போருக்குத் தயாரானேன்.

சிறிது நேரங் கழித்து அறைக்கு வெளியே ஆட்கள் ஓடிவரும் ஓசையும் வாட்கள் உரசும் ஒலியும் எழுந்தன. கப்பலின் இரண்டாவது அதிகாரியும் இதர மாலுமிகளும் உருவிய வாட்களுடன் கூட்டமாக வந்து ஆலனைத் தாக்கினர். ஆலன் தமது நீண்ட வாளை விளையாட்டுப் போலச் சுழற்றினார். அதிகாரி தரையில் சாய்ந்தார். மற்றவர்கள் காயமடைந்தனர். 'டேவிட்! ஜன்னலைக் கவனி!'' ஆலன் கூச்சலிட்டார். ஜன்னலை உடைத்துக் கொண்டு சிலர் உள்ளே எட்டிப் பார்த்தனர். அன்று வரையில் நான் துப்பாக்கியைக் கையால் தொட்டது கூடக் கிடையாது. இருந்தாலும் தற்காப்புக்காக ஜன்னல் மூலம் குறி பார்த்து இரண்டு மூன்று தரம் சுட்டேன். ஒருவன் 'ஓ'வென அலறி வீழ்ந்தான். மற்றவர்கள் காயம் அடைந்து திரும்பி ஓடினர். சிறிது நேரம் ஓய்வு எடுத்தோம்.

போர் தொடர்ந்தது. இரண்டாவது கூட்டம் எங்களைத் தாக்கியது. வேட்டைநாய் ஆடுகளை விரட்டுவதைப் போல ஆலன் கப்பல் தலைவரையும், அவருடைய ஆட்களையும் விரட்டி அடித்தான். சிலர் கூரை ஜன்னலைப் பிய்த்துக் கொண்டு உள்ளே குதிக்க முயன்றனர். பயத்தினால் நான் அவர்களை நோக்கிப் பலமுறை சுட்டேன். ஆலனின் வாள் வீச்சின் முன்னால் அவர்களால் நிற்க முடியவில்லை. சிலர் இறந்தனர். பலருக்குப் பெருத்த காயம் ஏற்பட்டது. அவர்கள் தப்பித்து ஓடினர். போர் ஓய்ந்தது. என்னுடைய தைரியத்திற்காக ஆலன் என்னைப் பாராட்டினார்.

உச்சி அறையில் சிறந்த உணவுப் பொருள்களும், பானங்களும் சேமிக்கப்பட்டிருந்தன. நாங்கள் நன்றாக உண்டு ஓய்வெடுத்தோம். ஆலனுடைய கோட்டில் வெள்ளிப் பொத்தான்கள் வரிசை

### பள்ளிப் பிள்ளைகளுடன் ஜனாதிபதி

அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் பள்ளிப் பிள்ளைகளுடன் என்ன செய்கிறார்? அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறுகிறார். கம்ப்யூட்டர் மூலம் அவர்கள் கல்வியை எவ்வாறு கற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்கிறார்.

இந்தப் பள்ளி, அமெரிக்க ஜனாதிபதி வசிக்கும் 'வெள்ளை மாளிகை'யால் தத்து எடுக்கப் பெற்றிருக்கிறது.



யாக இருந்தன. அவற்றில் ஒன்றைப் பறித்து என் கையில் கொடுத்தார். ''இந்தப் போராட்டத்தின் நினைவாக இதை வைத்துக் கொள். இந்தப் பொத்தானை என் நண்பர்கள் யாரிடம் காட்டினாலும் அவர்கள் உனக்கு எல்லா உதவிகளையும் செய்வார்கள்,'' என்று அவன் சொன்னான்.

ஆலனும், கப்பல் தலைவரும் சமாதானம் செய்து கொண்டு தங்கள் ஒப்பந்தங்களைப் புதுப்பித்துக் கொண்டனர். ஆலன் தாம் வாக்களித்த பொற்காசுகளைத் தருவதாகச் சொன்னார். ஆலன் குறிப்பிட்ட பாதுகாப்பான இடத்தில் எங்களைக் கொண்டு சேர்ப்பதாகக் கப்பல் தலைவர் உறுதி கூறினார்.

ஸ்காட்லாந்தின் மேற்குப் பக்கமாகக் கப்பல் போய்க் கொண்டிருந்தது. ஆலனும், நானும் எங்களுடைய கதைகளைப் பரிமாறிக் கொண்டோம். என்னுடைய கதைதான் உங்களுக்குத் தெரியுமே. ஆலனுடைய கதையை இனி பார்ப்போம்.

**1745**—ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஒரு பெரிய கிளர்ச்சி எழுந்தது. சிம்மாசனத்தைப் பிடிக்க ஸ்டுவார்ட்டு ஆனோவர் என்னும் வம்சங்களைச் சேர்ந்த இரண்டு இளவரசர்கள் போட்டியிட்டனர். ஸ்டுவார்ட்டு இளவரசரை ஸ்காட்லாந்தின் மேட்டு நில மக்களும், ஆனோவர் இளவரசரைத் தாழ்நிலத்து மக்களும், ஆதரித்தனர். போட்டியில் ஸ்டுவார்ட்டு இளவரசர் தோற்றார். அவரும், அவருடைய ஆதரவாளர்கள் பலரும் அண்டை நாடான பிரான்சுக்குத் தப்பிச்சென்றனர். அவர்களுடைய சொத்துக்கள் பறிக்கப்பட்டன. ஆனோவர் அரசரின் அதிகாரிகள் மேட்டுநில வாசிகளைச் சொல்ல முடியாத கொடுமைகளுக்கு ஆளாக்கினர். அவர்களுடைய ஆயுதங்கள் பறிக்கப்பட்டன. கலாசாரம் தடை செய்யப்பட்டது. பிரான்சுக்கு ஓடிப் போனவர்கள் திரும்பி வந்தால், அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களைப் பற்றித் தகவல் தருபவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மேட்டுநில வாசிகளுக்கு ஸ்டுவார்டு இளவரசரிடம் அசைக்க முடியாத ராஜபக்தி இருந்தது. ரகசிய ஆட்கள் மூலம் பிரான்சில் இருந்த அவருக்குப் பணம் அனுப்பி வைத்தனர். அம்மாதிரிப் பணம் வசூல் செய்த தலைவர்களில் ஒருவர்தான் ஆலன்பிரெக். அவர் பிரெஞ்சு மன்னரின் ராணுவத்



தில் சேர்ந்து ஒரு அதிகாரியாகப் பணி ஆற்றினார். அத்தகைய 'தேசத் துரோக'க் குற்றங்களுக்காக ஆலனைத் தண்டிக்க இங்கிலாந்து அதிகாரிகள் காத்துக் கொண்டிருந்தனர். 'சிவப்பு நரி' என்று அழைக்கப்பட்ட கொடிய அதிகாரி ஆலனைத் தூக்கில் போடுவதற்காகத் தேடிக் கொண்டிருந்தார். 'ஒவ்வொரு ஆண்டும் ஆலன் ஸ்காட்லாந்திற்கு விஜயம் செய்தாலும், அந்தச் 'சிவப்பு நரி'யின் கரங்களில் சிக்காமலேயே தப்பிக் கொண்டிருந்தார்.

ஆலன் இங்கிலாந்து அரசருக்கு விரோதி. நான் அரசரிடம் பற்றுடையவன். இருந்த போதிலும், பரஸ்பர மதிப்பு காரணமாகவும், இன்னல்களை எதிர்த்துச் சமாளிப்பதற்காகவும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதென நாங்கள் உறுதி பூண்டோம். ஒருநாள் இரவு நேரம். நிலா பால் போல் காய்ந்தது. கடல் அலைகள் பாறை மீது மோதி நீருற்றைப்போல் மேலே எழுவது தெளிவாகத் தெரிந்தது. அலைகள் மெல்லிய குரலில் கர்ஜிப்பது துல்லியமாகக் கேட்டது. கடல் நடுவில் பாறைகள் மைல் கணக்கில் வரிசை வரிசையாக இருந்தன. கப்பல் தலைவரும், மற்ற அதிகாரிகளும் மிகுந்த சிரமப்பட்டுக் கப்பலைப் பாறைகளிலிருந்து விலக்கிக் கரைக்கு அருகில் செலுத்தினர்.

ஒரு தாய் தன் குழந்தையை ஆசையோடு வளர்ப்பதைப் போலக் கப்பல் தலைவர் தன் கப்பலைப் போற்றிப் பாதுகாத்தார். கப்பல் பாறையை நெருங்கும்போதெல்லாம் அவர் மிகுந்த கவலைப்பட்டார். ஆலனின் பணத்திற்கு ஆசைப்பட்டுக் கப்பலை அந்த ஆபத்தான பாதையில் செலுத்தியதற்காக வருந்தினார். கப்பல் கவிழ்ந்தால் தப்பிச் செல்வதற்காக மாலுமிகள் படகுகளைத் தயார் செய்தனர். திடீரென ஒரு பெரிய அலை எழுந்து கப்பலைப் பக்கவாட்டில் சாய்த்தது. நான் கடலில் எறியப்பட்டேன்.

நான் தண்ணீர் மட்டத்திற்குக் கீழே, கீழே, கீழே போனேன். கடல் நீரை மடமடவென்று குடித்தேன். பிறகு மேலே வந்து அண்ணாந்து பார்த்தேன். நீல வானில் பூரணச் சந்திரன் தெரிந்தது. மறுபடியும் கீழே போனேன். இவ்வாறு கீழும், மேலுமாக எத்தனை தடவை அலைக் கழிக்கப்பட்டேன் என்று சொல்ல முடியாது. கடைசியில் ஒரு மரக்கட்டையைப் பிடித்துக் கொண்டு கரை சேர்ந்தேன். என்னைக் காப்பாற்றியதற்காகக் கடவுளுக்கு நன்றி சொன்னேன். எங்களுடைய கப்பலைத் தேடிப் பார்த்தேன். காணவில்லை. பாறைகளுக்கு அருகில் அது மூழ்கியிருக்க வேண்டும். படகுகளையும் காணவில்லை. கப்பலில் இருந்த என் நண்பர்களும், விரோதிகளும் என்ன ஆனார்கள்என்று தெரியவில்லை.

களைப்பு, ஈரம் பசி — மூன்றும் சேர்ந்து என்னைத் தாக்கின. இளைப்பாறுவதற்கு ஓர் இல்லத்தைத் தேடி நடந்தேன். இரண்டு நாட்கள் நடந்த பிறகு ஓர் எளிய குடிசையைக் கண்டேன் அதில் வசித்த ஒரு முதியவர் என்னை அன்போடு உபசரித்தார். பிறகு ''நீதான் வெள்ளிப் பொத்தான் வைத்திருக்கும் சிறுவனா?'' என்று கேட்டார். பொத்தானைக் காண்பித்தேன். உடனே அவர் எனக்கு ஆலன் இருக்குமிடத்தைச் சொன்னார். சுமார் ஐம்பது மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு சிற்றூரில் ஆலன்பிரெக் நலமாக இருப்பதாகவும். நான் ஆலனை அங்கு சந்திக்க வேண்டும் என்ற தகவலையும் சொன்னார். ஆலனைப்பார்க்கப் போகிறவர்கள் அரசாங்க அதிகாரிகளின் கண்களில் படாமல் ஒளிந்து செல்வது நலம்' என்றும் குறிப்பிட்டார். ஒரு திருடனைப் போல அல்லது நாடு கடத்தப்பட்ட தேசத்துரோகியைப் போல அந்த மேட்டுநிலத்தில் நான் மறைந்து மறைந்து திரிந்தேன். அது எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

வழியில் அன்னே ஏரி குறுக்கிட்டது. ஒரு படகோட்டியின் உதவியால் அதைக் கடந்தேன். ஏரியின் இருமருங்கிலும் கரிய பெரிய பாறைகள் ஓங்கி உயர்ந்து இருந்தன. வெள்ளிக்கம்பி போன்ற சிறிய நீர்வீழ்ச்சிகள் ஏரியை நிறைத்துக் கொண்டிருந்தன. ''புல், பூண்டு கூட இல்லாத இந்த வறண்ட பூமியை ஆலனும், அவனுடைய இனத்தவரும் இவ்வளவு போற்றுகின்றனரே!'' என்று எண்ணி வியந்தேன்.

ஏரியைக் கடந்ததும், ஒரு காட்டின் அருகே என்னை இறக்கி விட்டுப்படகு நகர்ந்தது. அந்தக் காட்டுப் பாதை வழியாக நான் நடந்து போனேன். சிவப்புத் தலைமுடி உடைய ஓர் அதிகாரியும், அவருடைய ஆட்களும் எதிரில் தோன்றினர். அவர்களிடம் நான் போக வேண்டிய சிற்றூருக்கு வழி கேட்டேன். அவர்கள் என்னைச் சந்தேகப்பட்டனர். அவர்களுடைய உரையாடலிலிருந்து அவர் தான் 'சிவப்பு நரி' என்று புரிந்துகொண்டேன்.

திடீரென மலையின் மேலிருந்து ஒரு துப்பாக்கிக் குண்டு பறந்து வந்தது. 'சிவப்பு நரி'யின் ஆவி பிரிந்தது. உடல் தரையில் சாய்ந்தது. நீண்ட துப்பாக்கியோடு, கறுப்புக் கோட்டு அணிந்த ஒருவன் மலைமேல் நின்று கொண்டிருந்தான். ''கொலைகாரன், கொலைகாரன்'' என்று கத்திக் கொண்டே அவனைப் பிடிப்பதற்காக ஓடினேன். ஆனால், ஒரு மின்னலைப் போல அவன் மறைந்து விட்டான்.

நானும் கொலைகாரக் கூட்டத்தைச் சேர்ந்தவன் என அதிகாரிகள் நினைத்தனர். ஆகவே என்னைப் பிடிப்பதற்காக அவர்கள் சில வீரர்களை ஏவினர். அவர்களிடமிருந்து தப்புவதற்காக நான் சிட்டாய்ப் பறந்தேன். அப்போது, ''இந்தப் புதருக்குள் வா!'' என்று மிகவும் பழக்கமான ஒரு குரல் ஒலித்தது. உள்ளே நுழைந்தேன். அங்கே ஆலன் பிரெக் கையில் தூண்டிலுடன் நின்று கொண்டிருந்தார்.

ஆலனும், நானும் மலைச்சரிவில் இருந்த புதர்களின் மறைவிலேயே வெகுதூரம் ஓடினோம். எங்கள் தலை வெளியே தெரியும் போதெல்லாம் வீரர்கள் எங்களை நோக்கிச் சுட்டனர். ஆகவே, நாங்கள் தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டே மறைவாகச் சென்றோம். ''சிவப்பு நரியைக் கொன்றது நீங்கள்தானா?'' என்று ஆலனிடம் கேட்டேன். ''நான் கொல்லவில்லை; கொலைகாரன் யாரென்று எனக்குத் தெரியும். ஆனால், நான் அவனைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்!'' என்றார் ஆலன்.

நாற்புறமும் எங்களை ஆபத்து சூழ்ந்திருந்தது. நாங்கள் பிடிபட்டால் தூக்கில் தொங்குவது நிச்சயம். எங்களைக் காப்பாற்ற ஒரே ஒருவரால் தான் முடியும். அவர்தான் வக்கீல் ராங் கெய்லர். எப்படியும் தாழ்நிலத்திற்குச் சென்று அவரைச் சந்திப்பதெனத் தீர்மானித்தோம்.

பகலில் தலைமறைவாக இருந்தோம். இரவில் பயணம் செய்தோம். உணவு கிடைக்காத நாட்களில் நீர் மட்டும் அருந்தினோம். நான் அரசாங்க வீரர்களுக்கு மட்டும் பயப்படவில்லை. பரிசுக்கு ஆசைப்பட்டு என்னைக் காட்டிக் கொடுத்து விடுவார்களோ என்று மேட்டுநில வாசிகளுக்கும் பயந்தேன். ஆனால், அவர்களுடைய நல்ல மனத்தைப் பிறகுதான் புரிந்து கொண்டேன்.

சரியான உணவு இல்லாததாலும், அடிக்கடி மழையில் நனைந்ததாலும் என் உடம்பு பலவீனமாகியது. நான் நோய்வாய்ப்பட்டேன். என்னால் நடக்க முடியவில்லை. ஆலன் அன்போடு என்னை அணைத்தவாறே அழைத்துச் சென்றார். அருகில் இருந்த ஒரு நண்பரின் இல்லத்தில் சேர்த்தார். சுமார் ஒரு மாதம் அங்கு தங்கி ஓய்வெடுத்தேன்.

நான் தங்கியிருந்த வீட்டில் சில துண்டு அறிக்கைகள் கிடந்தன. எடுத்துப் பார்த்தேன். ஆலனையும், என்னையும் பற்றித் தகவல் தருபவர்களுக்கு அரசாங்கம் பரிசுகள் அறிவித்திருந்தது.



## இதை விட உயரத்திலிருந்து!

காந்திஜி ஒருமுறை மைசூருக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள மக்கள் அவரிடம், ''பாபு, தாங்கள் அவசியம் ஜெரசப்பாவுக்குச் செல்ல வேண்டும்'' என்றனர்.

''அங்கென்ன விசேஷம்?'' என்றார் காந்திஜி.

''அங்குதான் ஜோக் நீர்வீழ்ச்சி உள்ளது. அவ்வளவு உயரத்திலிருந்து தண்ணீர் கொட்டுவதைப் பார்க்க மிக அழகாக இருக்கும்'' என்றவர்களைப் பார்த்து, காந்திஜி சொன்னார். ''இதை விட அதிகமான உயரத்திலிருந்து நீர் கொட்டுவதை நான் பார்த்திருக்கிறேனே!'' என்றார்.

கூடியிருந்தவர்கள் வியப்புடன், ''எங்கே பார்த்தீர்கள்?'' என்று கேட்டபோது காந்திஜி, தம் பொக்கை வாய்ச் சிரிப்போடு சொன்னார். ''வானத்தில் இருந்து நீர் கொட்டுவதைப் பார்த்திருக்கிறேன்.''

—இதோபஞ்சு

அதிகாரிகள் எங்களை வலை போட்டுத் தேடினர். ஒரே ஒரு வார்த்தை அவர்களிடம் சொல்லி விட்டால் போதும். மேட்டுநில வாசிகள் பெரிய பணக்காரர்கள் ஆக முடியும். ஆனாலும், ஒருவராவது அப்படிச் செய்யவில்லை! ரகசியத்தைப் போற்றிக் காப்பாற்றினார்கள். நான் எவ்வளவு வேண்டியும் ஆலன் என்னை விட்டுப் போகவே இல்லை. பகல் வேளைகளில் காட்டில் மறைந்திருந்தார். இரவு வேளைகளில் என்னோடு தங்கி எனக்கு உதவி செய்தார்.

எங்கள் கையிலிருந்த பணமெல்லாம் செலவாகி விட்டது. ஆகவே, விரைவில் வக்கீல் ராங்கெய்லரைப்பார்க்காவிட்டால் பட்டினி கிடக்க வேண்டியதுதான் என்று பயந்தோம். கதைகளில் வரும் கதாநாயகனைப் போல நானும் என் சொத்துக்களை வக்கீல் மூலம் அடைய முடியும் என்று நம்பினேன். ஆகவே வக்கீலைச் சந்திப்பதற்காகக் குவீன்ஸ் பெர்ரியை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஒரு நதி குறுக்கிட்டது. குறுக்கே ஒரு பாலம். பாலத்தைக் கடந்தால் வக்கீலின் ஊரை அடையலாம். ஆனால், பாலத்தில் காவல் பலமாக இருந்தது. அந்தப் பக்கம் போனால் நாங்கள் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம். ஆகவே, பாலத்தைத் தவிர்த்தோம். நதியின் முகத்துவாரம் அகலம் அதிகம். அங்கே எந்தக் காவலும் இல்லை. ஆலன் சாமர்த்தியமாகப் பேசி ஓர் ஓடக்காரச் சிறுமியின் உதவியைக் கோரினார். அவள் அன்போடு உதவினாள். இரவில் அக்கரை சேர்ந்தோம்.

ஆலன் ஒரு வயலில் மறைந்து கொண்டார். நான் மட்டும் வக்கீலின் வீட்டைத் தேடிச் சென்றேன். அவர் எனக்கு உணவும் உடையும் கொடுத்து உபசரித்தார். பிறகு என் கதையைக் கவனமாகக் கேட்டார்.

மேல் படிப்புக்காக நான் ஐரோப்பா போயிருப்பதாக என் பெரியப்பா வக்கீலிடம் பொய் சொல்லியிருந்தார். ஆனால் கப்பல் தலைவர் திரும்பி வந்து நான் கடலில் மூழ்கி இறந்து விட்டதாகக் கூறியிருந்தார். எஸ்ஸன்டீன் கிராமத்து மதகுரு என் நலனைப்பற்றி அக்கறையோடு விசாரித்திருக்கிறார். இம்மாதிரிப் பல ஆட்களிடமிருந்து என்னைப் பற்றிச் சிறிது சிறிதாகப்பல செய்திகளைச் சேகரித்திருந்தார் வக்கீல். என் முழுக் கதையையும் கேட்டபிறகு அவருக்கு என் பேச்சில் நம்பிக்கை ஏற்பட்டது. பிறகு, அவர் எங்கள் குடும்பத்தின் பழைய நிகழ்ச்சிகளை எனக்குச் சொன்னார்.

பெரியப்பா என்று நான் கருதியவர் உண்மையிலேயே பெரியப்பா அல்ல என்றும், அவர் என் சித்தப்பா தான் என்றும், வக்கீல் கூறினார். மேலும், என் அப்பாவும், சித்தப்பாவும் ஒரே பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினராம். என் அப்பா வென்றார். சித்தப்பா தோற்றார். பிறகு சித்தப்பா மனமுடைந்து படுத்த படுக்கையாகிவிட்டார். தன் தம்பியின் நிலைக்குஇரக்கப்பட்டு என் அப்பா, தான் மூத்தவராக இருந்த போதிலும், சொத்துக்களை எல்லாம் இளையவருக்கே விட்டுக் கொடுத்து விட்டார். பிறகு வாழ்நாள் எல்லாம் வறுமையில் வாடினார். மாளிகையில் பிறக்க வேண்டிய நான் எளிய குடிசையில் பிறந்தேன். சொத்துக்களைப் பற்றிய விஷயம் நீதிமன்றத்திற்குப் போனால் தான் ஜெயிக்க முடியாது என்று சித்தப்பாவுக்குத் தெரியும். ஆகவே, அவர் என்னைத் தொலைத்து விடப் பல வழிகளிலும் முயன்றார்.

வக்கீலையும், ஆலனையும் அழைத்துக் கொண்டு நான் சித்தப்பாவைச் சந்தித்தேன். அவர்கள் இருவரும் வெகு எளிதில் சித்தப்பாவை மிரட்டி ஒரு நல்ல ஏற்பாட்டிற்கு இசைய வைத்தனர். சொத்தில் மூன்றில் இரண்டு பங்கு எனக்கும், மீதி சித்தப்பாவுக்கும் — என ஏற்பாடு செய்தனர். என் குடும்ப விவகாரங்கள் வெளிஉலகத்திற்கு வருவதை நான் விரும்பவில்லை. மேலும், ஆலன் பிரெக்கிற்கு ஆபத்து வராமல் நான் காப்பாற்றியாக வேண்டும். ஆகவே, நானும் அந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டேன்.

கதைகளில் வரும் பிச்சைக்காரச் சிறுவனைப் போலவே, நானும் என் சொத்துக்களுக்கு அதிபதியாகத் திரும்பி வந்தேன். காட்டிலும்,மேட்டிலும் அநேக இரவுகள் கண் விழித்து நடந்து வந்தேன். ஆனாலும்உணர்ச்சி மிகுதியினாலும், உற்சாகப் பெருக்கினாலும் அன்றிரவு எனக்கு உறக்கமே வரவில்லை. என் எதிர்காலத் திட்டங்களை இனிதாகக் கற்பனையில் தீட்டிக் கொண்டே அந்த இரவைக் கழித்தேன்.

—Robert Louis Stevenson எழுதிய Kidnapped என்ற ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது.



# அனிதாவின் கண்ணீர்

பூதலூர் முத்து

மாலை மணி 6.30. கடிகாரத்தின் பெரிய முள் எப்போது தொடும் என்று ஆவலோடு கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அச் சிறுவர் சிறுமியர்கள்.

அவர்கள் பங்கேற்கும் சிறுவர் நிகழ்ச்சி 6.30—க்கு ஒலிபரப்பாகப் போகிறதே! அதனால்தான் அத்தனை ஆர்வம்!

கண்ணன் வீட்டு வானொலிப் பெட்டியைச் சுற்றிக் கூட்டமாக அமர்ந்திருந்தார்கள்.

ஆறு மணிக்கு ஆங்கிலச் செய்தி படிக்கப்படும்போதே அவர்கள் அங்கு வந்து குழுமி விட்டார்கள்.

கடிகாரத்தின் பெரிய முள் அசையும்போது அவர்களின் விழிகளும் அசைந்தன.

கண்ணன் அந்தப் பருவத்துக்குரிய வானொலி இதழைக் கையில் வைத்துக் கொண்டு தங்கள் நிகழ்ச்சி பற்றி அதில் குறிப்பிடப்பட்டுள்ளதை ஆர்வத்தோடு படித்துக் கொண்டிருந்தான்.

'இந்த வாரத்துக்குரிய சிறுவர் நிகழ்ச்சியை வழங்குவது நேருஜி வானொலி சிறுவர் சங்கம், புதூர். பங்கேற்போர்: முரளி, கண்ணன், ரமேஷ், ஆனந்தன், அமுதா, கமலா, விஜயா, வனிதா, அனிதா.'

நிகழ்ச்சி நிரலில் அந்தப் பகுதியைப் பச்சை மையால் கட்டம் போட்டுக் காட்டியிருந்தான் அவன்.

ஒருவர் மாற்றி ஒருவர் அதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

அந்தத் தெருவில் உள்ள எல்லா வீடுகளிலும் அன்று ஒலிபரப்பாக விருக்கும் தங்கள் நிகழ்ச்சி பற்றி முரளி விளம்பரப்படுத்தியிருந்தான். அடுத்த தெருவிலும் ரமேஷ் கைகளை 'மெகா போன்' போல வைத்துக்கொண்டு பிரசாரம் செய்திருந்தான்.

இவை தவிர, ஒவ்வொருவரும் வெளியூரில் இருக்கும் தங்கள் மாமா, பெரியப்பா, அத்தை, பாட்டி, அண்ணன் இப்படிப் பலருக்கும் வானொலியில் ஒலிபரப்பாகவிருக்கும் தங்கள் நிகழ்ச்சி பற்றிக் கடிதம் எழுதினார்கள்.

சிறுவர் சிறுமியர் ஆர்வத்தோடு இப்படிச் செயல்பட்டார்கள். வீட்டுப் பெரியவர்களும் தங்கள் பங்குக்குக் குறை வைக்கவில்லை. அலுவலக நண்பர்களிடமெல்லாம் சொல்லி வைத்திருந்தார்கள்.

''என்னுடைய பிள்ளை ஆனந்தன் பகத்சிங்காக நடித்திருக்கிறான்!''

''என் பிள்ளை முரளி வீரவாஞ்சியாக நடித்திருக்கிறான். கேட்டு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.''

''நேரு மாமா பற்றி என் மகள் விஜயா 'புதுடெல்லி போய் வந்தேன் நேரு மாமா' என்ற பாட்டைப் பாடுகிறாள், அவசியம் கேளுங்கள்.''

''என் மகள் வனிதாவும் நம்ம திருமலைசாமி மகள் வனிதாவும் அமுதா, கமலா என்ற பெண்களும், 'ரோஜாச் செடி' என்ற நாடகத்தை நடித்துக் காட்டுகிறார்கள். மறக்காமல் கேளுங்கள்.''

அவர்கள் படிக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியரும் கலை ஆர்வம் மிக்கவர். அவருடைய பெயர் ஜெயசீலன். திறமை மிக்கவர்களைக் கண்டால் பாராட்டி ஊக்குவிக்கும் தன்மை கொண்டவர். தம் பள்ளியைச் சேர்ந்த குழந்தைகளின் நிகழ்ச்சி வானொலியில் ஒலிபரப்பாவதை அறிந்ததும், மூன்று நாளைக்கு முன்பே காலை வழிபாட்டுக் கூட்டத்தில் அதைப் பற்றி அறிவித்து, ''மாணவ மாணவியர் அதைத் தவறாது கேட்டு, கருத்தை என்னிடம் கூற வேண்டும். நீங்களும் அவர்களைப் போல் உங்களுடைய ஆர்வத்தை, திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறினார்.

கண்ணன் வீட்டில் சிறுவர் கூட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

வானொலி நிகழ்ச்சி பற்றி அவன் வீட்டு வாசலில் ஒரு விளம்பரத் தட்டி

வைக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சியை எல்லோரும் ஒன்ருக அமர்ந்து கேட்டால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்! அதனால்தான் அங்கே குழுமினுர்கள்.

அனிதாவின் அப்பாவும், அம்மாவும் அன்று ஒரு முக்கியமான கல்யாணத்துக்குப் போக வேண்டியிருந்தது.

''என்னுடைய நிகழ்ச்சி இன்று ஒலி பரப்பாகிறது. நீங்கள் இருந்துகேட்டே ஆகவேண்டும்'' என்ருள் அனிதா.

''சரி நான் இருக்கிறேன். அப்பா மட்டுமாவது போய் வரட்டும்... நமக்கு மிகவும் வேண்டியவர்கள். நம் வீட்டிலிருந்து யாரும் போகாவிட்டால் வருத்தப்படுவார்கள்'' என்ருள் அம்மா.

''என்னைவிட உங்களுக்குக் கல்யாணம் முக்கியமாகப் போய் விட்டதா?'' என்று தேம்பத் தொடங்கி விட்டாள் அவள். அப்பாவும் கல்யாணத்துக்குப் போகாமல் நின்று விட்டார்.

அந்த ஊரில் இருந்த கலைமன்றத்தின் தலைவரிடம் கண்ணனும், மற்ற பையன்களும் தங்கள் வானொலி நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். அந்தக் கலைமன்றத்தில் எல்லோரும்

## கடலைப் பற்றிய செய்திகள் (கடலையைப் பற்றி அல்ல.)

1. 'இங்கிலீஷ் கால்வாய்' என்பது கால்வாயா? கடலா?

கடல்தான்.

2. அட்லாண்டிக் கடலடியில் 'கேபிள்' தந்திக் கம்பியைப் போட்ட முதல் கப்பல் எது?

The great Eastern என்ற கப்பல்.

3. பால்டிக் கடல், மத்திய தரைக்கடல், செங்கடல் இவற்றில் நிலத்தால் சூழப்பட்ட கடல் எது?

செத்த கடல் – Dead Sea.

4. நிறப்பெயர்களைக் கொண்ட கடல்கள் யாவை?

செங்கடல் – சவூதி அரேபியாவுக்குத் தென்மேற்கே. கருங்கடல் – ரஷியாவிற்குத் தெற்கே.

மஞ்சள் கடல்–ஜப்பானுக்குத் தென்மேற்கே.

5. பெருங்கடல்களில் அதிக ஆழம் கொண்டது?

பஸிஃபிக் பெருங்கடல்.

6. ஒரு நாட்டிற்குக் கடல் எல்லை எவ்வளவு தெரியுமா?

கரையிலிருந்து மூன்று 'கடல் மைல்' அதாவது 6080 அடித் தொலைவு வரை.

7. பூமி சுற்றுவதால் கடலில் அலைகள் ஏற்படுகின்றன. சரியா, தவரு?

தவறு. கடலில் அலைகள் ஏற்படுவது காற்றினுல்மட்டுமே.

8. கடல் மட்டத்திற்குத் தாழ்வாக உள்ள நாடு எது?

ஹாலந்து.

9. மத்திய தரைக்கடல் நுழைவாயில் எது?

ஜிப்ரால்டர்.

10. உலகின் மிகச் சிறிய கடல் எது?

ஆர்டிக் கடல் 54,40,197 சதுரமைல்.

11. மிகப்பெரிய விரிகுடா?

வங்காள விரிகுடா. கடற்கரையின் நீளம் 2,250 மைல்.

12. மிகப்பெரிய வளைகுடா எது? மெக்ஸிகோ வளைகுடா.

கடற்கரையின் நீளம் 3100 மைல்.

தொகுத்தவர்:

திண்டுக்கல் ஏ. என். சாந்தா.

பார்த்து ரசிக்கும் வண்ணம் ஒரு கலை நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்பது அவர்களின் அடுத்த திட்டமாகும்.

'தம்பிகளா... உங்கள் வானொலி நிகழ்ச்சியைக் கேட்டதும், இந்தக் கலை மன்றத்தில் உங்கள் கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வது பற்றித் தெரிவிக்கிறேன்'' என்றார் கலை மன்றத் தலைவர்.

''நாங்கள் வானொலி நிகழ்ச்சியை நல்ல முறையில் செய்திருக்கிறோம். நீங்கள் அதைக் கேட்டு நிச்சயம் எங்களுக்கு வாய்ப்புத் தருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. உங்கள் அன்புக்கு மிகுந்த நன்றி ஐயா...'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார்கள் அவர்கள்.



இன்னும் பத்துநாளில் சிறுவர் கலை விழா ஒன்று அந்த மன்றத்தில் நடக்க விருந்தது. அதிலேயேகூட அவர் இவர்களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடும். வானொலி நிகழ்ச்சி நிச்சயம் அவரைக் கவர்ந்திழுக்கும்.

பெரிய முள் 6.30—ஐத் தொட்டு விட்டது. எல்லோருக்கும் இதயத் துடிப்பு அதிகரித்தது. அறையில் கேட்டுக் கொண்டிருந்த சிறு சிறு ஒலிகள்கூட நின்று அமைதி நிலவியது.

கண்ணனின் தந்தை தம் நண்பரிடம் வாங்கி வந்த 'டேப் ரிகார்டரைத்' தயார் நிலையில் வைத்துக் கொண்டார். ஒலிப்பதிவு செய்து வைத்தால் பல முறை கேட்டு மகிழலாமே!

''....வானொலி நிலையம். நேரம் இப்போது ஆறுமணி முப்பது நிமிடம். ஐந்து விநாடி...''

நேரம் குறிப்பிடப்பட்டதும் அது சிறுவர் நிகழ்ச்சி என்பதைக் காட்ட இரண்டு கிளிகள் 'கீச்கீச்' என்று ஒலியெழுப்பும்.

அந்த ஒலி கேட்கவில்லை! சிறுவர்களுக்கு மிகவும் திகைப்பாக இருந்தது.

கிளிகளின் ஒலியைத் தொடர்ந்து வானொலி அண்ணாவின் 'அன்புள்ள சிறுவர் சிறுமியரே...'' என்ற அன்புக் குரல் கேட்கும். அந்தக் குரலும் கேட்கவில்லை. பரபரப்பு அதிகமாயிற்று!

ஒருவேளை, தவறுதலாக, வேறு நிலையத்திற்கு நகர்த்தி வைத்துவிட்டார்களோ... கண்ணன் ஓடிப் போய்ப் பார்த்தான். தவறாக வைக்கவில்லை. வழக்கமான நிலையம்தான்.

அந்த வேதனை மிகுந்த சூழலில் விநாடிகள் நகர்ந்தன. வானொலியில் கட்டையான ஒரு குரல் ஒலித்தது. பதிலாக... ஊரில் நடைபெற்ற... விழாவின் வானொலித் தொகுப்பை இப்போது நேயர்களுக்கு வழங்குகிறோம். முதலில் 'குழந்தைகள் மாண்பு' என்பது பற்றி அமைச்சர் அருமைத்தம்பியின் சொற்பொழிவு இடம் பெறுகிறது...''

* * *

அனிதாவின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. துயரம் வெடிக்க, அம்மா, அப்பாவுக்குத் தெரியாமல் அழுது கொண்டிருந்தாள் அவள்



# அரவிந்தன் கண்ட அதிசயம்!

## ரா. பொன்ராசன்

**கொ**ண்டைக்கரிச்சான்பட்டி எங்கே இருக்கிறது? உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு மட்டுமல்ல; அந்தச் சுற்று வட்டாரத்து மக்களுக்கே அந்த ஊரைப் பற்றித் தெரியாது — ஒரு மாதத்துக்கு முன்புவரை—

ஆனால் இப்போது?

நிலைமை தலைகீழ்!

இப்போது அந்த ஊரைப் பற்றித் தெரியாதவர்கள் எவருமே இருக்க மாட்டார்கள். அவ்வளவு புகழ்பெற்று விட்டது ஒரே மாதத்தில் அந்த ஊர்! பத்திரிகைகளில்கூட அந்த ஊரைப் பற்றிப் பத்தி பத்தியாகச் செய்திகள் வரத் தொடங்கின!

கொட்டிக் கிடக்கும் கருப்புக்கட்டியை நோக்கிச் சாரை சாரையாக எறும்புகள் போவதைப் போல, அந்த ஊரை நோக்கி மக்கள் போனார்கள். வாரத்தின் எல்லா நாட்களிலும் மக்கள் போனார்கள். ஆயினும், வெள்ளிக்கிழமைகளில், கட்டுக்கடங்காத கூட்டமாகப் போனார்கள்.

அத்தனைக்கும் காரணம் அந்த ஊருக்கு ஓர் அதிசயச் சாமியார் வந்திருப்பதுதானாம்! அந்த அதிசயச் சாமியாரைப் பற்றி எத்தனையோ கதைகள்; வதந்திகள். செய்திகள்!

அந்தச் செய்திகளைக் கேட்டதும், அரவிந்தனுக்கு அங்கு செல்ல வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. அன்று காலை, கொண்டைக்கரிச்சான்பட்டிக்குப் போய்க் கொண்டிருந்த கூட்டத்துடன் அவனும் கலந்துகொண்டான்.

வழிநெடுகக் கூட்டம் பொங்கி வழிந்தது. கூட்டத்தில் ஒரு பெரியவர் கொளுத்தும் வெயிலுக்குப் பாதுகாப்பாகக் குடை விரித்துப் பிடித்தபடி தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தார். அரவிந்தன் அந்தப் பெரியவரிடம் போய் ஒட்டிக் கொண்டான்.

நிழல் கிடைக்கும்; அத்துடன் விவரங்களையும் தெரிந்துகொள்ளலாமல்லவா?

கொஞ்ச தூரம் பேசாமலே நடந்த அரவிந்தன், மெல்ல அந்தப் பெரியவரிடம் பேச்சுக் கொடுத்தான்.

''எதற்காக இந்தச் சாமியாரைப் பார்க்க இவ்வளவு கூட்டம் போகிறது?''

அரவிந்தன் அப்படிக் கேட்டவுடனே மூக்குக்கு மேல் கோபம் வந்துவிட்டது அந்தப் பெரியவருக்கு! அரவிந்தனையே வெறிக்கப் பார்த்தார். குடையை — நிழல் அவன் மேல் படாதவாறு திருப்பிக்கொண்டார். 'அந்தச் சாமியாரைப் பற்றி அறிந்து கொள்ளாதது அவனுடைய மாபெரும் குற்றம்' என்று அவர் எண்ணியது அவர் நடவடிக்கையிலேயே தெரிந்தது.

அரவிந்தன் அயரவில்லை.

பைய, குழைவாக,

''நிஜமா எனக்கு அவரைப் பற்றி எதுவும் தெரியாது. இத்தனை பேர் அவரைப் பார்க்கப் போறதா இருந்தால் அவரிடத்திலே ஏதோ பெரிய சக்தி இருக்கத்தானே செய்யும்? நான் சின்னவன்தானே? எனக்குத் தெரியாமல் இருக்கலாம்தானே? நீங்க

சொல்லலாம்தானே?'' என்று கெஞ்சுவதுபோல் அவரிடம் கேட்டான்.

அந்தப் பெரியவர் போதுமான அளவு பிகு செய்து கொண்டபின், கனகம்பீரமாகச் சொல்லத் தொடங்கினார்.

''அவர் பெரிய ஆளாக்கும். அவருக்கு இடுப்பு வரை தாடி இருக்கிறதாக்கும்!'' என்றார்.

பொங்கி வந்த சிரிப்பை அரவிந்தன் அடக்கிக் கொண்டான்.

'வெட்டாமல் விட்டுவிட்டால் தாடி தானே வளரும். இதில் என்ன அதிசயம் இருக்கிறது?'

''அப்புறம்... நீள நீளமாக நகம் வளர்ந்திருக்கிறதா?'' — அரவிந்தனே கேட்டான்.

'அட, இந்தக் குட்டிப் பயலுக்குக் கூடக் கொஞ்சம் விஷயஞானம் இருக்கிறதா?' என்ற பெருமிதம் அந்தப் பெரியவருக்கு!

ஆனால், அவர் அதோடு நிறுத்திவிடவில்லை.

''ஆனால், அவர் பெரிய சக்திமானாக்கும். நம்மைப் போலச் சாமானியர் இல்லை!'' என்றார்.

''அவரிடம் என்னதான் சக்தி இருக்கு? அதைச் சொல்லுங்களேன்'', —இது அரவிந்தன்.

இவர்கள் பேசிக்கொண்டு நடந்தபோதே வெயில் நெருப்பாகத் தகித்தது.

வழியில் நாலைந்து வேப்பமரங்கள், பாலைவனத்து நடுவே சோலைவனம் போல.

வேப்ப மரங்களுக்கு அடியில் வந்ததும் அந்தப் பெரியவர் குடையை மடித்துக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டார்.

கொஞ்சம் உட்கார்ந்து இளைப்பாறிவிட்டு, பின் நடக்கத் தொடங்கினர்.

வெயிலுக்கு வந்ததும் மறுபடி குடை விரிக்கப்பெற்றது. அரவிந்தன்— ஒண்டிக் கொண்டான்.

சில வளைவு நெளிவுகளுக்குப் பின், பாதையின் குறுக்கே ஒரு சிறு ஓடை. அந்த இடத்திற்கு வந்ததும், அந்தப் பெரியவர் கால்களிலிருந்த செருப்புக்களைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டார்.

அரவிந்தன் பக்கம் திரும்பினார்.

''இப்போ என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

உண்மையில் அரவிந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. கேள்வியே ஒரு புதிராகத் தோன்றியது. நடக்க முடியாதது என்ன நடந்தது இப்போது? மனத்துக்குள்ளேயே அலசினான்.



ஊஹூம். அப்படி எந்த அதிசயமும் நடந்ததாக அவனுக்குப் புலப்பட வில்லை. அதையே அந்தப் பெரியவரிடமும் சொன்னான்.

அந்தப் பெரியவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு,

''அடே குட்டிப் பயலே, இப்போ நாம் வெயிலில் வந்த போது நாம் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு வந்தோம். நிழலுக்கு வந்ததும் குடையை மடக்கிப் பிடித்துக் கொண்டோம்; இல்லையா?''

''ஆமா தாத்தா. அது மட்டுமில்லே. சுடும் இடத்திலே எல்லாம் செருப்புப் போட்டுக்கிட்டு வந்தீங்க. ஓடை வந்ததும் அதுகளைக் கழற்றிக் கையிலே எடுத்துக்கிட்டீங்க.''

''பலேடா பாண்டியா. கெட்டிக்காரன். கூர்ந்து கவனிச்சிருக்கே.''

''அந்தச் சாமியார் அப்படிச் செய்கிறதில்லே.''

''செய்யாமே?''

''வெய்யிலிலே வரும்போதெல்லாம் குடையை மடக்கி வச்சுட்டு வருவாரு. மரத்தடிக்கு வந்ததும் குடையை விரிச்சுக்குவாரு.''

''ஏன் தாத்தா அப்படி? அப்புறம் சுடுகிற மணலிலே செருப்பைக்கையில் சுமந்துக்கிட்டு வந்து, தண்ணீரிலே நடக்கறப்போ மட்டும் காலிலே மாட்டிக்குவாரா?'' — என்று கேட்டான்.

'பளீ'ரென்று அரவிந்தன் மீது முதுகிலே ஒரு ஷொட்டு விழுந்தது.

''குட்டிப் பயல். ஆனாலும் கெட்டிப் பயல்'' — என்னும் பாராட்டும் கிடைத்தது.

ஷொட்டு, சற்று பலமாக விழுந்து வலித்தது என்றாலும், 'கெட்டிப் பயல்' எனும் பட்டம் கிடைத்ததால் வலி அவ்வளவாகத் தெரியவில்லை.

பேச்சு பேச்சாக இருக்க, நடையும் தொடர்ந்தது.


மெல்ல, தன் சந்தேகத்தை அரவிந்தன் கேட்டான்.

''அது ஏன் தாத்தா, மரத்துக்கு அடியிலேமட்டும் அவர் குடையை விரிச்சுக்கணும்? தண்ணீருக்குள் நடக்கறப்போமட்டும் அவர் பாதரட்சைகளை மாட்டிக்கணும்?''

இப்போது பெரியவருக்குக் கோபம் வரவில்லை. மாறாக, அரவிந்தன்மேல் ஓர் அன்பு ஏற்பட்டிருந்தது. அதனால் இரகசியமாக, அதே சமயம் பயபக்தியோடு அவனுக்கு மட்டுமே கேட்கு மாறு விஷயத்தை விளக்கினார்.

''மரக்கிளைகளில் பறவைகள் உட்கார்ந்திருக்குமாம். கீழே நடக்கும் போது பறவைகள் எச்சமிட்டால்?





## எலிக்குப் பயந்த யானை!

❋ யானை தூங்கும்பொழுது குறட்டை விடும். நிஜமாகவே இவைகளுக்கு எலிகளைக் கண்டால் பயம். பெண் யானை, குட்டிப் போடும் பொழுது மற்றொரு பெண் யானையை உதவிக்கு அழைத்து வரும்.

❋ மான்களுக்கு உப்பு மிகவும் பிடிக்கும். அதனால்தான் வன விலங்கு புகலிடங்களில் சில இடங்களில் உப்பு கொட்டி வைத்திருப்பார்கள்.

❋ பாண்டா கரடிக்கு மிகவும் பிடித்த உணவு மூங்கில் தழை.

❋ போர்னியோ தீவில் இருக்கும் ஒரு வகைக் குரங்குக்கு (Proboscis monkey) நீளக் கத்தரிக் காய் மாதிரி 4 அங்குல நீள மூக்கு உண்டு. ஆண் குரங்குக்கு இது மேலும் வளர்ந்து சில சமயங்களில் வாயைக்கூட மறைத்து, கோமாளித்தனமான தோற்றத்தைக் கொடுக்கும்.

❋ கொரில்லா சாந்தமான, பயந்த சுபாவமுடையது. மனிதர்களைக்கண்டால் பயந்து ஒளிந்து கொள்ளுமே தவிர தாக்காது.

-ஜயா வி. ராமன்

அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளத்தான் அந்தச் சாமியார் மரங்களின் அடியில் குடைபிடித்துக் கொள்கிறாராம்!''

இப்படிப் பெரியவர் சொன்னதும், அரவிந்தன், ''அடேடே அப்படியா? அவர் பாதரட்சைகளை வெட்டவெளிப் பொட்டலில் நடக்கும்போது ஏன் போட்டுக் கொள்ளவில்லை என்பது எனக்குத் தெரியுது தாத்தா. பொட்டலில் கிடக்கும் கல்லும் முள்ளும்தான் கண்ணுக்குத் தெரியுமே! தண்ணீருக்குள் இறங்கும்போது அவை தெரியாது. அதனாலே பாதரட்சைகளைப் போட்டுக் கொள்கிறார். அப்படித்தானே தாத்தா?'' என்று கேட்டதும் தாத்தாவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை!

தான் எதுவும் சொல்லாமலே இவ்வளவு விஷயமும் இவன் தெரிந்து கொண்டிருக்கிறானே என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

ஆனால்,

அரவிந்தனுக்கு மட்டும் வேறொரு சந்தேகம் உறுத்தியது.

மரத்துக்கு அடியில் வரும்போது மட்டும் குடையை விரித்துக்கொள்ளும் அந்தச் சாமியார், மற்ற இடங்களிலும், அந்தக் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு வந்தால் என்ன?

தண்ணீருக்கு அடியில் செருப்புகளை மாட்டிக் கொள்பவர், மற்ற இடங்களிலும் அவற்றை மாட்டிக் கொண்டால் என்ன?

தன் இந்தச் சந்தேகத்தை வெளிப்படுத்தினால், அந்தப் பெரியவரின் மகிழ்ச்சி மாறி விடுமோ என்ற பயத்தில் தன் ஐயப்பாட்டை மனத்துக்குள்ளேயே அழுத்தி வைத்துவிட்டான் அரவிந்தன்.

நடந்து நடந்து கொ. க. பட்டியை நெருங்கி வந்து விட்டார்கள். தூ...ரத்தில் வரும்போதே, ஊர், திருவிழாக் கோலம் பூண்டிருப்பது தெரிந்தது. ஜனவெள்ளம்! சந்தை இரைச்சல்!

''இன்றைக்கு வெள்ளிக்கிழமை! அதுதான் இவ்வளவு கூட்டம்.'' என்றார் பெரியவர்

''வெள்ளிக்கிழமையிலே மட்டும் கூட்டம் அதிகமாக என்ன காரணம் தாத்தா?'' — அரவிந்தன் கேட்டான்.

''இன்னைக்குத்தான் அந்தச் சாமியாரு பச்சைத் தண்ணியிலே பொங்கல் வைப்பாரு. அவருக்கு அருள்வரும். கேட்ட வரமெல்லாம் தருவாரு''

என்று அடுக்கிக் கொண்டே போனார் பெரியவர்.

அரவிந்தனுக்கு மற்ற எதுவுமே மனத்தில் பதியவில்லை.

பச்சைத் தண்ணீரில் பொங்கல் வைக்கிறதா? அப்படீன்னு..?

தீவிரமாக இதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே வந்தான்.

ஊரின் நுழைவாயில் பக்கம் ஒரு சிறு கண்மாய். கண்மாய்க் கரையிலே பெரிய ஆலமரம். அந்த ஆலமரத்தின் அடியில்தான் அந்தச் சாமியார் அமர்ந்திருக்க வேண்டும். கூட்டம் அங்கேதான் நெருங்கிக் கொண்டிருந்தது. மற்ற இடங்களிலும் கொத்துக் கொத்தாகச் சிதறி நின்று கொண்டிருந்தார்கள்.

அரவிந்தன் பெரியவருடன் அந்தக் கண்மாய்க்குப் போய்ச் சேர்ந்த சமயம்.

திடீரென்று பெண்கள் குலவை இட்டனர் மொத்தக் கூட்டமும், 'அரோகரா! அரோகரா!' எனக் கோஷமிட்டது

கழுத்திலிருந்து கால் வரை பெரிய சட்டையை மாட்டிக் கொண்டிருந்த அந்த நீள தாடிச் சாமியார்,

ஒரு மண் கலயத்தை எடுத்து மரத்துக்குச் சற்றுத் தூரத்தில் வைத்தார். அரவிந்தன் முண்டி நுழைந்து பார்த்தான். கலயத்தில் அரிசி இருந்தது.

கலயத்தை வைத்தபின் அதைச் சுற்றிக் கோலமிட்டார்; ஏதோ முணுமுணுத்தார் பின் ஆவேசம் வந்தவர் போல 'சங், சங்' என்று குதித்தவாறே கலயத்தைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு கண்மாயின் நடுப்பகுதிக்கு ஓடினார்.

இடுப்பளவு தண்ணீரில் நின்று மெதுவாகத் தன்னைத் தானே மூன்று முறை சுற்றினார்.

ஜனநெரிசல் தாங்க முடியவில்லை. அரவிந்தன், மெதுவாக அந்தச் சாமியார் அமர்ந்திருந்த அந்த ஆலமரத்தின் மேல் ஏறி அடிக்கிளையில் உட்கார்ந்து கொண்டான்.

சாமியார் சற்று நேரம் ஆடி, பின் குபுக்கெனத் தலைக் கலயத்துடன் தண்ணீரில் மூழ்கினார்.

அவர் எழுந்தபோது, அந்தக்கலயத்திலிருந்து 'குபுகுபு'வென ஆவி வந்தது. அரிசி பொங்கி வழிந்தது. பார்த்த மக்கள் எல்லோரும் பரவசத்தால் கன்னத்தில் போட்டுக்கொண்டனர். 'அரோகரா!' கோஷம் வானைப் பிளந்தது.

அரவிந்தனுக்கு உண்மையிலேயே கடவுளிடத்தில் பக்தி உண்டு. மகான்களிடத்தில் மரியாதை உண்டு.

இந்தச் சாமியாரின் செயலில் ஏதோ ஒரு சூது இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

'உண்மையிலேயே இந்தச் சாமியார் மந்திர சக்தி உள்ளவர்தானா?'

யோசனையுடன் அவன் மரத்தை விட்டுக் கீழே இறங்கினான். இறங்கிய போது அவன் கால் எதிலோ இடறியது. கவனித்தான்.

கோணிச் சாக்கு.

சாக்கில் என்ன?

மெதுவாகத் திறந்து பார்த்தான். சூளையிலிருந்து கொண்டுவந்த சுண்ணாம்புக்கல்!

பள்ளியில் படித்த அறிவியல் பாடம் அவன் மனத்தில் பளிச்சிட்டது.

சுட்ட சுண்ணாம்புக்கல், தண்ணீர் பட்டால் ரசாயன மாற்றமடைந்து கொதித்துப் பொங்குமே!

அந்தக் கலயத்தில், அரிசிக்கு அடியில்... சுட்ட சுண்ணாம்புக்கல்லா?

அரவிந்தனுக்குப் புரிந்து விட்டது. பச்சைத் தண்ணீரில் பொங்கல் பொங்கிய மர்மம்!

மற்ற மக்களுக்கு?

அடுத்த வெள்ளிக்கிழமை அங்கு வந்து பானையிலிருந்து ஆவி வரும் மர்மத்தை அம்பலப்படுத்துவது என முடிவு செய்துகொண்டு ஊருக்குத் திரும்பினான் அரவிந்தன்!

---



## பூவும் பழமும்

ஒரு பூவிலிருந்து ஒரு பழம்தான் உண்டாகும். அது மாம்பழம்.

ஒரு பூவிலிருந்து பல பழங்கள் உண்டாகும். அது சீத்தாப் பழம்.

ஒரு பூங்கொத்திலுள்ள பல பூக்கள் ஒன்று சேர்ந்து ஒரே ஒரு பழத்தைக் கொடுக்கும். பலா, அன்னாசி, அத்தி, ஆல் முதலியவை இந்த வகையைச் சேர்ந்தவை.



# பிருந்தாவனக் கதையரங்கம்

## குதிரை கொடுத்த உதை

ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி ஒருநாள் இரவு ஒரு சத்திரத்தில் தங்கினார்.

தம்முடைய குதிரையைச் சத்திரத்து வாசலில் கட்டி வைத்தார்.

சத்திரத்துக் காவல்காரனுக்குக் குதிரையின் வால் முடி தேவைப்பட்டது. ஆகவே, அதன் வால் முடியில் ஒன்றைப் பறிக்க முயன்றான்.

இதை வியாபாரி பார்த்து விட்டார். ''இது பொல்லாத குதிரை. வால் முடியைப் பறித்தால் உதைத்து விடும்'' என்று கூறினார்.

ஆனால், காவல்காரன் எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. மீண்டும் ஒரு முடியைப் பிடித்து இழுத்தான்.

உடனே வியாபாரி ''குதிரைவாலில் முடியைப் பறிக்காதே! அது பொல்லாத குதிரை! உதைத்தால் பல் போய் விடும்'' என்று கத்தினார். கத்திவிட்டு உள்ளே போய் விட்டார்.

அவர் போனதும் காவல்காரன் மீண்டும் குதிரையின் வால் முடியைப் பிடித்து இழுத்தான்.

குதிரைக்கு வலி தாங்க முடியவில்லை. 'படார்' என்று பின் காலால் உதைத்து விட்டது. காவல்காரன் நான்கு குட்டிக்கரணம் போட்டு, தூரப் போய் விழுந்தான். குதிரை உதைத்ததில் அவனுக்கு இரண்டு முன் பற்களும் உதிர்ந்து விட்டன!

உடனே, ஊர்க்காவலர்களிடம் சென்று புகார் செய்தான். ''ஒரு வியாபாரி பொல்லாத குதிரை ஒன்று கொண்டு வந்திருக்கிறான். அது என்னை உதைத்து விட்டது. எனக்கு இரண்டு பல் போய் விட்டது. இதற்கு அந்த வியாபாரியிடம் நஷ்டஈடு வாங்கிக் கொடுங்கள்'' என்று முறையிட்டான்.

மறுநாள் காலையில், காவலர்கள், அந்த வியாபாரியைக் கைது செய்தார்கள். நீதிபதி முன்னே கொண்டு போய் நிறுத்தினார்கள். காவல்காரனும் அங்கே வந்திருந்தான்.

''உன் குதிரை இவரை ''காவல்காரனை'' உதைத்து விட்டது என்றும், இதனால் அவனுக்கு இரண்டு பற்கள் உதிர்ந்து விட்டன என்றும் கூறுகிறான் இது உண்மையா?'' என்று நீதிபதி கேட்டார்.

இதற்கு வியாபாரி பதில் சொல்லவில்லை. ஊமை போல நின்றான்.

நீதிபதி மீண்டும் கேட்டார். வியாபாரி பதில் சொல்லவேயில்லை.

நீதிபதி மூன்றாம் முறையும் கேட்டார். வியாபாரி வாயைத் திறக்கவேயில்லை.

''இந்த வியாபாரி ஊமையா?'' என்று நீதிபதி கேட்டார்.

உடனே காவல்காரன், ''இல்லை எஜமான். இவன் நன்றாகப் பேசுவான்.'' என்றான். பிறகு, வியாபாரியின் பக்கம் திரும்பி, ''நீதிபதி கேட்கிறார். பதில் சொல்லேண்டா, குதிரை வாலின் முடியைப் பறிக்காதே! பொல்லாத குதிரை! ''பட்'' என்று உதைத்தால் பல் போய்விடும் என்று நேற்று மட்டும் என்னிடம் கத்தினாயே! இப்பொழுது வாயிலே கொழுக்கட்டையா இருக்

கிறது! வாயைத் திறந்து, நீதிபதியின் கேள்விக்குப் பதில் சொல்!'' என்று இரைந்தான், காவல்காரன்.

அவன் சொன்னதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த நீதிபதி, ''பொல்லாத குதிரை — வால் முடியைப் பிடுங்கினால் உதைக்கும் — உதைத்தால் பல் போகும் என்று முதலிலேயே உன்னை வியாபாரி, எச்சரித்தாரா? எச்சரித்தும் நீ ஏன் குதிரை வால் முடியைப் பறித்தாய்? அதனால் தான் உன் பல் போயிற்று! உனக்குச் சரியான தண்டனை தான்!'' என்று கூறினார். வியாபாரியை விடுதலை செய்தார்.

''உண்மை அவன் வாயாலேயே வெளிவரட்டும் என்று தான் நான் ஊமை போல இருந்தேன். இதற்காக என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும்'' என்று வியாபாரி கூறினார். நீதிபதிக்கு வணக்கம் செலுத்திவிட்டு வெளியேறினார்.

-நா. சிந்துகுமார் (4764) திருவட்டாறு



## உழைத்துச் சம்பாதித்தது

ஒரு ஊரில் பணக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு மகன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் சோம்பேறியாக வாழ்ந்து வந்தான். தினமும் உண்பதும், உறங்குவதுமாகக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான்.

''ஏண்டா! இப்படிச் சோம்பேறியாக வாழ்ந்து வருகிறாய்? போய்க் கொஞ்ச நேரமாவது உழைக்கக் கூடாது?'' என்று கேட்டார் அவன் அப்பா.

''ஏன் நான் உழைக்கணும்? நம்மிடம் தான் ஏராளமான சொத்து இருக்கிறதே! இது என்னுடைய பேரக் குழந்தை வரைக்கும்போதும்'' என்று கூறிவிட்டுப் படுத்து விட்டான்.

இவ்வாறே பல நாட்கள் ஓடின. திடீரென ஒருநாள் அவனுடைய அப்பா ஒரு வெடிகுண்டைப் போட்டார். ''நீ இப்படியே சோம்பேறியாகவே இருந்தால் என் சொத்துக்கள் அனைத்தையும் அரசாங்கத்திற்கு எழுதி வைத்து விடுவேன். இன்னும் மூன்று நாள் தவணை தருகிறேன். நீ எங்கேயாவது போய் உழைத்து ஒரு பத்து ரூபாயாவது சம்பாதித்து வர வேண்டும். இல்லையென்றால் என்னுடைய சொத்து எல்லாவற்றையும் நான் சொன்னபடி எழுதி வைத்து விடுவேன்'' என்று கூறிச் சென்று விட்டார். அவர் சென்றவுடன் மீண்டும் படுக்கைக்குச் சென்று விட்டான்.

அவனுடைய அம்மா அங்கு வந்து, ''என்னப்பா உன்னுடைய அப்பா இப்படிச் சொல்லிவிட்டுச் செல்கிறார், மறுபடியும் தூங்க வந்து விட்டாயே! இது உனக்கே நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டாள். ''அப்பா சும்மா சொல்லிவிட்டுப் போகிறார். நீங்கள் ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்?'' என்று கூறிவிட்டான் மகன்.

''உன்னுடைய அப்பாவைப் பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும். அவர் உண்மையிலேயே சொன்னபடி செய்து விடுவார்... சரி உன்னைக் காப்பாற்ற ஒரு காரியம் செய்யலாம். நீ உடனே எழுந்திரு. நான் ஒரு பத்து ரூபாயையும் சோற்று மூட்டையையும் தருகிறேன். நீ அவற்றை எடுத்துக் கொண்டு ஊர்க் கோடியிலுள்ள மலையடிவாரத்திற்குச் சென்று மாலையில் வீட்டுக்கு வந்து உன் அப்பாவிடம் நான் உழைத்துச் சம்பாதித்தது என்று கூறிப் பத்து ரூபாயைக் கொடு'' என்றாள் தாய்.

''நான் எப்படி அவ்வளவு தூரம் நடப்பேன்?'' என்று நழுவினான். ஒருவாறு சமாதானப்படுத்தி அவனை அனுப்பிவிட்டாள் தாய். தாய் கூறியது போலவே மலையடிவாரத்தில் தூங்கி விட்டு, சோற்றையும் தின்றுவிட்டு மாலையில் வீடு வந்து சேர்ந்தான். தந்தையிடம் அவன் வைத்திருந்த பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தான். அவனை மேலும், கீழும் பார்த்து விட்டு அந்த நோட்டை அவர் கிழித்துக் கீழே போட்டார். அவன் அப்படியே மலைத்துப் போய் நின்று விட்டான். உண்மையிலேயே நீ உழைத்திருந்தால் உன்னுடைய உடம்பிலே கொஞ்சமாவது சோர்வு தெரியும். எப்போதும் போல் இருக்கிறாயே! உழைத்தேன் என்று பொய்

சொல்லுகிறாய். இதை நான் நம்ப மாட்டேன்'' என்று கூறிவிட்டார். சமையல் கட்டிலிருந்த தன் தாயிடம் இதை அவன் கூறினான். ''நான் என்ன செய்வேன்? எப்படிச் செய்தாலும் உன் அப்பா கண்டு பிடித்து விடுவார். எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றுகிறது. நாளை இது போல் வரும்போது வேகமாக ஓடிவா. அப்பொழுது முடியெல்லாம் பறக்கும். வியர்வை கொட்டும். அதைப்பார்த்து உண்மையிலேயே நம்முடைய பிள்ளை உழைத்து இருக்கிறது என்று நினைத்துக் கொள்வார்!'' என்று யோசனை கூறினாள் அம்மா.

அதுபோலவே மறுநாள் காலையில் சென்று மாலையில் வேகமாக ஓடிவந்தான். தந்தையிடம் சென்று அந்தப் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தான். அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அதையும் கிழித்துக் கீழே எறிந்தார். ''நீ உண்மையிலேயே உழைத்திருந்தால் இவ்வாறு வேகமாக ஓடிவர முடியாது. என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? அது என்னிடம் நடக்காதடா. என் முன்னே நிற்காதே! போய் விடு!'' என்று கடுஞ்சொற்களால் திட்டி அனுப்பி விட்டார்.

நடந்ததைத் தன் தாயிடம் சென்று கூறினான். ''இனிமேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. அவர் சொன்ன மூன்று நாட்களில் இரண்டு நாட்கள் கழிந்து விட்டன. மிஞ்சியிருப்பது நாளை ஒருநாள்தான், அதனால் எங்கேயாவது சென்று உழைத்துச் சம்பாதித்துக் கொண்டு வா'' என்று கூறிவிட்டாள்.

மறுநாள் காலையில் தன் தாயின் ஆசியுடன் வேலை தேடிச் சென்றான். கொஞ்ச தூரம் சென்றவுடன் ஓர் இடத்தில் கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது. அங்கு சென்று தானும் ஒருவனாய்க் கூலி வேலை செய்து மாலையில் பத்து ரூபாய் கூலியுடன் திரும்பித் தந்தையிடம் நோட்டைக் கொடுத்தான். முன்போல ஏற இறங்கப் பார்த்துவிட்டு, அந்த நோட்டைக் கிழிக்கப் போனார். உடனே இவன் பாய்ந்து சென்று ''அப்பா, அப்பா, கிழிக்காதீர்கள். இது நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது'' என்று கூறித் தடுத்தான்.

அதைக் கண்ட தந்தை ஆனந்தமடைந்தார். ''இன்று நீ உண்மையிலேயே உழைத்திருக்கிறாய். ஏனென்றால் நீ உழைத்துப் பெற்ற காசானதால், உனக்கு அதன் அருமை தெரிந்திருக்கிறது. இல்லாவிட்டால், நான் நோட்டைக் கிழித்தபோது பேசாமல் பார்த்துக் கொண்டே இரண்டு நாளும் இருந்தாயே, அப்படியே இருந்திருப்பாய்'' என்று கூறி, மறுநாளே உழைப்பின் பலனை அறிந்த தன் மகனுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து மேன்மேலும் உழைக்கக் கற்றுக் கொடுத்தார்.

-பா. ராஜா (3205) பூதலூர்



## திருடன் தேடிய பணம்

ஓர் ஊரில் ஒரு வணிகன் இருந்தான். அவன் ஒருமுறை வெளியூர் சென்று தன் வியாபாரத்தை நடத்தி விட்டுக் காட்டு வழியே தனது ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்போதெல்லாம் வாகனங்கள் கிடையாது. நடந்தே தான் செல்ல வேண்டும்.

வழியில் ஒரு மனிதனைச் சந்தித்தான். அம்மனிதன் வணிகனிடம், ''நீங்கள் எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்கவே வணிகனும் தான் ஒரு ஊரில் வியாபாரம் நடத்தி விட்டுத் தனது ஊருக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகக் கூறித் தனது ஊரையும் சொன்னான். உடனே அம்மனிதன், ''அடேடே! நானும் உங்கள் ஊருக்கு அடுத்த ஊர்க்காரன் தான். இந்தக் காட்டுப் பாதையில் திருடர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எனவே, நாம் இருவரும் சேர்ந்து போனால் பயம் இல்லை'' என்று கூறினான். இருவரும் சேர்ந்தே தம் பயணத்தைத் தொடங்கினார்கள்.

இரவு வந்ததும் உணவு முதலியவைகளை முடித்துக் கொண்டு இருவரும் ஒரு சத்திரத்தில் படுத்து உறங்கினர். வணிகனுடன் கூட வந்திருப்பவனோ ஒரு திருடன்! அவன் வணிகனிடமிருந்து பணத்தைத் திருட எண்ணி அவனது நண்பன் போல நடித்து அவன் கூடவே வந்திருக்கிறான். வணி

கலை அடித்துப் போட்டு விட்டு அவனிடமிருக்கும் பணத்தை அத்திருடனால் அபகரிக்க முடியாது. ஏனெனில் வணிகன் மிகுந்த பலசாலியாகவும், கையில் ஒரு தடியை உடையவனாகவும் இருந்தான். எனவே வணிகனைச் சூழ்ச்சியால் தான் வெல்ல முடியும் என்று எண்ணியே அவனிடம் நண்பன் போல் நடித்து அவன் இரவில் உறங்கும்போது திருடலாம் என்று திட்டமிட்டே அவன் கூட வந்திருக்கிறான்.

அன்று இரவு வணிகன் படுத்ததும் சிறிது நேரம் கழித்து மெல்ல எழுந்து வணிகன் தூங்கி விட்டானா என்று பார்த்தான். வணிகன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். இதைப் பயன்படுத்திக் கொண்டு திருடன் வணிகனது பையை அலசலானான். பையில் ஒன்றிரண்டு துணிகள் மட்டுமே இருந்தன. அவன் துணிகளை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். பணம் எங்கும் தென்படவில்லை. அதைக் கண்ட திருடன், ''என்ன இது இவ் வணிகன் வெளியூர் சென்று வியாபாரம் நடத்தி விட்டு அல்லவா வருகிறான்? இவனிடம் நிறையப் பணம் இருக்க வேண்டுமே! எனவே இவன் பணத்தை வேறு எங்காவது வைத்திருக்க வேண்டும். நாளை இவன் பணத்தை எங்கு வைத்திருக்கிறான் என்று கண்டு கொள்ளலாம். பிறகு அதனை அபகரித்துக் கொள்ளலாம்.' என்று மனத்தில் நினைத்துக்கொண்டு படுத்து விட்டான். மறுநாள் பகலில் எவ்வளவோ முயன்றும் அவன் பணம் வைத்திருக்கும் இடத்தை அறிய முடியவில்லை.

மறுநாள் மாலை, அவர்கள் வணிகனின் ஊரை அடைந்தனர். வணிகன் அத்திருடனிடம் ''எனது ஊர் வந்து விட்டது. நீ என் வீட்டில் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டு சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்று கூறினான். வணிகன் அவனைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு கொடுத்து உபசரித்தான். திருடன் தனது ஊருக்குக் கிளம்பும் முன் வணிகன் அவனிடம் ஐந்து ரூபாய் கொடுத்து, ''இதனை நீ போகும் போது வழிச் செலவுக்காக வைத்துக் கொள்'' என்று கூறினான்.

''என்னடா இது! நாம் எவ்வளவோ தேடிப் பார்த்தும் பணத்தைக் காணவில்லையே! இவன் எப்படி எனக்கு ஐந்து ரூபாய் கொடுத்தான்.!'' என்று எண்ணி ஆச்சரியப்பட்டான்!

அவன் வணிகனிடம் ''நீங்கள் எப்படி எனக்கு ஐந்து ரூபாய் கொடுத்தீர்கள்'' என்று கேட்டான்.

''எனக்கு வியாபாரத்தில் கிடைத்த லாபத்திலிருந்து உனக்குக் கொடுத்தேன்''

''நீங்கள் பணத்தை உங்களுடனே தான் கொண்டு வந்தீர்களா?''

''ஆமாம்.''

''பணத்தை எங்கு வைத்திருந்தீர்கள்?''

''அதைப் பற்றி உனக்கென்ன? எதற்காகக் கேட்கிறாய்?''.

அதற்குத் திருடன், ''ஐயா என்னை மன்னித்து விடுங்கள். நான் உண்மையைக் கூறி விடுகிறேன். நான் ஒரு திருடன். உங்களிடமிருந்து பணத்தைத் திருடவே, நண்பன் போல நடித்து உங்களுடன் வந்தேன். நீங்கள் இரவில் உறங்கியதும் உங்களது பை முதலியவைகளைத் தேடிப் பார்த்து நான் ஏமாந்து விட்டேன். இப்பொழுது கூறுங்கள். உங்கள் பணத்தை எங்கு வைத்திருந்தீர்கள்?'' என்று கேட்டான்.

வணிகன் சிரித்துக் கொண்டே, ''நான் இனிமேல் திருட மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடு'' என்றான்.

திருடனும் அவ்வாறே சத்தியம் செய்தான்.

வணிகன் திருடனிடம் பின்வருமாறு கூறினான்:

''நீ இரவில் எழுந்து தண்ணீர் குடிக்கச் சென்ற போது உன் தலையணைக்கு அடியில் வைத்தேன். நீ திருடன் என்பதை உன்னைப் பார்த்தவுடனேயே தெரிந்து கொண்டேன். காலை எழுந்ததும் நீ காலைக் கடனை முடிக்கச் செல்லும் போது தலையணையிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டேன். நீயோ இரவில் உன் தலையணை அடியில் பார்க்காமல் மற்ற எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தாய். நீ உன் தலையணையடியில் நான் பணத்தை வைத்திருக்க மாட்டேன் என்று நினைப்பாய் என்று எனக்குத் தெரியும்''

''நான் செய்த சத்தியத்தின்படி இனி திருட மாட்டேன். உழைத்துப் பணம் சம்பாதிப்பேன்'' என்று கூறி விடை பெற்றான்.

**-எஸ். ஸ்கந்தகுமார் (4104) மதுரை**

## காவல் தெய்வம்

**ம**துரையில் போடி நாயக்கனூர் என்ற சிறிய ஊரில் என் பெரியப்பாவின் வீட்டிற்குக் கோடைவிடுமுறைக்கு நான் சென்றிருந்த பொழுது என் பெரிய அண்ணன் கூறிய கதை இது!



ஒவ்வொரு ஊரின் எல்லைக்கும் காவல் தெய்வம் உண்டு. அதேபோல் போடிநாயக்கனூர் வடக்குப் பாகத்தை மீனாட்சி அம்மை ஆட்சி செய்து வந்தாள். அந்த மலையை மக்கள் வடமலை நாச்சிமலை என்றே குறிப்பிடுவார்கள். மலையில் மிகவும் அழகிய சிறிய கோவில் உண்டு.

முன்னொரு காலத்தில் வடிவம்மை என்ற ஏழைப்பெண் வசித்து வந்தாள். அவளுக்குக் குழந்தை கிடையாது. திருமணம் நடந்து 12 வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லாததால் அவளை அனைவரும் 'மலடி மலடி' எனத் தூற்ற ஆரம்பித்தனர். இதனால் மனம் நொந்த வடிவம்மை வடமலை நாச்சியிடம் சென்று ''தாயே எனக்கு ஏற்பட்ட இந்த மலடி என்ற பெயர் நீங்க வேண்டும். எனக்குக் குழந்தை பிறந்த பிறகு அது இறந்து போனாலும் கவலை இல்லை!'' என்று வேண்டிக் கொண்டாள்.

வடிவம்மையின் வேண்டுகோளின் படி அம்மனின் அருளால் அவள் ஓர் அழகிய பெண் குழந்தையை ஈன்றெடுத்தாள். அந்தக் குழந்தைக்கு அகிலாண்டேஸ்வரி என்ற பெயர் வைத்துச் செல்லமாக வளர்க்க ஆரம்பித்தாள். வடிவம்மை எப்பொழுதும் விறகு பொறுக்குவதற்கு வடமலை நாச்சிமலைக்குத் தான் செல்வாள் அன்றும் அவ்வாறு செல்லும் பொழுது தன் குழந்தை அகிலாண்டேஸ்வரியையும் தூக்கிச் சென்றாள்.

மலையில் ஏறியதும் குழந்தையைக் கோவில் அருகில் உள்ள மரத்தில் தொட்டில் கட்டிப் படுக்கப்போட்டு விட்டு விறகுகளைச் சேகரிக்க ஆரம்பித்தாள். விறகுகள் நிறையச் சேர்ந்தவுடன் விறகுக் கட்டைத் தலையில் தூக்கி வைத்தவள், விறகின் சுமையில் தன் குழந்தை இடுப்பில் இருப்பதாகவே எண்ணி மலையில் இருந்து இறங்கி வீடுநோக்கிச் செல்ல ஆரம்பித்தாள். வீட்டை அடைந்து விறகுச் சுமையைக் கீழே இறக்கிய போது தான், குழந்தை தன் இடுப்பில் இல்லாதது கண்டு துடிதுடித்தாள், வடமலைநாச்சிமலை நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

வடிவம்மை மலையின் அடிவாரத்தை அடையும் போதே நன்கு இருட்ட ஆரம்பித்து விட்டது. வடிவம்மை அதைப் பொருட்படுத்தாமல் குழந்தையை எண்ணியபடி மலையில் ஏற ஆரம்பித்தாள். அப்பொழுது ஓர் இனிய தேவகானத் தாலாட்டு மலையில் கேட்க ஆரம்பித்தது. ஒருகணம், வடிவம்மை அந்த இசையில் மயங்கி நின்றாள். பிறகு, மீண்டும் கோவில் நோக்கி நடக்க ஆரம்பித்தாள். எப்பொழுதும் இருண்டு கிடக்கும் மலை அன்று ஜெகஜ்ஜோதியாய் மின்னியது! மலையே மரகதமலையாகக் காட்சி அளித்தது!

இவை அனைத்தையும் ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் பார்த்தபடியே, தன் குழந்தை படுத்து இருந்த இடத்தை அடைந்தவள் திகைத்து நின்று விட்டாள். 'நாம் கனவுதான் காண்கிறோமா?' என்று எண்ணிஎண்ணி மீண்டும் கண்களைக் கசக்கிப் பார்த்தாள். 'ஆம்' அவள் காண்பது உண்மை என்று விளங்கியது. எதிரில் மிகமிக அழகிய தேவதை ஒன்று அந்த இனிய தாலாட்டைப் பாடியபடி தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தது.

வடிவம்மை தேவதையை நோக்கி, ''தாயே, நீ யார்? என நான் தெரிந்து கொள்ளலாமா? என் குழந்தையைத் தாலாட்டும் அளவிற்கு நானும் என் குழந்தையும் பாக்கியம் செய்தவர்களா? மேலும் நீ இவ்வளவு நேரம் என் குழந்தையைப் பாதுகாத்துத் தந்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றி, தாயே!'' எனக் கூறினாள்.

அப்பொழுது அவளை நோக்கித் திரும்பிய அந்தத் தேவதை, ''நீ யார்?'' எனக் கேட்டது. வடிவம்மை உடனே, ''நான் இந்த குழந்தையின் தாய்'' எனக் கூறியது கேட்ட தேவதை, ''நீ உன் குழந்தையை என் மலையில் மறந்து எப்பொழுது விட்டுச் சென்றாயோ, அப்பொழுதே குழந்தை, என் குழந்தை ஆகிவிட்டது. ஒரு தாய்க்குத் தன் குழந்தையை எப்பொழுது மறந்து செல்லும் நிலை ஏற்படுகிறதோ, அப்பொழுதே அந்தக் குழந்தையை முதலில் யார் எடுத்தாலும் அவர்களுக்கே சொந்தமாகி

விடுகிறது. எனவே குழந்தை எனக்கே உரியது. இனி, குழந்தையை நீ எடுத்துச் செல்ல முடியாது. நீ போகலாம்'' எனக் கூறியது.

தேவதை கூறியதைக் கேட்டவள், ஒருகணம் செயலிழந்து நின்று விட்டாள். ''என் குழந்தையை, நான் பெற்ற குழந்தையைக் கொடுக்க மறுக்கும் நீ யார்?'' என வினவினாள்.

''நான் யார் எனத் தெரிந்து கொள்வதற்கு முன், உனக்கு உன் குழந்தை அவசியம் தேவைதானா என யோசித்துப் பார். குழந்தை பிறப்பதற்கு முன்பு நீ என்ன வேண்டினாய்? என்னுடைய மலட்டுத்தன்மை நீங்கினால் போதும். அதாவது ஒரு குழந்தை பிறந்து இறந்து போனாலும் பரவாயில்லை. மலடி என்ற பெயர் நீங்கினால் போதும் என்று வேண்டினாய். உன் மலட்டுத்தன்மை நீங்கி விட்டது. இனி உனக்குக் குழந்தை கிடையாது. நீ போகலாம்'' எனக் கூறி விட்டது தேவதை.

''தாயே நான் நினைத்தது எல்லாம் உண்மை. ஆனால், இப்போது குழந்தையின் அருமையை உணர்ந்துகொண்டேன். என் உயிரே போனாலும் கிடைத்தற்கரிய இந்த மாணிக்கக் குழந்தையை நான் விட்டுச் செல்ல மாட்டேன்'' என்று கதறி அழுதாள். அப்பொழுது அந்த மலையே அதிரும்படியாக, அந்தத் தேவதை சிரிக்க ஆரம்பித்தது. ''உனக்கு, உன் குழந்தைதானே வேண்டும்? சரி, எடுத்துச் செல் உன் குழந்தையை'' என்று கூறியபடி மறைந்தது.

வடிவம்மை குழந்தையைத் தூக்கும் ஆர்வத்தில் தொட்டில் அருகில்சென்று குழந்தையை எடுக்கக் குனிந்தாள். அங்கு குழந்தையின் குடல் கிழிபட்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு அலறிவிட்டாள். ''ஏ, காளியே, நீயே, உன் இரத்த வெறிக்கு என்னுடைய ஒரே குழந்தை தான்கிடைத்ததா? நீயெல்லாம் ஒரு காவல் தெய்வமா, பாதகி, உன்னை, உன் சிலையை என்ன செய்கிறேன் பார்'' என்று கூறியவள் கோவிலில் உள்ள சிலையை அசைத்துப் பெயர்த்து எடுக்க முயன்றாள். அது இயலாமல் போகவே, மிகவும் ஆங்காரமாக, ''இறந்த என் குழந்தையை ஊர் மக்களிடம் தூக்கிச் சென்று காண்பிக்கிறேன்'' என்று கூறியவள் தொட்டிலை நோக்கி விரைந்தாள்.

என்ன அதிசயம்! தொட்டிலில் குழந்தை அழகு ஓவியமாக எந்தவிதக் குறையும் இல்லாமல் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது. இதைக் கண்ட வடிவம்மை குழந்தையை எடுத்து இறுக அணைத்துக்கொண்டபடி கோவில் நோக்கி ஓடினாள். தெய்வத்தின் பாதத்தில் குழந்தையை வைத்து ''தாயே, இது என்ன சோதனை?'' என்று விம்மி அழுதாள்.

அப்பொழுது வெள்ளிக் காசுகள் சிதறியது போன்ற இனிய சிரிப்பலை மலையில் முட்டி மோதி எதிரொலித்தது.

இதைத் தொடர்ந்து அசரீரி கேட்க ஆரம்பித்தது. ''மகனே, நீ ஒரு குழந்தையின் அருமையையும், ஒரு தாய்க்கு உரிய பெருமையையும் சரியாக உணரவில்லை. இதை உணர்த்தவே இந்த விளையாட்டை நடத்தினேன். நீயும் உன் மகளும் எல்லாச் செல்வங்களும் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்வீர்கள்'' எனக் கூறி மறைந்தது. அப்பொழுது வடிவம்மை தன் மகள் அகிலாண்டேஸ்வரியைஎடுத்து அணைத்துக் கொண்டு தன் ஊரான போடி நாயக்கனூருக்குத் திரும்பினாள்.

-ஆர்: பழனிபிரபு (258) மயிலாடுதுறை



**சுரேஷின் அழுகை!**

''என்னடா இது கல்யாண வீட்டிலே அழைப்பைப் பார்த்துட்டு சுரேஷ் இப்படி அழுதுக்கிட்டிருக்கிறான்?''

''அந்த அழைப்பிதழிலே தங்கள் வரவை எதிர்பார்க்கும் உறவினர்களும் பந்துக்களும்னு போட்டிருந்ததைப் படிச்சேன் அதிலேயிருந்து எனக்கும் ஒரு பந்து வேணும்'னு அழுகிறான்!''

-ஆர். பி. ராஜ்

# வேலனும் பாலனும்

தண்ணிகை உலகநாதன்



**வே**லனும் பாலனும் நல்ல நண்பர்கள். வேலன் சென்னையில் படித்துக் கொண்டிருந்தான். பாலன் செங்கற்பட்டில் படித்துக்கொண்டிருந்தான். இரண்டு நண்பர்களும் விடுமுறை நாட்களில் சந்தித்துப் பழகுவார்கள்.

வேலன் தாய்மொழியாகிய தமிழில் சிறந்த அறிவு உடையவன். பிழை இல்லாமல் பேசவும் எழுதவும் வல்லவன். எவரேனும் பிழையாகப் பேசினாலோ, எழுதினாலோ அதை உடனே நல்ல தமிழில் திருத்துவான். பிழையான விளம்பரங்களைக் கண்டால் உரியவரிடம்சென்றுஅவற்றைத்திருத்திக் கொள்ளுமாறு வேண்டுவான். ஓய்வு நேரங்களில் இதை ஒரு தொண்டாகவே எண்ணிச் செய்து வந்தான். கடைக்காரர்களும் அரசு அலுவலர்களும் அவன் சொல்லுக்கு மதிப்பளித்துத் திருத்திக் கொள்வார்கள்.

விளம்பரத்தில் 'சிதம்பரம் தெருவு' என்று இருந்தால் தெருவு என்பதைத் தெரு என்று திருத்தச் சொல்வான். **'எண்ணை விர்க்கப்படும்'** என்று இருந்தால், **எண்ணெய் விற்கப்படும்**. என்று மாற்றி எழுதுமாறு கடைக்காரரைக் கேட்டுக் கொள்வான். **'உத்திரவன்னியில்** உள்ளே வரக் கூடாது' என்று சில அலுவலகங்களில் எழுதி இருப்பதைப் பார்த்து, **'உத்தரவு அன்றி** உள்ளே வரக் கூடாது' என்று திருத்தி எழுதும்படி வேண்டிக்கொள்வான்.

ஒருசமயம் அவனுடைய நண்பன் பாலன் சென்னைக்கு வந்து சில நாள்கள் அவனுடன் தங்கி இருந்தான். சென்னையில் பார்க்கத் தகுந்த இடங்களையும், காட்சிகளையும் வேலன் பாலனுக்குக் காட்டினான். பாலன் வேலனுடன் ஒரு வாரம் தங்கி இருந்தான். பிறகு விடைபெற்றுத் தன் ஊருக்குப் புறப்பட்டான்.

பாலன் செற்கற்பட்டுக்குப் புறப்படுவதற்கு முன் வேலனைப் பார்த்து, ''வேலா, நீயும் எங்கள் ஊருக்கு வந்தால் எங்கள் கிராமக் காட்சிகளைக் கண்டு மகிழலாமே! எங்கள் ஊரில் மரங்கள் அடர்ந்த தோப்புகள் 'குளு குளு'வென்று இருக்கும். நாம் அங்கே சென்று விளையாடலாம். எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மரம், செடி, கொடிகள் அழகாகப் பூத்துக் குலுங்குவதைக் காணலாம். காலையில் குயில் **கத்துவதையும்** காக்கை **கூவுவதையும்** கேட்கலாம். எங்கள் ஊருக்கு அருகில் உள்ள **நஞ்சை** நிலங்களையும் **புஞ்சை** நிலங்களையும் பார்க்கலாம். தோட்டக் கால்களில் **வண்டை**, **கத்திரி** போன்ற காய்கள் காய்த்திருப்பதையும் **பூசினிக்** கொடி படர்ந்திருப்பதையும் பார்க்கலாம். நீ கட்டாயமாக எங்கள் ஊருக் வரவேண்டும். என்ன சொல்கிறாய்'' என்று கேட்டான்.

அதற்கு வேலன், ''பாலா! நான் உங்கள் ஊருக்கு வருவதில் தடையே இல்லை. அடுத்த வாரமே வந்து அங்குள்ள காட்சிகளைக் காண்பேன். ஆனால், நீ இப்போது பேசிய பேச்சு வேடிக்கையாக இருக்கிறது. நாம் பேசும் போது வரும் பிழையான சொற்களை எழுதும்போதும் வந்து விடும். கட்டுரை எழுதும்போதும்

தேர்வு எழுதும்போதும் பிழையான சொற்களுக்கு, ஆசிரியர் மதிப்பெண் குறைத்து விடுகிறாரே, தெரியாதா?!' என்றான்.

பாலன், ''வேலா, அப்படி என்ன பிழையாகப் பேசிவிட்டேன்? விளக்கிக் கூறினால் திருத்திக் கொள்கிறேன்.'' என்று கூறினான்.

''குயில் **கூவுவது**, காக்கை **கரைவது** என்றே பேச வேண்டும். இவற்றைப் பெரியவர்கள் மரபுச் சொற்கள் என்று கூறுவார்கள். கழுத்தில் அணிய வேண்டிய வைர மாலையை இடுப்பிலும் கைவளைகளைக் காலிலும் அணிவது எப்படிப் பொருத்தமில்லையோ அப்படித் தான் இருக்கிறது உன் பேச்சு. மயில் அகவும், ஆந்தை அலறும் கிளி கொஞ்சும் எனப் பறவைகளின் ஒலிகளை முன்னோர் கூறிய முறையிலேயே கூறுவதுதான் மரபு ஆகும்.

''இவை போலவே சிங்கம் முழங்கும், யானை பிளிறும், புலி உறுமும், குதிரை கனைக்கும், கழுதை கத்தும், நரி ஊளையிடும் என்று பேசவேண்டும்.

''சிலர் 'நாய் குலைக்கிறது' என்று கூறுவர். அதை நாய் **குரைக்கிறது** என்றுதான் சொல்ல வேண்டும்.''

''அப்பப்பா! என்ன அருமையான விளக்கம்! உன்னையே வகுப்புத் தமிழாசிரியராக நியமித்து விடலாம்போல் இருக்கிறது!'' என்றான் பாலன்.

''இன்னும் கேள், பாலா'' என்று வேலன் மேலும் பேசத் தொடங்கினான்:

''நஞ்சை, புஞ்சை என்பது தவறு. அவற்றை நன்செய், புன்செய் என்று தான் சொல்ல வேண்டும். நன்மை செய் நன்செய். நன்மை மிகுந்த பயிர்கள் விளையும் நிலம் என்பது பொருள். நெல், கரும்பு முதலியவை நன்செய் நிலத்தில் பயிராகும். செய் என்பது விளைநிலம்.

''புன்மை + செய்=புன்செய்', சாதாரணப் பயன்களை அளிக்கக் கூடியது புன்செய் நிலம். இங்கு கம்பு, சோளம் முதலியவை பயிராகும்.


''**வண்டை** என்பதை வெண்டை என்றும், **கத்திரி** என்பதைக் **கத்தரி** என்றும் கூற வேண்டும்.

**பூசினி** என்பதில் பொருளே இல்லை. **பூசுணைக் கொடி** என்றே சொல்ல வேண்டும். சுணை என்பது சிறுமுட்கள். பூசுணைப் பூவில் மெல்லிய முட்கள் இருப்பதை நீ பார்த்திருப்பாய். அதனால் பூசுணைப்பூ, பூசுணைக்கொடி, பூசுணைக்காய் என்றே பேச வேண்டும்.''

''அடடா! என் பேச்சில் நீ எத்தனை தவறுகளைக் கண்டு பிடித்துத் திருத்திவிட்டாய். நான் இனிப் பேசும் போதும், எழுதும் போதும் கவனித்துப் பிழையில்லாமல் பேசுவேன்; எழுதுவேன். நன்றி, வேலா.''

''அப்படியானால் நான் உன் ஊருக்கு அடுத்த வாரம் வருவது உறுதி.''

''சரி, மீண்டும் நன்றி'' என்றுகூறிக் கொண்டே பாலன் தன் ஊருக்குப் புறப்பட்டான்.





# திருட்டு நின்றது!

எம்.ஆர்.ராஜன்

பண்ணையார் பொன்னுரங்கம் தன் பிரச்னையைச் சமாளிக்க வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார். அப்படி என்ன பெரிய தலை போகும் பிரச்னை?

அவருடைய பண்ணையில் ஐநூறு மாடுகள், முந்நூறு ஆடுகள், இருநூறு கோழிகள் என்று எக்கச் சக்கக் கால் நடைகள்! பெரிய நிலப்பரப்பை வளைத்துப்போட்டு அதில் பெரிய கொட்டகை போட்டு, நீர்த்தொட்டி, குழாய், புல்வெளி என்று பலவித ஏற்பாடுகளையும் செய்திருந்தார் பொன்னுரங்கம்.

அவருடைய பண்ணையிலிருந்து பட்டணத்துக்குக்கூடப் பால், முட்டை விநியோகம் ஆகும். நாற்பது, ஐம்பது ஆட்களை வேலைக்கு வைத்திருந்தார். நிறைய ஆடுமாடுகள், கோழிகள் இருக்கவே எங்கே கணக்குத் தெரியப் போகிறதென்று தினமும் ஓர் ஆடு, அல்லது மாடு அல்லது ஒரு கோழி என்று யாரோ திருட ஆரம்பித்தார்கள்.

எல்லா வேலைக்காரர்களையும் நம்பிக்கையானவர்களாகவே பொன்னுரங்கம் நினைத்தார். ஆனாலும் திருட்டுப் போகிறதே! யாரைச் சொல்வது? திருட்டை எப்படிக் கண்டுபிடிப்பது? யோசனை செய்தார் பொன்னுரங்கம்.

இரண்டு மூன்று நாட்களாகத் தூக்கமில்லை. எவ்வளவோ வசதிகள் செய்து கொடுத்தும், நம்பிக்கைத் துரோகம் செய்யும் அந்த வேலைக்காரன் யார்? கண்டுபிடித்தாலும் பலர் முன்னிலையில் எப்படித் தண்டிப்பது?

ஒரு முடிவுக்கு வந்தார் பொன்னுரங்கம். யாருக்கும் தெரியாமல் ஒரு நாளிரவு சின்னானைத் தேடிப் போனார். சின்னான் அப்போதுதான் சாப்பிட்டு விட்டுக் குடிசை வாசலில் நார்க்கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான்.

நிலா வெளிச்சத்தில் நிழல் தெரிந்தது சின்னானுக்கு. திரும்பிப் பார்த்தான். பண்ணையார் நின்றிருந்தார்.

''வாங்கய்யா... வாங்க...'' சின்னான் கைகட்டி நின்றான்.

''சின்னான், நான் ரொம்பக் குழப்பத்திலே இருக்கேன். நீதான் ஒரு வழி சொல்லணும்'' என்று பொன்னுரங்கம் முழு விவரமும் சொன்னார்.

''அப்படிங்களா... சோறு போடற இடத்துக்கே துரோகம் செய்யறானுங்களா...? பாவிங்க... உருப்படுவானுங்களா...?''

''இதோ பாரு சின்னான். இந்தத் திருடனைக் கண்டு பிடிக்கணும்... இல்லே... திருட்டை நிறுத்தணும். என்ன செய்வியோ தெரியாது...''

''சரிங்க... நான் ஒண்ணு சொல்றேன்... செய்து பாருங்களேன்...''

''சொல்லுப்பா.... தாராளமாச் செய்யறேன்...''

''அய்யா... நீங்க அம்பது ஆளா வச்சிருக்கீங்க வேலைக்கு...?''

''ஆமாப்பா...''

உடனே சின்னான் பொன்னுரங்கத்தின் காதில் இரகசியமாக ஏதோ சொன்னான்.


அதைக் கேட்டதும், ''அடடா! இந்த யோசனை எனக்கு இத்தனை நாளாகத் தோணாமே போச்சே!'' என்று கூறித் துள்ளிக் குதித்தார்.

மறுநாளே சின்னான் சொன்னபடி ''இருக்கற ஆடு, மாடு, கோழிங்களைச் சரி சமமாகப் பங்கிட்டு ஆளுக்கு இத்தனை உருப்படி என்று வேலைக்காரர்களிடம் பார்த்துக் கொடுத்தார்... ''இதுலே திருட்டுப் போச்சுன்னா அதுக்கு அந்தந்த ஆளே பொறுப்பு. ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தார் பொன்னுரங்கம்.

''ஒட்டு மொத்தமாக் கூட்டுப் பொறுப்பிலே விட்டபோது தினசரி ஏதாவது உருப்படி குறையுமே! இப்போது எதுவும் குறையலே. எல்லாம் சின்னானின் புத்தி நுட்பம்தான்!'' என்று இப்போது தினமும் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார் பொன்னுரங்கம்.


சின்னானின் யோசனையால் திருட்டு நின்றது!

# சீறும் பாம்பும் சிரிக்க வைக்கிறது!






....நாகாலாந்து எக்ஸ்பிரஸ்....



# பிருந்தாவனக் கவியரங்கம்

## நினைவை உறுதியாக்கு!

படித்து விட்டேன், என்று சொல்லிப்
படுத்துத் தூங்காதே! — உன்
படிப்பின் பயனைச் செயலில் காட்ட
மறந்து விடாதே!

உழைத்து விட்டேன் என்று சொல்லி
உறங்கி விடாதே — உன்
உழைப்பில் மேலும் உயர்வைத் தேட
ஓய்வு கொள்ளாதே!

கடமை முடித்தேன் என்று சொல்லிக்
களைத்து விடாதே! — உன்
கடமை யாவும் தொடர் கதைதான்;
கலக்கம் கொள்ளாதே!

வென்று விட்டேன் என்று சொல்லி
நின்று விடாதே! — உன்
வெற்றிப் பாதை நல்ல பாதை;
விலகி விடாதே!

—ஜி. ஏகலைவன் சிறுமலையூர்.



## 'பாப்பா... பாப்பா...

பாப்பா பாப்பா கைதட்டு
பாடல் பாடிக் கைதட்டு
உலகம் உந்தன் கைகளிலே
உணர்ந்தே நீயும் கைதட்டு.

தீயவர் உந்தன் கால்தூசு
தெரிந்தே நீயும் கைதட்டு
கடவுளை வணங்கு கைகுவித்து
கஷ்டம் நீங்கும் கைதட்டு.

புத்தகம் உந்தன் கைகளிலே
நித்தமும் வேண்டும் கைதட்டு
கோயில் தரிசனம் கைகூப்பு
கோடி புண்ணியம் கைதட்டு.

திருக்குறள உந்தன் நெஞ்சினிலே
தினமும் இருந்திடக் கைதட்டு
பாப்பா பாப்பாகைதட்டு
பாரதம் போற்றிடக் கைதட்டு.

—த. அருள்சிவபாலன் (47) செங்கல்
—பட்டு—1



## யானை மீது பவனி

திருப்போரூர் கோயில் சென்று
  திரும்பி வருகையில்,
திருநீறிட்ட யானையொன்று
  தெருவில் வந்தது.
சிறுவரோடு சிறுமியரும்
  யானை மீதிலே
ஒருவர்பின்னே ஒருவராக
  ஏறி அமர்ந்தனர்.

யானைமீது ஏறஎனக்கு
  ஆசை வந்தது.
பூனைபோன்ற என்மனமோ
  பயந்து நின்றது.
ஆனால், என்ன? அன்றிரவே
  ஆழ்ந்த கனவிலே
ஆனைமீது அிலெமெல்லாம்
  பவனி வந்தேனே!

—பா. ராகவன் (822), கோளம்பாக்கம்





## சிறகு வேணுமே!

வட்டமான நிலவு ஒன்று
  வானத்திலே வந்தது.
எட்டி எட்டிப் பார்த்த நிலா
  என்னைப் பார்த்துச் சொன்னது.

''சிட்டுப் போன்று பறந்து நீயும்
  சீக்கி ரத்தில் வந்திடு.
எட்டு நாளில் வந்து விடலாம்
  இன்றே நீயும் புறப்படு''.

பட்டுப் போன்ற பால் நிலவைக்
  கட்டிப் பிடிக்க ஆசைதான்.
சிட்டுப் போல பறப்ப தற்குச்
  சிறகுக் கெங்கே போவது?
  —ச. நிரஞ்சன் (3057), சென்னை-13.

## மண்ணிலே உழைப் பெதற்கு?

மனித குலம் தழைப்பதற்கு?

விண்ணிலே சுடர் எதற்கு?
விஞ்ஞானம் பெறுவதற்கு

அன்பு எனும் பொருள் எதற்கு?
அருந்தொண்டு புரிவதற்கு

துன்பத்தின் சுமை எதற்கு?
துரோகிகள் கொழுப்பதற்கு

கையிலே விரல் எதற்கு?
கருணையினால் சுவதற்கு

மையிருட்டுப் பொழுதெதற்கு?
வஞ்சகர்கள் வாழ்வதற்கு.

சொல்லொடு செயலெதற்கு?
சுதந்திரத்தைக் காப்பதற்கு.
  —குமார், (141) தேனி.

அட்டைப் படம்

அண்ணனும் தங்கையும்
கூடிஅமர்ந்தோம்,

மன்னர்கள் அமரும்
ஆசனத்தில்.

இந்தநல் நாட்டில்
'யாவரும் மன்னரே'

என்பதால் அமர்ந்தோம்;
எவர் தடுப்பார்?

வண்ணப் படம்: யோகா



## கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

### உறுப்பினர் எண், பெயர், முகவரி

1656. சி. ரா. ஆனந்த், 8/29, சுந்தரேச ஐயர் லேஅவுட, திருச்சி சாலை, கோவை–18.
1657. நவீனு நந்தகோபால், 'நந்தாலயா' 6, இ. நகர் காலனி, ஈரோடு–3.
1658. எஸ். ஆர். ரமேஷ்பாபு, கே 340, 4–வது வீதி, பழனிபுரம், பவானி, பெரியார் மாவட்டம்.
1659. ஆர். இராம்கோபால், 100, அம்பலத்தடையார் மடத்து வீதி, பாண்டிச்சேரி— —605 001.
1660. டி. மஞ்சுளா, 48, செங்கல்பட்டி, 1–வது தெரு, குகை, சேலம்–6.
1661. க. விஜயஸ்ரீ, 42, ஜாயி பிரகாசம் தெரு, பாண்டிச்சேரி–1.
1662. அ. வ. இராதாகிருஷ்ணன், 163, வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை–94.
1663. வை. கந்தர், டி–72, பழைய காலனி, சங்கர் நகர்–627 357.
1664. S. Valarmathy, 29A, Ram Nagar, New Delhi-110055
1665. S. Rerathi 29A, Ram Nagar, New Delhi-110055
1666. நா. சத்தீஸ் குமார், 61, பாகபத் அக்கிரஹாரம், மேல்கரை, மானாமதுரை–623606
1667. ஆர். காயத்ரி, 3–ஏ, விவேகானந்தர் தெரு, எஸ். எஸ். காலனி, மதுரை–16.
1668. ம. கணேஷ் பாண்டியன், நாடார் உறவின் முறைவீடு, கான்வென்ட் எதிரில், தேனி–626 531.
1669. அ. ஜெயமுருகன், சி–4, விருதுநகர், இந்து நாடார் காலனி, தேனி (அஞ்சல்)626531
1670. ம. தெய்வயானை, த பெ. மகேஸ்வரன் பிள்ளை, பெரியகோட்டை (அஞ்சல்) 623 559
1671. ஆர். முரளிகிருஷ்ணன், 12–ஏ, சுப்பிரமணியபுரம், பழனி.
1672. ப. சுப்பிரமணியன், 41/1, சக்தி வேலம்மாள் நகர், சத்சங்கம் ரோடு, மதுரை–16.
1673. வி. வெங்கடேசன், 147, வட உத்தர வீதி, ஸ்ரீரங்கம்–620 006.
1674. வி. மோகன்குமார், அரண்மனைத் தெரு, சொக்கம்பட்டி, தென்காசி தாலுகா.
1675. அ. இந்துமதி, எப்–12, வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, புதிய சிறைச்சாலை, மதுரை 10
1676. எஸ். பிராங்க்லின் ஆபிரகாம், 7, வாயிலார் நாயனார் தெரு, பாளையங்கோட்டை –627 002
1677. ப. நாராயணன், 12–சி, ரயில்வே காலனி, நாகர்கோவில்–629 002.
1678. ஆர். ஆர். ராமசுப்பிரமணியன், 95, பள்ளத்தெரு, வடிவீஸ்வரம், நாகர்கோவில்.
1679. எம். சாஸ்தாமணிவாசகம், 30, தெற்கு அக்ரகாரம், சின்னமனூர், மதுரை மாவட்டம்–626 515.
1680. கே. புஷ்பா, 12, சுப்பிரமணியபுரம் ரோடு, பழனி.
1681. வி. சி. சேகர், 43, கோவில் தெரு, திண்டுக்கல்–1.
1682. பழ. இராமகிருஷ்ணன், ஏ–3, முன்ஷி அவின்யூ, அழகப்பாபுரம், காரைக்குடி–623 003.
1683. ஜெ. ராம்குமா, த பெ. டாக்டர் ஜெயராஜ், அரசினர் மருத்துவமனை, பாலக்கரை, துறையூர், திருச்சி மாவட்டம்–621 010.
1684. பி. யோகேஸ்வரன், 3, சோமசுந்தரம் நகர் முதல் தெரு, பல்லாவரம், சென்னை–43.
1685. பி. ரமேஷ்குமார் 3, சோமசுந்தரம் நகர் முதல் தெரு, பல்லாவரம், சென்னை–43.
1686. ஜி. ஆர். அனந்த கிருஷ்ணன், 31, வடக்குரதவீதி, சின்னமனூர்–626 515.
1687. சொ. பாலா, 157, அ. ராம. வெ. தெரு, நா. புதூர், காரைக்குடி.
1688. அ. ரிச்சர்ட் அவினுஸ், 4–ஏ, 8–வது தெரு, புதுநகர், திருமங்கலம்.
1689. என். வி. நடராஜன், த பெ. என். வீரபுத்திரன், வந்தக்கோட்டை பாளையம்(வழி) மதுரை மாவட்டம்.
1690. பி. அருணு, கொல்லப்பாளையம், புலியூர்–639 114, கரூர் தாலுகா.
1691. பி. புவனு, கொல்லப்பாளையம் வீதி, புலியூர்–639 114, கரூர் தாலுகா.
1692. ஜெ. கே. பொற்கொடி, 23–பி, மெயின் ரோடு, கீழையூர்–605 753.
1693. எஸ். சுதா, ஈ–54, ஆர். பி. ஐ. குவார்ட்டர்ஸ், பெஸண்ட் நகர், சென்னை–90.
1694. எஸ். ராஜலெக்ஷ்மி, ஈ–54, ஆர். பி.ஐ. குவார்ட்டர்ஸ், பெஸண்ட் நகர், சென்னை–90
1695. S. Srin:vasan 33/11, Apseb Ghatkesar P.O. RRDT501301
1696. கே. சுஜாதா, 14, வேலு தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–33.
1697. ஜி. ஜெகன்னாதன், 80, ஐயன்குப்பம் அக்ரஹாரம், திருவண்ணாமலை.
1698. ஜி. ராஜாசுப்பிரமணியன், 76; ஐயன்குளம் அக்ரகாரம், திருவண்ணாமலை.
1699. V. Saradha 20/1891, S.S. Street Karamanai, Trrvandram-2.
1700. V. Mahalingam, 20/1891, S.S. Street Karamanai. Trivandrum-2
1701. ச. ராஜ மாதங்கி, 15, நாராயண செட்டி தெரு, இராபர்ட்ஸன்பேட்டை, சென்னை–28
1702. எம். என். முகம்மது பைராஸ், 18, புதிய வெள்ளாளத்தெரு, பாண்டமங்கலம், உறையூர், திருச்சி–3.
1703. பா. கோவிந்தராஜன், 7, ரயில்வே காலனி, கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு தாலுகா, –603 202.
1704. எஸ். கரிகாலன், த பெ. ஏ. பி. சுப்பிரமணியன், ஆயுதப்படை ஆய்வாளர், கடலூர்–607 001.



1705. இரா. சிவப்பிரியா, 21, டி. எல். ரகுபதி தெரு, சுபாஷ் நகர், குரோம்பேட்டை, சென்னை–4.

1706. ஐ. பாலகுமார், 23, லட்சுமிபுரம், பழனி.
1707. என். பாபு, த பெ. கே. எஸ். நாகராஜன், பாங்க் ஆப் மதுரை விட்., வேலூர்–4.
1708. டி. பிரகாஷ், 39, பெரிய கனிக்காட்டுத்தெரு, வேலப்பாடி, வேலூர்.
1709. வி. ஹேமலதா, 36, காந்தி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–33.
1710. ஜெ. பிராங்க்ளின் சகாயராஜ், 16, துரைசாமிபுரம், திருச்சி–620 001.
1711. எம். வி. பிரகாஷ், பிளாட் எண்–165, 36–வது தெரு, பாபா நகர், வில்லிவாக்கம், சென்னை–49

1712. க. உமா, 16, எழுத்துக்காரன் தெரு, சென்னை–19.
1713 கா. பிரியா, 35, வெல்லம் சாமியார் தெரு, சிவகாசி.
1714 எஸ். சௌந்திரராஜன், 52, சேர்மன் முத்துராமையர் வீதி, மணல்ரோடு, மதுரை–9
1715. எஸ். நரேஷ்குமார், 233 பி, ரயில்வே காலனி, சாந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை–8

1716. எஸ். ராகவன், 277, கொன்னூர் நெடுஞ்சாலை, அயனாவரம், மதராஸ்–23.
1717. S. Vasenth kumar 17/2851, Beadon Pvra Karolbagh New Delhi-110005
1718. கே. லக்ஷ்மி பிரியா, 5, கந்தசாமி காலனி, கிழக்குத் தாம்பரம், சென்னை–59.
1719. ஆர். சுரேகா, பிளாட் எண்–9, பகவான் நகர், மீஞ்சூர்–601 203.
1720. எம். பாலசுந்தரம், திருவள்ளுவர் நகர், 1–வது தெரு, சென்னை–51.
1721. க. வித்யா, 16, எழுத்துக்காரன் தெரு, சென்னை–19.
1722. ஜெ. பாலாஜி, 4, ஜெயராம் நகர், சென்னை–99.
1723. வி. கோபி, 11, காங்கேய நல்லூர் ரோடு, காந்திநகர், வேலூர்–632 026.
1724. ஆர். லட்சுமி எல்–127, ஹட்கோ காலனி, இராயக்கோட்டா ரோட், ஓசூர்.
1725. பெ. சிவசங்கர், 15, அகில்மேடுதெரு, ஈரோடு–638 001.
1726. நா. பாலகணேஷ், 27, வ. உ. சி. நகர்–11, பாண்டிச்சேரி–605 003.
1727. நெ. அன்புசெழியன், த பெ. கோ. நெடுஞ்செழியன், ரெட்டியார் காலனி, சென்னை சாலை பண்ருட்டி, – 607 106.
1728. ஜி. கருணாநிதி, 14–ஈ. ஐ. டி. பாரிஸ் (லேபர் குவார்ட்டர்ஸ்) நெல்லிக்குப்பம், ரோடு பண்ருட்டி

1729. ஆர். ஸ்ரீராம், 22, மடப்தெரு, கும்பகோணம்.
1730. ஆர். சத்தியவா கீஸ்வரன், ஈ–165, சந்தானம் ரோடு, டி. வி. எஸ். நகர், மதுரை–625 003.
1731. பூ. ச. அனுராதா, 102, சாயிநகர், விருகம்பாக்கம், சென்னை–92.
1732. ல. வெங்கட்ராமன், 9/3, எம். ஐ. ஜி.ப்ளாட் 10–வது அவின்யூ, அசோக்நகர், சென்னை–83.

1733. மு. ராஜாபகதூர், எஸ். ஆர். ஒ. தெரு, சின்னமனூர்–626 515.
1734. எச். வேணுகோபால, 27, மேலரதவீதி, கிருஷ்ணன்கோவில் நாகர்கோவில்-629 001
1735. க. கணேசன், 8, புதுக்கிராமம், தூத்துக்குடி–3,
1736. ச. பிரபாகர், 24 ஈ, பழைய காலனி, சங்கர்நகர், திருநெல்வேலி–627 357.
1737. எஸ். அரவிந்தன், 58, 'ஸ்காந்தம்' கவிமணி நகர், நாகர்கோவில்–629 002.
1738. ரா. அலமேலு, 8–ம் ரகுப்பு, 'ஆ' பிரிவு, ஆர். ஜி. நடுநிலைப்பள்ளி, சேரன் மகாதேவி திருநெல்வேலி மாவட்டம் – 627 414.
1739. ஆர். ரமேஷ், 384, குடியிருப்பு காலனி, கவுண்டப்பாளையம், கோவை.
1740. ஜி. இராதா, 3, செல்லப்பா நகர், கூடுவாஞ்சேரி–603 202.
1741. ப. சனத்குமார், 64, ஈ. வி. ஆர். நகர், திருவானைக்காவல், திருச்சி–5.
1742. ஆர். செல்வம், 69, 'முத்துசாமி தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்–2.
1743. வி. ஆதிநாராயணன், 12, பென்னுண்டிக் கவுண்டர் தெரு, சிவசாமிபுரம் புதூர், சேலம்–636 007.

1744. பி. கலா, 23, திருப்பதிசாரம் (அஞ்சல்) காரைக்குடி–629 901.
1745. ஏ. சிவராம கிருஷ்ணன், ருக்மணி இல்லம், பிளாட் எண்–4, சதன் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை–26.

1746. வி. பாலாஜி, 206, லிங்கச் செட்டித் தெரு, சென்னை–1.
1747. ஜெ. சாயிகணேஷ், 12–டி, மெட்ராஸ் பாட்டை ரோடு, வில்லிவாக்கம்,சென்னை-49.
1748. சி. வெங்கடேஷ், 8, புதுக்கிராமம் தூத்துக்குடி–3.
1749. வீ. ராஜாராமன், 17–ஏ, சின்னகண்மாய் தெரு, கோரிப்பாளையம், மதுரை 625 002
1750. எஸ். பாலச்சந்திரன், 3, கலங்கரை, செங்கோட்டை–627 809.
1751. ரா. விஸ்வநாதன், 7, 4–வது தெரு, சௌராஷ்டிரா நகர், சூளைமேடு, சென்னை–94.
1752. வெ. பாலசுப்பிரமணியன், 36, தேர் வீதி, சங்ககிரி–637 301.
1753. எஸ். சிவக்குமார், 18, வடக்கு ரதவீதி, இராமநாதபுரம்–623 501.
1754. பெ. நந்தினி, 25, வேப்பந்தோப்பு தெரு, திண்டுக்கல்.
1755. என். எஸ். குமார், 536, கங்கா, அண்ணாநகர், மதுரை–20.
1756. சி. முரளிதரன், 23, சௌந்தரய்யத் தெரு, அம்மாப்பேட்டை, சேலம்–3.
1757. கே. எஸ். பாண்டியன், த பெ. கே. சம்பந்தச்செட்டியார், குரிசிலாப்பட்டு போஸ்ட் திருப்பத்தூர், வ. ஆ. மாவட்டம்–635 706.

(இன்னும் வரும்)



# கேள்வி இங்கே! பதில் எங்கே?

70. ஒரிஸா மாநிலத்தில் 'கோயில் நகரம்' என்றும் புகழ் பெற்ற இடம் எது?

71. அறுவை சிகிச்சையின் போது, 'குளோரோபாரம்' என்னும் மயக்க மருந்து கொடுக்கிறார்களே, அதைக் கண்டுபிடித்தவர் யார்?

72. 'புதையல் தீவு' (Treasure Island) என்ற கதையை எழுதியவர் யார்?

73. கவிமணி, ரசிகமணி, பண்டிதமணி —இப்பட்டங்கள் யார் யாரைக் குறிக்கின்றன?

74. நம் தலையில் எத்தனை எலும்புகள் இருக்கின்றன?



73. 'என்னால் வேகமாக ஓட முடியும்; ஆனால் பறக்க முடியாது' என்கிறது இந்தப் பறவை. இதன் பெயர் தெரியுமா?

76. முதல் உலக யுத்தம் முடிந்த பிறகு தோன்றிய சில புதிய நாடுகளில் ஒன்று செக்கோஸ்லோவாக்கியா. இப்பெயர் அதற்கு எப்படி வந்தது?

77. சோளம் முதல் முதலில் எந்த நாட்டில் பயிரிடப்பட்டது?

78. முதல் முதலாகச் சந்திரனுக்குச் சென்று திரும்பிய விண்வெளி வீரர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்? எந்த ஆண்டு எந்த மாதம் சென்றனர்?

79. கோடைக்கானல் எத்தனை மீட்டர் உயரத்தில் இருக்கிறது?

80. காமன்வெல்த் நாடுகள்' என்கிறார்களே, அப்படியென்றால்..?

81. கிராமபோனைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன், முதலில் அதற்கு வைத்த பெயர் என்ன?

82. 'இஸ்லாம்' என்பது அரபுச்சொல். இதற்கு அர்த்தம் என்ன?

83. விஞ்ஞான ஆராய்ச்சிக்காக இரு முறை நோபல் பரிசு பெற்றார் ஓர் அம்மையார். அவருடைய புதல்வியும் நோபல் பரிசு பெற்றார். அவர்கள் யார்?

84. 'நீராரும் கடலுடுத்த' என்று தொடங்கும் ''தமிழ்த்தாய் வாழ்த்து' இயற்றிய சுந்தரம்பிள்ளை பிறந்த ஊர் எது?

85. ஒரே மொழியை ஒவ்வொரு வட்டாரத்திலும் சிறிது மாற்றிப் பேசுகிறார்கள். இப்படி இந்தியாவில் பேசப்படும் பல்வேறு மொழிகளும் அவற்றின் வட்டாரமொழிகளும் சேர்ந்தால் மொத்தம் எத்தனை இருக்கும்?

**பதில் இங்கே!**

70. ஒரிஸ்ஸா மாநிலத்தின் தலைநகராகிய புவனேஸ்வரமே. தற்போது அங்கே சுமார் 100 கோயில்கள் உள்ளன.

71. சர் ஜேம்ஸ் சிம்ப்சன் என்ற ஆங்கிலேயர்.

72. ராபர்ட் லூயி ஸ்டீவன்சன்.

73. கவிமணி — தேசிகவிநாயகம்பிள்ளை, ரசிகமணி — டி. கே. சிதம்பரநாத முதலியார், பண்டிதமணி —மு. கதிரேசச் செட்டியார்,

74. இருபத்திரண்டு எலும்புகள்.

75. கிவி.

76. அப்போது 'செக்கியர்' என்பவர்களும், 'ஸ்லோவாக்கியர்' என்பவர்களும் இந்தப்பகுதியில் வாழ்ந்து வந்ததால் இப்பெயர் இடப்பட்டது.

77. நம் தேசத்தில்தான்!

78. அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். 1969 ஜூலை மாதம்.

79. சுமார் 2100 மீட்டர் உயரத்தில்.

80. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்து விடுதலை பெற்றநாடுகள் கூட்டாகச் சேர்ந்து பிரிட்டனின் தலைமையில் ஓர் அமைப்பை ஏற்படுத்தின. அவை 'காமன்வெல்த்' நாடுகள்' என்று அழைக்கப்படுகின்றன.

81. போனோகிராப்.

82. 'அமைதி பெறும் வழி' என்பது தான் அர்த்தம்.

83. மேரி கியூரி; அவரது புதல்வி ஜூலியட் கியூரி.


84. ஆலப்புழை.

85. சுமார் 870.



அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் என்ற நான்கு சிவனடியார்களுள் இசையோடு தமிழ் பாடி பக்தி வளர்த்த சுந்தரமூர்த்தி நாயனாருடைய அற்புதங்கள் நிறைந்த கதை மிகவும் சுவையானது.
சிவனருட் சுந்தரர்
கதை: ஆனந்தி
படம்: வினு
திருகயிலாய மலை அடிவாரம். உபமன்யு முனிவர் ரிஷிகளுடன் அமர்ந்து பேசிக்கொண் டிருந்தார். வானத்தில் ஒரு ஜோதி தோன்றி கைலாய மலையுச்சியை அடைந்தது.
உபமன்யு முனிவரே! அந்தப் பேரொளி எங்கிருந்து வந்தது? அதைத் தாங்கள் வணங் கியது ஏன்?
நம்பியாரூரர் சிவபெருமானைச் சென்றடைந்து விட்டார். அவரையே வணங்கினேன்.
சுவாமி! அவருடைய கதையைச் சொல்ல வேண்டும்.








ஒரு சமயம் ஈசன், தேவர்கள் ஆசையுடன் அளித்த ஆபரணங்களையும் பட்டுப்பீதாம்பரங்களையும் அணிந்து மிக அழகாக விளங்கினார்.







தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் எடுக்க திருப்பாற்கடலைக் கடைந்தனர். வாசுகி பாம்பு விஷத்தைக் கக்க . . .
ஈசனே எம்மைக் காப்பாற்றுங்கள்.
ஈசன் கட்டளைப்படி சுந்தரர் ஆலகால விஷத்தைத் திரட்டிக் கொண்டு வந்தார்.
அதை உண்ட சிவன் நீலகண்டர் என்று பெயர் பெற்றார்.
நீலகண்டர் வாழ்க.
ஆலால சுந்தரர் வாழ்க.
தினந்தோறும் கைலாய மலைச் சாரலில் புஷ்பங்கள் பறித்து மாலை தொடுத்து ஈசுவரனுக்கு அணியக் கொடுத்து வந்தார் சுந்தரர். ஒரு நாள் . . . . .
கமலினியும் அநிந்திதாவும் அவரைப் பார்க்க . . .
கமலினி! அதோ புஷ்பம் பறிக்கும் சுந்தர புருஷர் யாரடி?
அவர் ஆலால சுந்தரர். ஈச்வரனுடைய உருவமாகவே இருப்பவர். அநிந்திதா! அவரும் நம்மைப் பார்க்கிறார்!
இந்த அழகிகள் பார்வதி தேவியின் சகிகளாக இருக்க வேண்டும். என் மனம் ஏனோ அவர்களைக் கண்டதும் சபலமடைகிறது.




சுந்தரர் தமிழ் நாட்டில் திருநாவலூரில் பிறந்தார். கமலினியும் அநிந்திதையும் திருவாரூரிலும் திருவொற்றியூரிலும் பிறந்தார்கள். நம்பியாரூரன் என்ற திருநாமம் பெற்றார் சுந்தரர். குழந்தைக்கு மூன்று வயது நிறைந்தது. தெருவில் சிறு தேரை இழுத்துக் கொண்டு விளையாடினான். அவனை அந்த நாட்டு அரசன் நரசிங்க முனையரையர் பார்த்தார்.










அரசகுமாரன் போல் ஆடை அணிகள் புனைந்து அரண்மனையில் வளர்ந்து கல்வி கற்றான் நம்பி ஆரூரன். மணப் பருவம் அடைந்தான்.
புத்தூர் சடங்கவி மறையோன் மகளை ஆரூரனுக்கு மணம் பேசி முடித்தனர். திருமணச் சடங்கின் போது ஒரு கிழவர் தோன்றி.....
கல்யாணத்தை நிறுத்துங்கள். இந்தப் பிள்ளை என் அடிமை!
இதற்கு என்ன அத்தாட்சி?
ஆரூரன் சினந்தான்.
உம்மை நான் பார்த்ததே இல்லை. எப்படி உம் அடிமையாக இருக்க முடியும்?
உனக்குத் தெரியா விட்டால் என்ன? உன் பாட்டனார் எழுதிக் கொடுத்த ஓலை என்னிடம் இருக்கிறது!
ஒரு பெரியவர் இடை புகுந்தார்.
உங்களை நாங்கள் யாரும் பார்த்ததில்லையே!
எனக்குத் திருவெண்ணெய் நல்லூர்.
அப்படியானால் இந்த வழக்கை அங்கேதான் விசாரிக்க வேண்டும்.
திருவெண்ணெய் நல்லூரில் ஊரார் கூடியிருக்கும் சபையில் கிழவர் கொடுத்த ஓலைச் சுருள் – அடிமைப் பத்திரம் வாசிக்கப் பட்டது.
நீதிபதி தீர்ப்பு வழங்கினர்
நம்பியாரூரர் இந்தக் கிழவரின் அடிமையே. சாட்சிகள் சரியாக இருப்பதால், ஆரூரன் இவரைப் பின் தொடர்ந்து போக வேண்டும்.
அவ்வாறே ஆரூரன் பின்தொடர கோயிலுள் நுழைந்து மறைந்தார் கிழவர்.
முதியவர் எங்கே சென்றார்? இதென்ன மாயம்?


வியப்பு அடங்க சினம் மீறியது ஆரூரருக்கு.
என்னை அடிமை என்ற பித்தனே எங்கு போய் விட்டீர்?
பித்தனே
பித்தனே
சுந்தரா! உன்னைத் தடுத்து ஆட்கொள்ளவே வந்தேன். நீ என்னிடம் கடுமையாகப் பேசி வாதாடினாய். அதனால் "வன் தொண்டன்" என்று பெயர் பெறுவாய். என் மீது தமிழ்ப் பாடல்களைப் பாடி அருள் நெறி தழைக்கச் செய்.
சுவாமி! பேரருளாளனே! உம்மை என்ன சொல்லிப் பாடுவேன்?
பித்தா என்றே அழைத்துப் பாடு.
பித்தா பிறை சூடி பெருமானே! அருளாளா...
ஆரூரர் தாம் சுந்தரர் என்பதை அறிந்து கொண்டார். அவர் உள்ளத்திலிருந்து பாடல்கள் பொங்கிப் பெருகின. ஊர் ஊராகச் சென்று ஒவ்வொரு கோவிலையும் தரிசித்து, சிவபெருமானைத் துதித்துப் பாடல்கள் இயற்றினர்.
திருவதிகை வந்து சேர்ந்தார்.
கோவிலுக்குள் எப்படி நுழைவது? அப்பர் பெருமான் தம் உழவாரப் படையால் சுத்தம் செய்த புனிதத் தலத்தை மிதிப்பதா? மாட்டேன்!
இதோ இந்த மடத்துத் திண்ணையில் சற்று இளைப்பாறுகிறேன்.
திண்ணையில் படுத்திருந்த கிழவர் தூக்கத்தில் புரண்டு உதைக்கவும்....
என்னய்யா இது. சற்று இளைப்பாறுவோம் என்று படுத்தால் உதைத்துக் கொண்டே இருக்கிறீரே.
சுந்தரா! என்னைத் தெரியவில்லையா? உன் பாடலைக் கேட்க வந்தேனப்பா.



கிழவர் மறையவும்..
ஈசன் என்னை ஆட்கொள்ள வந்தாலும் தெரிந்து கொள்ளாமல் ஏசிவிடுகிறேனே! என் தலையில் திருவடிகளைச் சூட்டிய போது பிடித்துக் கொள்ளாமல் போனேனே!
பல தலங்களுக்குச் சென்று பாடிய சுந்தரர் திருவாரூரை அடைந்தார். தடபுடலான வரவேற்பு.
இதெல்லாம் என்ன?
இறைவன் எங்கள் கனவில் தோன்றித் தங்களை வரவேற்கும்படி பணித்தார்.
கோயிலினுள் பாடியபடியே சென்றார் சுந்தரர். அசரீரி கேட்டது.
சுந்தரா! உனக்கு எம்மை நிய தோழனாகத் தந்தோம். நீ மணமகனைப் போலவே எப்போதும் இருப்பாய்.
ஒரு நாள் மாலை திருவாரூர் கோவிலில் ஓர் அழகியைப் பார்த்தார் சுந்தரர்.
இந்தப் பெண் யார்?
இவர் இக்கோவில் திருவிழாக் காலங்களில் நடனமாடும் பரவையார். தினம் ஈசனை வழிபட வருவார்.
அன்றிரவு சுந்தரர் கனவில்..
ஆரூரனே! பரவையை உமக்கு மணம் முடித்து வைக்குமாறு தொண்டர்களுக்குக் கட்டளை இட்டுள்ளோம்.
திருமண வைபவங்கள் முடிந்து இருவரும் மனமொத்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்கள்.


ஒரு நாள் சுந்தரர் கோவிலுக்கு வந்த போது சிவனடியார் கூட்டம் மிகுந்திருந்தது.
சுந்தரா! அடியார்களைப் பாட விருப்பமிருந்தால் தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று பாடுக.
இறைவன் அடியெடுத்துக் கொடுக்க சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடினார். சிவனடியார்களை விழுந்து வணங்கினார்.
நாட்கள் சென்றன. மனைவி நினைவூட்டினாள்.
சுவாமி! பங்குனி உத்திரத் திருநாள் வருகிறது. அன்று தான தருமங்கள் செய்ய வேண்டுமே.
சுந்தரர் திருப்புகலூர் தலம் சென்றார்.
அசதியாக இருக்கிறது இந்த செங்கற்களை அடுக்கிச் சற்றுப் படுப்போம்.
செங்கற்கள் மீது பட்டு உத்தரீயத்தை விரித்துப் படுத்தார் சுந்தரர்.
மறு நாள் காலை பட்டை எடுத்துத் தோளில் போட, செங்கற்கள் தங்கக் கட்டிகளாக மாறியிருந்தன.
ஆகா! ஈசன் திருவருள்!


பங்குனி உத்திரத்
தில் பரவையார்
மனம் மகிழ தான
தருமங்கள்
செய்து மறுபடி
தல யாத்திரை
சென்றார்
சுந்தரர்.
ஒரு தலத்தில்
கொன்றை மரங்
களால் சூழப்பட்ட
கோயிலைக் கவனியாது
சுந்தரர் செல்ல...
ஈசன் குரல் ஒலித்தது.
சுந்தரம் என்னை மறந்தாயோ?
ஐயனே! உன்னைத் தவிர யாரை நினைப்பேன்!
பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கிசைத்து
மின்னார் செஞ்சடை மேல்
மிளிர் கொன்றை
யணிந்தவனே.
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் -
இனி யாரை
நினைக்கேனே!


திருமுதுகுன்றம் என்ற ஊரில்...
தேவர்க்கரசே! நான் உம்மைப் பொன் கேட்டேன். நீரும் தந்தீர். இதை எப்படி எடுத்துப் போவது?
சரி, இந்த மணி முத்தாற்றில் போட்டு விடுகிறேன். திருவாரூர் கமலாலயத்தில் எடுத்துக் கொள்கிறேன்!
திருவாரூர் திரும்பி, கமலாலயத்தில் இறங்கினர் சுந்தரர்.
மணிமுத்தாற்றில் போட்டு இங்கே எடுப்பாராமே! இது நடக்குமா?
அதோ கிடைத்து விட்டதே! தம்பிரான் தோழர் என்று இவரை அழைப்பது சரியே.
சில காலம் சென்று மறுபடியும் சிவத் தலங்களைத் தரிசிக்கப் புறப்பட்ட சுந்தரர் திருவொற்றியூரில் தங்கினார். ஒரு நாள்...
கோயில் மண்டபத்தில் தூண்களுக்குப் பின்னால் திரை மறைவிலிருந்து பூக்கூடையும் மலர் மாலையுமாக ஒரு பெண் வெளியே வர....
ஆகா! என்ன அழகான பெண்.


சுந்தரர் தம் நண்பரிடம் அந்தப் பெண்ணைப் பற்றி விசாரிக்க...
ஞாயிறு கிழார் என்பவரின் மகள். பெயர் சங்கிலியார். ஈசனுடைய அருளைப் பெற்றவரையே மணப்பேன் என்று கன்னி மாடத்தில் இருக்கிறாள்.
அன்றிரவு சங்கிலியாரின் கனவில்...
நம்பி ஆரூரன் உனக்கேற்றவன். அவனை மணந்து கொள்வாயாக.
சுவாமி! அவர் பரவையாரின் மணாளர் அல்லவா?
உன்னைப் பிரிவதில்லை என்று சத்தியம் செய்த பின் மணந்து கொள்.
சங்கிலியைத் திருமணம் புரிய நண்பரைத் தூது அனுப்பினார் சுந்தரர். சம்மதமளித்த சங்கிலியார் நிபந்தனை விதித்தார். அருகே கட்டிலில் உறங்கப் போன சுந்தரர் கனவில்...
சங்கிலியின் நிபந்தனையை ஏற்றுக் கொள். 'என்றும் பிரியேன்' என்று என் சந்நிதியில் சபதம் செய்து சங்கிலியாரை அடைவாயாக.
சுவாமி! நான் தங்கள் சந்நிதியில் சபதம் செய்ய வரும் போது தாங்கள் மகிழ மரத்தடியில் இருக்க வேண்டும்.
அப்படியே ஆகுக!
மறுநாள் சுந்தரர் சங்கிலியாரைச் சந்தித்து...
ஈசன் சந்நிதியில் உன்னைப் பிரியேன் என்று சத்தியம் செய்து தருகிறேன்.
அபசாரம். இறைவனைச் சாட்சிக்கு இழுப்பது தவறு. வெளியே உள்ள மகிழ மரத்தடியில் சபதம் செய்து கொடுத்தால் போதும்.


ஆகா! மகிழ மரத்தடிக்கு ஈசனை அனுப்பிய என் தந்திரம் பலிக்கவில்லையே! தல யாத்திரை செய்யாமல் ஒரே இடத்தில் எவ்வாறு இருப்பேன்? இறைவா! இதுவும் உன் விளையாட்டா?
வேறு வழியின்றி மகிழ மரத்தடியில் சபதம் செய்தார் சுந்தரர்.
உன்னை ..றென்றும் பிரியேன். இங்கேயே இருப்பேன்.
இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள். வசந்தகாலம் வர, திருவாரூரில் தியாகராஜப் பெருமான் வீதியுலா காட்சி நினைவுக்கு வந்ததும் சபதத்தை மறந்து சங்கிலியாரிடம் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பினார் சுந்தரர்.
பயணத்தின் இடையில்...
ஐயோ! இறைவனே! கண் தெரியவில்லையே. சங்கிலிக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை மீறியதற்குத் தண்டனையா? தியாகேசா! உன்னை எப்படிக் காண்பேன்?
திருவெண்பாக்கத்தை அடைந்ததும் ஈசன் ஊன்றுகோல் வழங்கினார்.
மகிழ மரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்ட சிவனே! சந்நிதியில் இருக்கிறீரா?
உளோம். போகீர்!


காஞ்சியில் மனமுருகி வேண்டி ஒரு கண்ணில் பார்வை பெற்று திருவாரூரை அடைந்தார் சுந்தரர்.
தியாகராஜனே! நான் உம்முடைய மீளா அடிமை அல்லவா? உம்மை தரிசிக்க இன்னொரு கண்ணையும் கொடுத்தருளுங்கள்.
என் ஐயனே! என் இரு கண்களும் திறந்து கொண்டன. என்ன சொல்லித் துதிப்பேன்!
வீடு திரும்பினார் சுந்தரர். தட்டியும் கதவு திறக்கவில்லை.
பரவை கோபமாக இருப்பதில் ஆச்சரியம் என்ன? இதற்கும் ஈசனிடம் தான் உதவி கேட்க வேண்டும்.
சுந்தரர், கோவில் தேவாசிரியர் மண்டபத்தில் தங்க அவருக்காக ஈசன் பரவையிடம் தூது சென்றார்.
சிவபெருமான் கதவைத் தட்டி குரல் கொடுக்கவும் பரவை திறந்தாள், நெகிழ்ந்தாள்.
நீ ஆரூரனை மனம் உவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.
வரச் சொல்லுங்கள் சுவாமி.


பரவையும் சுந்தரரும் சிவத் தொண்டு புரிந்து கொண்டு மகிழ்ச்சியோடு இருந்தார்கள். இதற்கிடையில் சேரநாட்டில் கொடுங்கோளூர் என்ற ஊரிலிருந்து அரசாண்ட சிவபக்தர் சேரமான் பெருமான், ஒருநாள் பூஜை முடிந்ததும் துயருற்றார்....
இன்று ஏன் ஈசனுடைய சிலம்பொலி கேட்கவில்லை? பூஜை முடிந்ததுமே சிலம் பொலிக்குமே!
இன்று ஏதோ குறை வந்து விட்டது. இறைவன் என் பூஜையை ஏற்கவில்லை என்றால் நான் உயிரோடு இருந்து என்ன பயன்?
அக்கணத்தில் சிலம்பொலி கேட்டது.
சுவாமி! இன்று ஏன் தாமதம்? நான் பதறி விட்டேன்.
தில்லைச் சிற்றம்பலத்தில் என் அன்பன் பதிகம் பாடிக்கொண்டிருந்தான். அந்தத் தமிழிலும் இசையிலும் மயங்கி இருந்தோம். அதனால் சிலம்பொலி தரத் தாமதமாகி விட்டது.
இவ்வாறு சுந்தரர் பெருமையை அறிந்த சேரமான் பெருமான் திருவாரூர் சென்று அவரைச் சேரநாட்டுக்கு அழைத்து வந்தார்.
சில காலம் சென்று சுந்தரர் உலக வாழ்க்கையை விட்டுத் திருக் கயிலாயம் போக வேண்டும் என்று விரும்பினார். திருவஞ்சைக் களம் என்ற தலத்தில் தேவர்கள் தோன்றி சுந்தரரை வணங்கினர்.
சேரர் கோன் வாழ்க! வாழ்க! வன்றொண்டர் வாழ்க வாழ்க!
சிவத்தொண்டரே! உம்மைக் கைலாயம் அழைத்துப் போக வந்திருக்கிறோம்.
காத்திருக்கிறேன். இதோ வருகிறேன்.


திருக்கயிலாயம் நோக்கி வான வெளியில் செல்லும் போது..
அடாடா! என் அருமைத் தோழர் சேரமானை அழைத்து வராமல் போனேனே!
பூவுலகில் சேரமான் உள்ளத்தில் ஓர் எதிரொலி.
என் அன்பர் நம்பியாரூரர் கைலாயம் செல்கிறார் போலிருக்கிறதே. நான் முன்னால் போய் அவரை வரவேற்க வேண்டும்!
குதிரை மீதேறி அதன் காதில் நமச்சிவாய மந்திரம் ஓதினார் சேரமான். குதிரை மேலே எழும்பியது. சுந்தரர் போகும் திசையில் விரைந்தது.
ஐராவதத்தை வலம் வந்தது குதிரை.
நண்பரே! வந்தீரா?
உமக்கு முன்னால் போகிறேன்!
கைலாய எல்லையில் சேரமானின் வரவேற்பை சுந்தரர் ஏற்றார். ஆனால் நந்தி தேசுவரர் சேரமான் தவிர மற்றவர்களை மட்டுமே கைலாயத்துள் அனுமதித்தார்.


கைலயங்கிரியில் உமையையும் சிவபெருமானையும் சுந்தரர் வணங்கினர்.
சுந்தரா! வந்தாயா?
வந்து விட்டேன் சுவாமி! என் நண்பரும் வந்திருக்கிறார். அவரையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்
நீ சொல்லி மறுக்க முடியுமா?
சேரமானுக்கும் கைலாய பதவி கிட்டியது.
சுந்தரரை வணங்கி ஐந்தெழுத்தை ஓதியதால் உன் சேனை நெருங்கு முன்னரே என்னை அடைந்தாய்!
பரவையாரும் சங்கிலியாரும் வந்தனர்.
இதோ! என் தோழிகளும் வந்து விட்டார்களே! அநிந்திதை! கமலினி! உலக வாழ்வு போதுமா?
இனித் தங்களை விட்டுப் போகவே மாட்டோம்.
ஈசனிடம் சேரமான் கோரிக்கை.
பிரபோ! திருக்கயிலாய ஞான உலா பாடியிருக்கிறேன். கேட்டருள வேண்டும்.
பாடுங்கள்.
உபமன்யு கதையை முடித்தார்.
அடியார்களிடம் ஈசன் காட்டும் பரிவும் அன்பும் சொல்லி முடியுமோ? சுந்தரர் தம் பழைய நிலையை அடைந்தார். சேரமான் கணங்களில் ஒருவரானர்.

# விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி.சாரதி

உங்கள் தாத்தாவைக் கேளுங்கள். மோட்டார் என்றாலே அந்தக் காலத்தில், கார் ஒன்றுதான் நினைவுக்கு வரும். ஆனால், விஞ்ஞான யுகத்தில் வாழும் உங்களுக்குத் தெரியும், பெரிய பெரிய இயந்திரங்களை இயக்கும் மோட்டார்களைப் பற்றி! அவ்வளவெல்லாம் எதற்கு? கிணற்று நீர் இறைக்கும் மின் மோட்டார் பம்ப் செட். பார்க்காமலா இருப்பீர்கள்?

நாமே ஒரு மாதிரி மின்மோட்டார் தயார் செய்து இயக்கிப் பார்ப்போமா?

ஐந்தும், பத்தும் அடுக்காய் இருந்தால், அறியாத பெண்ணும் கறி சமைப்பாளாம்! அறிந்த உங்களுக்குத் தேவையான பொருட்கள் மட்டுமிருந்தால், மிகத் திறமையாகச் செய்துவிட மாட்டீர்களா?

ஒரு பலகை... மரப்பலகைதான்!

12 செ.மீ. × 3 செ.மீ. அளவில் இரு தகடுகள்— 2 செ.மீ. அடிப்புறமும், 10 செ. மீ. உயரமுமாக ''L''வடிவில் வளைத்துக் கொண்டவை...

ஒரு நீண்ட பிளாஸ்டிக் பின்னல் ஊசி...

ஒரு சுமாரான பெரிய அளவு (உருளை வடிவ) கார்க்... இருபுறமும் வட்ட ஓட்டையிட்டவை...

அந்தக் கார்க்கில் இறுக்கமாக 'காயில்' சுற்ற நீண்ட (செப்பு) மின் கம்பி, மற்றும் சற்று உறுதியான செப்பு மின்கம்பித் துண்டுகள் இரண்டு.

மிகச்சிறு பிளந்த கார்க் துண்டுகள் இரண்டு...

ஆங்கில U வடிவ காந்தம்... சக்தி வாய்ந்ததாக இருக்கட்டும்!

பேஸ்ட் ட்யூப் அலுமினியத் தகடு அல்லது குழந்தைகள் பாலுணவுத் தகர உள்வட்டத் தகடு...

மின்சார செல் ஒன்று... பாட்டரி லைட் செல்தான்!

சிறிது நீளமான ஒயர் துண்டு 2.


தேவையான அளவில் சிறுசிறு ஆணிகள்...

டிராயிங் பின்கள் 2.

எல்லாம் தயார்தானே? ஆரம்பிக்கலாமா?

முதலில் கார்க்கைச் சுற்றி இடவலப் புறமாக மிகச்சிறு பள்ள அமைப்பு (''காடி'') எடுத்துக் கொள்வோமா? அப்போதுதான் செப்பு மின் கம்பியைச் சுற்றும் போது சீராகப் படியும். செப்பு மின்கம்பியைச் சீராக இறுக்கிச் சுற்றிக் கொண்டே வந்தால், உங்களுக்கே புரியும் சிறுபள்ள அமைப்பின் பயன்!

ஒன்று மறந்து விட்டோமே! இரண்டு கம்பி முனைகளும் வெளியே சற்று தூரம் வரும் வகையில் முனைகளை விட்டு, (40 அல்லது 50 சுற்று) சுற்ற வேண்டும். இப்படிச் சுற்றும் போது கார்க்கின் (பக்க) ஓட்டைகளை மறைத்துவிடக் கூடாது... இது சற்றுக் கடினம் என்றால் கார்க்கைச் சுற்றிச் சுற்றிச் செப்புக் கம்பியை நூல்கண்டு சுற்றுவது போலவும் சுற்றிக்கொள்ளலாம்! பிளாஸ்டிக் பின்னல் ஊசியை கார்க்கினுள் செருகிக் கொண்ட பிறகும் செப்பு மின்கம்பியைச் சுற்றலாம். எப்படிச் சுற்றினாலும் கம்பியில் கார்க் எளிதாகச் சுழலும்படி அமையவேண்டும். நன்றாகச் சுழற்றிப் பாருங்கள். இது மிக முக்கியம்! ''L'' வடிவத் தகடுகளிலும் பிளாஸ்டிக் பின்னல் ஊசி செருகும் வகையில் மேற்புறத்தில் ஒரே அளவான இடத்தில் துளையிட்டுக் கொள்ளுங்கள். இந்த L வடிவத் தகடுகளை மரப்பலகையில் இரண்டிரண்டு ஆணிகள் அடித்துப் பலமாகப் பொருத்திக் கொள்ளுங்கள். L வடிவ மேற்புற இரு துளைகளிலுமாக செப்பு மின் கம்பி சுற்றிய கார்க் உருளை பொருத்திய பிளாஸ்டிக் ஊசியை




நுழைந்து விடுங்கள். இந்த பிளாஸ்டிக் ஊசி நேர் கோடு போல அமைய வேண்டும். L வடிவத் தகடுகட்கு வெளிப்புறமும் சற்று நீட்டிக்கொண்டது போல் பிளாஸ்டிக் ஊசி அமைய வேண்டும்... (ஊசி கீழே விழக் கூடாதே!) விரல்களால் மறுபடியும் ஊசியைச் சுற்றிவிட்டு நன்கு சுழல்வதை உறுதி செய்து கொள்ளுங்கள்!

ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் படத்தைப் பக்கத்தில் வைத்துப் பார்த்து உறுதி செய்து கொள்ளுங்கள்!

முதலிலேயே குறிப்பிட்டோமே..! செப்பு மின் கம்பியின் இருமுனைகள் — சுற்ற ஆரம்பிக்குமுன் வெளியே விட்ட முனை ஒன்று... சுற்றி முடித்த முனை ஒன்று...

முதலில் ஒரு முனையைப் பிளந்த கார்க்கின், பிளந்த பகுதியில் வைத்து பிளாஸ்டிக் ஊசியின் அடிப்புறத்தில் ஊசி மீது படும்படி வைத்துப் பிடித்துக் கொண்டு, அலுமினியம் அல்லது தகரத் தகட்டுத் துண்டைச் சிறிய அளவில் வெட்டி (கார்க்கின்) மேல் புறத்தில் செப்பு மின்கம்பியை மூடியது போல் வைத்து இரு ஓரங்களையும் உறுதியான ட்வைன் நூலால் இறுகக் கட்டி விடுங்கள்.

இதே போலத்தான் இன்னொரு செப்பு மின்கம்பி முனையையும் இன்னொரு கார்க்கில் வைத்துத் தகட்டால் மூடிக் கட்டிவிடுங்கள். இவையெல்லாம் இரண்டு L வடிவத் தகடுகட்கிடையில் மட்டுமே இருக்க வேண்டும். படத்தில் இரண்டு முனைகளும் ஒரு பக்கத்தில் இருந்தாலும், இருமுனைகளையும் தாராளமாக இரண்டு வெவ்வேறு பக்கத்திலும் பொருத்தலாம். அடுத்து 'U' வடிவ காந்தத்தைப் பக்கவாட்டில் செப்பு மின்கம்பி சுற்றிய கார்க்கின் மீது படாமல், மேலும் கீழுமாகப் பக்கங்கள் அமையும்படி, பலகை மீது ஒரு பக்கத்தை வைத்துவிடுங்கள். காந்தம் கீழே விழாமல் இருக்க மரப் பலகை மீதுள்ள காந்தத் துண்டின்மீது ஒரு சிறு இரும்புத் தகட்டை வளைத்து அழுத்தி சிறு ஆணியால் அடித்து, இருபுறமும் உறுதியாக்கிக் கொள்ளலாம். காந்தம் அசையுமே தவிர கீழே விழாதல்லவா?

செல்லின் இரண்டு முனைகளிலிருந்து இரண்டு மின்கம்பிகளை இணைத்துக் கொண்டு பிளாஸ்டிக் ஊசிக்குத் தொடர்பு கொடுக்க வேண்டியதுதான் பாக்கி!

நேராக இணைக்க முடியாது. அதற்கு இரண்டு பிரஷ் அல்லது துடைப்பான் தேவை! செப்பு மின்கம்பித் துண்டுகள் இரண்டையும், தனித்தனியே எடுத்து, (மடித்து) முறுக்கி வைத்துக்கொள்ளுங்கள்!

முறுக்கிய மின்கம்பிகளை L போல வளைத்து மரப்பலகை மீது வைத்து ட்ராயிங் பின்களால் உறுதியாகப் பொருத்தி விடுங்கள். இவைதாம் நம் துடைப்பான்கள். இந்த இரு துடைப்பான்களின் உச்சிகளும் சிறு கார்க் துண்டுகளின் மீது தொடுவது போல அமைய வேண்டும். மின் செல்லிருந்து வரும் இரு ஒயர் துண்டுகளும், இந்த இரு துடைப்பான்கள் மீது மட்டுமே தனித்தனியே இணைக்கப்பட வேண்டும்.

இப்போது மின் மோட்டார் ரெடி! பிளாஸ்டிக் ஊசியை ஒரு முனையைப் பிடித்து முதலில் கையால் சுழற்றி விட்டு விடுங்கள்; போதும்!

மின் மோட்டார் சுழல ஆரம்பித்து விடும்!

'அய்யோ! அய்யோ!' இதைப் படிக்கும் போதே தலை சுற்றுகிறதே என்கிறீர்களா? படத்தைப் பார்த்துக் கொண்டால் தலைசுற்றல் தீர்ந்துவிடும்!

# யானையும் பன்றியும்

குழந்தைக் கவிஞர்

கோயில் யானை வந்தது;
   குளத்தில் நன்கு குளித்தது;
தூய்மை யான உடலுடன்
   தெருவில் நடந்து சென்றது.

சென்ற போது உடலெல்லாம்
   சேற்றைப் பூசிக் கொண்டஓர்
பன்றி வரவே கண்டது;
   பக்கம் ஒதுங்கி நின்றது..

**பன்றி:**

என்னைக் கண்டு பயந்திடும்
   யானை யாரே, என்னுடன்
சண்டை போட உம்மிடம்
   சக்தி உண்டோ சொல்லுவீர்?

**யானை:**

சின்னஞ் சிறிய பன்றியே,
   என்னை எதிர்த்துச் சண்டையா?
உன்னை எனது காலினால்
   உதைத்தே கொல்வேன்; ஆயினும்

நாற்றம் பிடித்த சேற்றினை
   நானும் ஒட்டிக் கொள்வதா?
சேற்றில் புரளும் பன்றியே,
   சீச்சி, ஓடு, ஓடு!



# நினைவில் நிற்பவை!



## பைத்தியக்காரனின் பதில்!

ஒருமுறை பண்டித நேரு ஒரு பைத்தியக்கார மருத்துவ மனையைப் பார்வையிடச் சென்றார். மருத்துவ மனைப் பொறுப்பாளர்கள் அவருக்கு ஒவ்வொரு பைத்தியத்தைப் பற்றியும் விளக்கிக் கூறிக்கொண்டு வந்தனர். நேரு அவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டே வந்தார்.

நேரு வரும் வழியில் ஒரு பைத்தியக்காரன் அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே நின்றான். அதனால், அந்த மனிதன் ஒருவேளை தமக்குத் தெரிந்தவனாக இருக்கலாமோ என்ற எண்ணம் நேருவுக்கு ஏற்பட்டது.

பைத்தியக்காரன் நேருவைப் பார்த்து, ''யார் நீ?'' என்று கேட்டான். நேருவுடன்வந்த பொறுப்பாளர்கள் திடுக்கிட்டனர். 'நாட்டின் பிரதமரிடம் போய் அவன் அப்படிக் கேட்டுவிட்டானே?' என்று அவர்கள் வருந்தினர். நேருவோ அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. பைத்தியக்காரன் கேள்விக்குப் பதிலாக அவர், ''நான்தான் ஜவஹர்லால் நேரு'' என்றார்.

இதைக் கேட்ட அந்தப் பைத்தியக்காரன் குலுங்கக் குலுங்கச் சிரித்தபடி, ''ஏய், உரக்கச் சொல்லாதே! நானும் இப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தேன். என்னை இங்கே கொண்டு வந்து அடைத்து விட்டார்கள்'' என்று பதிலளித்தான்.

## தூரம் எவ்வளவு?

அக்பரின் அரசவையில் அன்று அறிஞர்கள், கலைஞர்கள், நாட்டு முதன்மையாளர்கள் அனைவரும் திரண்டிருந்தார்கள். அக்பர் அவர்களிடம் ஒரு கேள்வியைப் போட்டார்.

''பொய்க்கும் மெய்க்கும் உள்ள தூரம் எவ்வளவு?'' என்பதே அந்தக் கேள்வி.

''விடை தெரிந்தவர்கள் சொல்லலாம்'', என்று அவர் அவையோரைப் பார்த்துக் கூறினார். அவையில் அமைதி நிலவியது. ''என்ன பதில் சொல்வது? அறிஞர்கள் குழப்ப நிலையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அரசவை விகடகவி பீர்பால் எழுந்து ''நான்கு விரல் அளவு'' என்று பதிலளித்தார்.

''எப்படி?'' என்று ஆர்வம் துள்ளும் முகத்தோடு வினவினார் அக்பர்.

விளக்கம் கொடுத்தார் பீர்பால்:

''அரசே, காதால் கேட்பது பொய். கண்ணால் காண்பது மெய். எனவே பொய்க்கும், மெய்க்கும் உள்ள தூரம் காதுக்கும் கண்ணிற்கும் உள்ள தூரம் தான் – அதாவது நான்கு விரல்கடை..''

–இதைக் கேட்ட அக்பர் மகிழ்ச்சி அடைந்தார். அவையே கலகலப்பில் மூழ்கியது.

## பண ஓசை!

ஐதராபாத் மன்னர் நிஜாம் செல்வத்தில் பேராசை கொண்டவர். நிறைந்த செல்வம் இருந்தும் அவருக்குப் பண ஆசை மட்டும் குறையவில்லை. மற்றும் அவர் செலவிலும் மிகக் கஞ்சத்தனம் காட்டிவந்தார்.

ஒருநாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் ஓர் அவசரச் செய்தியை அரசாங்க அதிகாரிகள் அவரிடம் அறிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தூங்கும்போது மன்னரை எழுப்புவது எப்படி ..? அப்படி எழுப்பினால் அதற்கு உரிய தண்டனையை அனுபவிக்கவேண்டியது வருமே! என்ன செய்வதென்று அங்கிருந்த அதிகாரிகள் திகைத்துப் போனார்கள்.

மன்னரின் இயல்பை நன்கு அறிந்திருந்த அதிகாரி ஒருவருக்கு ஒரு வழி தென்பட்டது. கொஞ்ச நாணயங்களை அவர் ஒரு தட்டில் கொண்டுவந்து, மன்னர் படுத்திருந்த இடத்தின் அருகே அவற்றைக் தரையிலே கொட்டினார், நாணயங்களின் 'கணீர், கணீர்' என்ற ஓசையைக் கேட்டதும் மன்னர் துயில் கலைந்து சட்டென்று எழுந்து, ''என்ன. பணமா விழுகிறது!'' என்று கேட்டார்.

மன்னரைக் குரல் ஓசையால் எழுப்பாமல், பண ஓசையால் தூக்கத்திலிருந்து எழ வைத்த அதிகாரியின் திறமை வியக்கத்தக்கது.

—த அருள் சிவபாலன் (47)
செங்கல்பட்டு.


## நான் செய்த நல்ல செயல்

1983 நவம்பர் பதினொன்றும் நாள் மாலை நல்ல மழை. எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள ஓர் ஓடையில் ஒரு நாய் மயங்கிக் கிடந்தது. அது யார் வீட்டு நாயோ? எனக்கு அந்த நாயைக் கண்டதும் அதன் மேல் பரிவு ஏற்பட்டது. உடனே, அதைத் தூக்கிச் சென்று ஒரு நாட்டு வைத்தியரிடம் காண்பித்தேன். அவர் 'முடக்குவாதம்' எனக் கூறி ரூ. 10—க்கு தைலம் கொடுத்தார். அதை வாங்கி நாயின் காலில் ஒரு தடவை பூசியதும் அது கண் விழித்தது. ஆனால் நடக்கவில்லை.

பின்பு, தொடர்ந்து இரு வாரம் தைலத்தைப் பூசினேன்! நான் அந்தத் தைலத்தை நாயின் மீது தடவியதால் கை ஒரே நாற்றம். அதனால், சில வேளைகளில் என்னால் சாப்பிடக்கூட முடியவில்லை. நாய் பூரண குணம் பெற்று நன்றாக நடக்கத் தொடங்கியது. எனக்கோ ஒரே மகிழ்ச்சி.

பிறகு அந்த நாயின் உரிமையாளரான ஒரு பாட்டியிடம் நாயை ஒப்படைத்தேன். இப்போது அந்நாய் என்னை எங்கே கண்டாலும், வாலை ஆட்டிக்கொண்டு, முன்கால்களை முன்னே வைத்து மடக்கி, வணங்குவது போல் பாவனை செய்யும். அப்போது. எனக்கு ஏற்படும் இன்பத்திற்கு அளவே இல்லை!

— பேரா வி. த. விஜயகுமார், (3308
கிள்ளியூர்



**ஒளிந்திருக்கும் ஊர்களைக் கண்டுபிடியுங்கள்!**

1. போலீஸ்காரர் காலால் குடிகாரனை உதைத்தார்.
2. பலப்பம் பாய்மீது உள்ளது.
3. புத்தகம் பம்பரம் ஆகியவற்றை மேஜையின் மீது வைக்காதே!
4. டிரைவர் காரைக்குடிசைக்கு பக்கத்தில் நிறுத்தினார்.
5. பேனாவை எங்கோ வைத்துவிட்டு இங்கு தேடுகிறாயே!
6. அக்கா சில நாட்களில் வருவதாகக் கடிதப் போட்டிருக்கிறாள்.
7. நல்ல மார்க்குகள் வாங்கினால் அப்பா ரிஸ்ட் வாட்ச் வாங்கித் தருவதாகச் சொன்னார்.
8. கிளைவ் தமது ரைபிளால் பலமுறை தற்கொலை செய்து கொள்ள முயன்றார்.
9. கலா கூர்மதி படைத்தவள்.
10. கப்பு துவையல் அரைத்தால் அதன் ருசியே அலாதிதான்.
11. காந்தியைப் பின்பற்றும் சங்கர் நூல் நூற்றே ஆடைகளை அணிவது வழக்கம்.
12. கணக்கில் எங்கோ பிசகு நேர்ந்துவிட்டது.
13. அவள் தந்தைக்கு அம்புஜம் முதல் பெண்.
14. இந்தக் காரைக் கால் நூற்றாண்டுக்கு முன் வாங்கினேன்.
15. இன்னும் ஓராண்டில் வெங்கட் டாக்டர் படிப்பை முடித்து விடுவான்.

1. லால்குடி
2. பம்பாய்
3. கம்பம்,
4. காரைக்குடி,
5. கோவை,
6. காசி,
7. பாரீஸ்,
8. மதுரை.
9. லாகூர்
10. புதுவை,
11. கர்நூல்,
12. கோபி,
13. ஜம்மு,
14. காரைக்கால்,
15. கட்டாக்.

—ரா. க.

எப்போதும் அவசரத்துடன் இருக்கும் பரணி, அப்போதும் அவசரமாக எதையோ செய்து கொண்டிருந்தான். அப்போது அம்மாவின் அவசரமான அழைப்பு அவன் காதுகளை எட்டியதால் அவன் அவசரத்துடன், ''என்ன அம்மா?'' என்று பதில் கொடுக்க,

அம்மாவே அங்கு வந்து விட்டாள்.

''இந்தா பரணி, இந்தக் காகிதத்தில் முகவரியை எழுதித் தபாலில் சேர்த்துவிடு. இது ரொம்ப அவசரம்'' என்று சொல்லிவிட்டு, அவசரமான நடையுடன் உள்ளே போய் விட்டாள்.

அவசரமான காரியம் எதுவானாலும் பரணிக்கு ரொம்பப் பிடிக்கும். அந்த நினைப்புடன், அவசரமாக, குதிரையின் மேல் ஏறுவது போல் சைக்கிளில் தாவி ஏறி அவசரத்துடன் அதன் கால்களை மிதிக்க, அதுவும் எஜமானரின் அவசரத்தைப் புரிந்து கொண்டு அவசரமாக ஓடியது. பறந்து சென்ற அந்தச் சைக்கிள் போஸ்ட் ஆபீஸைப் பார்த்தவுடன் தன் வேகத்தை நிறுத்திக்கொண்டு அவசரமாக நின்றது.

போஸ்ட் ஆபீஸில், அலுவலர்கள் அவர்கள் பாட்டுக்கு அவசர அவசரமாக எழுதிக் கொண்டிருந்தார்கள். பேனாவை எடுத்துக்கொண்டு பரணி எழுத உட்கார்ந்தான் முகவரியை, அதுவும் அவசரமாக. அப்போது தன் முன்னால் யாரோ நிற்பது போல் உணர்ந்தான். அவசரமாகத் தலையைத் தூக்கிப் பார்த்த போது, ஒரு வயதானவர் நிற்பதைக் கண்டான். கையில் ஒரு தடியுடன் அவர் காட்சியளித்தார். எதற்காகத் தன் முன் நிற்க வேண்டும் என்று புரிந்து கொள்ள முடியவில்லை பரணியால். அவசரமாகச் சிந்தித்தான் அவன். ஆனால், ஒன்றும் விளங்கவில்லை.

அப்போது அந்தத் தாத்தாவே பேசினார்:

''தம்பி! நான் வீட்டிலேயிருந்து வரும்போது பேனா எடுத்து வர மறந்து விட்டேன். ஒரு கடிதத்தை

# பேனா கற்பித்த பாடம்



எஸ்.எஸ்.ராமன்



## குறள் வாழ்வு வாழ்வோம்

-தெ. முருகசாமி

வள்ளுவர் குறளில் கூறியபடி வாழ்ந்து காட்டியவர்கள் பலர். அவர்களைப் போல நாமும் குறள் வாழ்வு வாழ்ந்து காட்ட முயற்சி செய்ய வேண்டாமா?

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (294)

உள்ளத்தால் பொய் சொல்லாது வாழ்பவர் உலகத்தாரின் உள்ளத்தில் நீங்காத இடம் பெறுவர். அப்படி இடம் பெற்றவர் —உலக உத்தமர் காந்தியடிகள்.

யாதானும் நாடாமால் ஊராமால்
என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (397)

கற்றவர்க்கு எல்லா நாடுகளும், ஊர்களும் தம்முடையதாகவே இருக்கும். ஆகையால், ஒருவர் தாம் இறக்கும் வரை படித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படிப் படித்துக்கொண்டே இருந்தவர் — பேரறிஞர் அண்ணா.

அருமை உடைத்தென்று அசாவாமை
வேண்டும்,
பெருமை முயற்சி தரும். (611)

ஒரு செயல் அருமையுடையதெனக் கருதித் தளரக் கூடாது. இடைவிடாத முயற்சி தக்க பலனைத் தரும். தளரா முயற்சியால் பலனைத் தந்து பெருமையடைந்தவர், தமிழ்நாடெங்கும் ஓலைச்சுவடிகளைத் தேடிப் பல நூல்களைத் தந்த தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத ஐயர்.

கலங்காது கண்ட வினைக்கண்
துளங்காது
தூக்கம் கடிந்து செயல். (668)

செய்யத் துணிந்த செயலைச் சோர்வின்றிக் காலத்தைக் கடத்தாமல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தவர் — ஆங்கிலேயருக்கு எதிராகத் தூத்துக்குடியில் கப்பலோட்டிய வ. உ. சிதம்பரனார்.

அவசரமாக எழுதி போஸ்ட் செய்ய வேண்டும். நீ வைத்திருக்கும் பேனாவை ஒரு ஐந்து நிமிடம் கொடுத்தால் நான் எழுதி விடுவேன். அலுவலர்கள் யாவரும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், பேனா கொடுப்பார்களோ, இல்லையோ என்பது சந்தேகமாக இருக்கிறது. உன் பேனாவை எனக்குத் தருவாயா?'' என்று அவர் சொன்னதைக் கேட்ட பரணியின் முகம் அவசரமாக அஷ்டகோணல்களாக மாறி அசிங்கமாகக் காட்சியளித்தது.

''உங்களுக்கு நான் ஏன் பேனாவைக் கொடுக்க வேண்டும்? இதற்காகவா நான் இங்கு வந்தேன்? உங்களுக்குப் பேனா கொடுத்து, நீங்கள் அதன் 'இங்க்'கைத் தீர்த்து விட்டீர்களானால் நான் என் செய்வேன்? அதுவுமல்லாமல் நீங்கள் எழுதும் வரை நான் காத்துக் கொண்டிருக்கத்தான் முடியுமா? நடக்காத காரியம். ஊஹூம். நான் பேனா தர மாட்டேன்,'' என்று அவசரமாகப் பதிலளித்ததைக் கேட்ட அந்தத் தாத்தா ஏமாற்றமடைந்தாரே தவிர, கோபம் அடையவில்லை. அவரிடம் தப்பு இருந்ததால் அவர் ஒன்றும் பேசாமல் இருந்து விட்டார்.

ஆம்! பேனா எடுத்து வராதது தப்புத்தானே! அப்படியிருக்கும் போது

மற்றவர்களைப் பேனா கேட்பது எப்படிச் சரியாகும்? சிறுவன் பேசியது நியாயமாகத்தான் பட்டது தாத்தாவுக்கு. பக்கத்தில் இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டார் அவர். வேறு யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், யாரும் வரவில்லை.

பேனாவை எடுத்துப் பரணி இரண்டு வரி எழுதியிருப்பான். மூன்றாவது வரி எழுதும்போது பேனா வேலை செய்ய மறுத்தது. பேனாவில் 'இங்க்' தீர்ந்து விட்டது என்று உணர்ந்த பரணி, அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தான். அங்கு இருந்த அலுவலர்களைப் பேனா கேட்டபோது, பரணிக்கு ஏமாற்றம் தான் பதிலாகக் கிடைத்தது.

தாத்தா தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல் உணர்ந்தான், அவன். ஆனால் அவரோ அவனைச் சாதாரணமாகவே பார்த்தார்.

தன் சட்டைப் பையைத் தடவிப் பார்த்தான். பையில் எதுவுமில்லை. என்ன செய்வது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்த பரணியை நோக்கி அந்தத் தாத்தா தடியை ஊன்றிக்கொண்டு வந்தார்.

''ஏன் தம்பி! நான் பேனா கேட்டபோது கொடுக்க மறுத்தாயே, 'இங்க்' தீர்ந்து விடும் என்று சொன்னாயே, காத்துக் கொண்டிருக்க முடியாது என்று சொன்னாயே, 'இங்க்' நிஜமாகவே தீர்ந்து விட்டது, பார்த்தாயா? காத்துக் கொண்டிருக்கும்படி ஆகிவிட்டது, பார்த்தாயா?'' என்று கூறிவிட்டுத் தாத்தா சிரிப்பது போல் பிரமை ஏற்பட்டது பரணிக்கு.

ஆனால், தாத்தா அப்படியெல்லாம் சொல்லவில்லை. பாக்கெட்டில் கைவிட்டுப் பத்துப் பைசாவை எடுத்தார். பரணியின் கையில் அழுத்தி ''பையிலே காசு இல்லை என்றுதானே கவலைப்படுகிறாய்? இந்தாப்பா! இதைக் கொண்டு போய்ப் பக்கத்துக் கடையில் கொடுத்து உன் பேனாவிற்கு 'இங்க்' நிரப்பிக் கொண்டு முகவரியை எழுதிக் கொள்'' என்று கூறியதைக்கேட்டு, நிஜமாகவே அழுதுவிட்டான் பரணி. அவருடைய உதவும் பான்மையைக் கண்டு வெட்கப்பட்டு, செய்த தவறுக்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டான்.

அவர் அவன் முதுகைச் செல்லமாகத் தட்டிக்கொடுத்து, அவனைப் பார்த்துச் சிரித்தார். அவனும் சிரித்தான்.



## தெரிந்து வைப்போமே!

※ ஒரு பசுவின் அளவில் இருக்கும் கரடி, குட்டி போட்டால் அந்தக் குட்டி எலியின் அளவே இருக்கும்.

※ திக்கித் திக்கிப் பேசுவதற்காக வெட்கப்படாதீர்கள். அரிஸ்டாடில், மோஸஸ், வர்ஜில் முதலிய பண்டைக்கால அறிஞர்களும், டார்வின், சர்ச்சில், சாமர்ஸெட் மாம், ஆறாம் ஜார்ஜ் முதலியோர்களும் திக்கித் திக்கிப் பேசியவர்களே!

※ ஐரோப்பாவில் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை, கார்களின் முன்சீட்டில் உட்கார வைத்து அழைத்துப் போவது சட்டப்படி குற்றம். விபத்தில் குழந்தைகள் காயமடையாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

※ மனிதக் குரங்குகளில் மிகவும் அறிவுள்ளது சிம்பன்ஸி இனம். இவை ஆப்பிரிக்கக் காட்டுப் பகுதிகளில் வாழ்கின்றன. வழுக்கைத் தலைவகை, நீண்ட ரோமம் உள்ளவை, குள்ளமானவை என மூன்று வகைகள் உண்டு. முழு வளர்ச்சிகொண்ட ஆண் சிம்பன்ஸி சுமார் 80 கிலோ எடையும், ஐந்தடி உயரமும் கொண்டிருக்கும். பெண் இனம் உருவில் ஆண் இனத்தைவிடச் சிறியவை. கோபம் கொண்ட சிம்பன்ஸியை எதிர்க்க முடியாது.

-வசந்தா கோவிந்தன்


வார்த்தை எதற்கு...?
STOP
வருமே சிரிப்பு!

# புகைப்பட ஆல்பம்





கடிகாரத்தின் மீதும் குந்தியிருப்பேன்;
கூடையின் மீதும் குந்தியிருப்பேன்

-புகைப்படங்கள்: பி. சுந்தரம்



தெரிவது மூன்று முகம் - ஆறு ?
சிரிப்பதோ ஒரு முகம்தான்!

-புகைப்படம்: பி. சுந்தரம்




இரு படங்களும்: எம். நடராஜன்.

எங்கள் மாமா காலிலே
ஏறி ஊஞ்சல் ஆடுவேன்!

எங்கள் தாத்தா முதுகிலே
ஏறி எங்கும் சுற்றுவேன்!







எத்தனையோ ஊர்கள் பார்த்த
என்ஜினை நாம் பார்க்கிறோம்!

-புகைப்படம்: பி. சுந்தரம்

தண்டவாளம் மேலே ஓடும்
சக்கரங்கள் பார்க்கிறேன்.

புகைப்படம்: ஜி. பிரபாகர்

# கண்ணனும் கடிதமும்

புலேந்திரன்




கண்ணன் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். படிப்பில் மிகவும் மட்டம். பள்ளிக்கு ஒழுங்காகப் போக மாட்டான். போகும் நாட்களிலும் பாடத்தில் கவனம் செலுத்துவதில்லை.

வகுப்பு ஆசிரியர் சில நாட்களுக்கு முன், கண்ணனின் தகப்பனாரைச் சந்தித்தபோது, ''கண்ணன் பள்ளிக்குச் சரியாக வருவதில்லை. படிப்பிலும் கவனம் இல்லை. இந்நிலை தொடர்ந்தால் அடுத்த ஆண்டும் ஐந்தாம் வகுப்பிலேயே இருக்க வேண்டியதுதான்'' என்று சொல்லிவிட்டார்.

கண்ணனின் பெற்றோர் மிகவும் ஏழைகள். அவனது தந்தை அதிகாலையிலேயே எழுந்து வேலை தேடிப் புறப்பட்டுவிடுவார். அவனது தாயார் தங்கம்மாளுக்கும், அவனுக்கும் தினமும் தகராறுதான்! ஒவ்வொரு நாளும் அவனைப் பள்ளிக்கு அனுப்பி வைப்பதற்குள் அவள் படாத பாடு பட்டுவிடுவாள்.

அன்றும் அப்படித்தான்.

''கண்ணு! குளித்து விட்டுவா. சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்குப் புறப்படலாம்'' என்றாள், தங்கம்மாள்.

''நான் இன்று பள்ளிக்குப் போக மாட்டேன்'' என்றான், கண்ணன்.

''என்ன...? நேற்றுத்தான் போகவில்லை. இன்றும் போகாமல் இருப்பதா...? கூடாது'' என்ற தங்கம்மாள் இதமான குரலில், ''கண்ணு! நம் வீட்டில் எனக்குப் படிக்கத் தெரியாது. உன் அப்பாவுக்கும் படிக்கத் தெரியாது. நாங்கள் இளமையில் படிக்காமல் போனதை நினைத்து இப்போது எவ்வளவு வருத்தப்படுகிறோம், தெரியுமா...? எங்களைப் போல் இல்லாமல் நீயாவது பள்ளிக்குச் சென்று, நன்றாகப் படித்துக் கொள்ளடா!'' என்று கெஞ்சினாள்.

''ஊகூம். நான் மாட்டேன், போ'' என்று சிணுங்கிக்கொண்டே வாசலுக்கு ஓடினான், கண்ணன்.


''ட்ரிங்...ங்...''

திடுக்கிட்டு நின்றான் கண்ணன். நல்லவேளை; மிதிவண்டி அவன் மீது மோதவில்லை.

''தம்பி, பார்த்து ஓடி வரக் கூடாதா?'' என்று சொல்லிக்கொண்டே, மிதி வண்டியில் மாட்டியிருந்த காக்கி நிறப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினார், அஞ்சல் பணியாளர்.

அப்போது—

கண்ணனைக் கூப்பிட்டுக்கொண்டே வீட்டுக்குள்ளிருந்து வந்த தங்கம்மாள், அஞ்சல் பணியாளர் நீட்டிய கடிதத்தைப் பார்த்ததும், ''ஐயா,! அந்தக்



## கஸ்தூரிபாவின் கடைசி ஆசை!

1944-ம் ஆண்டு பிப்ரவரி மாதம். அண்ணல் காந்தியடிகளும், அவருடைய மனைவி கஸ்தூரிபா காந்தியும், அவர்களுடைய பேத்தி மனுபென் காந்தியும் அன்றைய பிரிட்டிஷ் அரசால் தடுப்புக் காவல் சட்டப்படி ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். கஸ்தூரிபா உடல்நலம் குன்றிப் படுத்த படுக்கையாக இருந்தார். தன் இறுதி நாட்களை எண்ணிக்கொண்டிருந்த அவருக்காக ஆங்கில அரசு சிறை விதிகளைத் தளர்த்தி உறவினர்களையும் நண்பர்களையும் அவரைப் பார்க்க அனுமதித்தது.

உறவினர்கள் முன்பாகத் தம்முடைய பையைக் கொண்டு வருமாறு கஸ்தூரிபா மனுபென்னிடம் சொன்னார். மனுபென் கொண்டு வந்த அப்பையில் இருந்து கஸ்தூரிபா இரண்டு புடவைகளை எடுத்தார். அவரே ராட்டையில் நெய்த நூலைக் கொண்டு தயாரிக்கப்பட்ட புடவைகள் அவை.

''நான் இறந்த பிறகு என் உடல் மீது ஒரு புடவையைப் போர்த்தி விடுங்கள். இன்னொரு புடவையை...'' என்று கூறி, சற்று நிறுத்தினார் கஸ்தூரிபா. கூடி இருந்தவர்களின் ஆவல் ததும்பும் முகங்களைக் கண்டு அவர் தொடர்ந்தார், ''தாயின் சொத்து மகளுக்குத்தான். எனவே, இப்புடவையை லட்சுமிக்குக் கொடுத்து விடுங்கள்''.

காந்திஜிக்கும் கஸ்தூரிபாவுக்கும் பெண் குழந்தையே இல்லை. எனவே அரிஜனப் பெண்ணான லட்சுமியை காந்திஜி தம் மகளாக வளர்த்து வந்தார். அப்பெண்ணுக்குத் தன் புடவையைத் தரும்படி சொன்ன கஸ்தூரிபாவின் கடைசி ஆசையைக் கேட்டுக் கூடியிருந்தவர்கள் மெய்சிலிர்த்தனர். —கீதாபஞ்சு.

கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது?'' என்று கேட்டாள்.

கடிதத்தைத் திருப்பிப் பார்த்த அஞ்சல் பணியாளர், ''அசாமிலிருந்து வந்திருக்கிறது'' என்றார்.

அதைக் கேட்ட தங்கம்மாள் முகம் மலர, ''ஐயா, என் தம்பி அங்கு பட்டாளத்தில் வேலை பார்க்கிறான். கடிதத்தை அவன்தான் எழுதி இருப்பான். தயை செய்து அதைப் படித்துச் சொல்லுங்கள்'' என்றாள்.

அஞ்சல் பணியாளர், ''எனக்கு நேரம் இல்லை, அம்மா. உங்கள் மகன்தான் இருக்கிறானே, அவனைப் படிக்கச் சொல்லுங்கள்'' என்று சொல்லிக்கொண்டே மிதி வண்டியில் ஏறிப் போய்விட்டார்.

தங்கம்மாளுக்கு ஏமாற்றம். அவளுக்குத் தன் மகனின் எழுத்தறிவைப் பற்றித் தெரியும். இருப்பினும், மனத்தில் சிறு ஆசை.

''கண்ணா! உன் மாமாதான் எழுதி இருக்க வேண்டும். நீ படிடா கண்ணு!'' என்று கண்ணனின் மோவாயைப் பிடித்துக் கெஞ்சினாள், தங்கம்மாள்.

மாமாவின் கடிதம் என்றதுமே கண்ணனுக்கு மகிழ்ச்சிதான். மாமா ஊருக்கு வந்தால், அவனுக்குப் புதுச் சொக்காய்களும், பலவிதமான விளையாட்டுப் பொருட்களும், நிறையத் தின்பண்டங்களும் வாங்கி வருவார். ஆகவே, கடிதத்தில் என்ன எழுதி இருக்கிறது என்பதை அறிவதற்கு அவனுக்குப் ஆவலாக இருந்தது.

எனவே, கடிதத்தைப் படிக்க முயன்றான்.

கடிதம் தமிழில்தான் எழுதப்பட்டிருந்தது. ஆனால், எழுத்துக்களைச் சேர்த்துப் படிக்கத்தான் அவனால் முடியவில்லை. பாடப் புத்தகத்தில் தனித்தனியே குண்டு குண்டாக இருக்கும் எழுத்துக்களைப் படிப்பதற்கே திணறும் அவனால், அந்தக் கடிதத்தில் உள்ள எழுத்துக்களை எப்படிப் படிக்க முடியும்?

முதன் முறையாக அவனுக்குத் தன் மீதே வெறுப்பு உண்டாயிற்று. வருத்தம் தோய்ந்த முகத்துடன் அம்மாவைப் பார்த்தான், கண்ணன்.

மகனின் நிலைமையைப் புரிந்து கொண்ட தங்கம்மாள், ''உனக்குப் புரியவில்லையா...? சரி. அப்பா கடைத் தெருவில் நிற்பார். இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய்க் கொடு. அங்கே அவருக்குத் தெரிந்தவரிடம்

கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேட்பார். விவரத்தைத் தெரிந்து கொண்டு சீக்கிரமாக ஓடி வா....'' என்றாள்.

கண்ணன், கடைத் தெருவுக்கு விரைந்தான்; தந்தையைப் பார்த்து, கடிதத்தைக் கொடுத்தான்.

கண்ணனின் தந்தையார் அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டு அருகில் இருந்த கடையை நோக்கிச் சென்றார்.

கண்ணனும் அவரைப் பின் தொடர்ந்து சென்றான்.

கடைக்காரரிடம் கடிதத்தை நீட்டி, ''ஐயா, இதைப் படித்துச் சொல்லுங்கள்'' என்றார், கண்ணனின் தந்தை.

''நான் கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இப்போது முடியாது'' என்று சொல்லிவிட்டார், கடைக்காரர்.

இருவரும் அடுத்த கடைக்குச் சென்றார்கள். அங்கு கூட்டம் அதிகமாக இருந்தது. ஆகவே, அதையும் விட்டுப் பக்கத்தில் இருந்த தேநீர்க் கடைக்குச் சென்றார்கள்.

அந்தத் தேநீர்க் கடைக்காரரும், ''இப்போது படித்துச் சொல்ல எனக்கு அவகாசம் இல்லை'' என்று சொல்லி விட்டார்.

கண்ணனின் தந்தையாரை விடவும் கண்ணனுக்குத்தான் அதிக வருத்தம். 'ஒருவரும் படித்துச் சொல்லவில்லையே!'


கடைவாசலில் நின்று கொண்டிருந்த — நன்கு படித்தவர் போல் காணப்பட்ட ஒரு பெரியவரிடம் கடிதத்தை நீட்டி, ''ஐயா! இந்தக் கடிதத்தைப் படித்துச் சொல்லுங்கள்!'' என்றார், கண்ணனின் தந்தை.

அதற்கு அவர், ''உமக்குத்தான் கண் இருக்கிறதே! படித்தால் என்ன?'' என்று கேட்டார்.

கண்ணனின் தந்தை மிகவும் வருத்தத்துடன், ''எனக்குக் கண்கள் இருக்கின்றன. ஆனால், கல்வி இல்லையே! அது இருந்தால்தானே எழுத்தைப் புரிந்து படிக்க முடியும்?'' என்றார்.

அதைக் கேட்ட பெரியவர், ''நான் அப்படிச் சொன்னதற்காக வருத்தப் படாதீர் ஐயா! இளமையில் படித்திருந்தால், இப்போது பிறரை நாட வேண்டி இருக்காது அல்லவா?'' என்று சொல்லிவிட்டு, கடிதத்தை வாங்கிப் படித்தார்.

அந்தக்கடிதத்தில்-கண்ணனின் மாமா அடுத்த வெள்ளிக்கிழமை ஊருக்கு வரப் போவதாக எழுதி இருந்தது.



**சித்திரப் புதிர்**

படத்தில் தீக்குச்சிகள் சிதறிக் கிடக்கின்றன. ஒடியாத, முழுமையான, தீக்குச்சிகள் மொத்தம் எத்தனை இருக்கின்றன?

—ஓவியர்: செந்தமிழ்ச்செல்வன்.

அதைக் கேட்ட கண்ணனுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

வீட்டுக்கு விரைந்து வந்து தாயாரிடம் விவரத்தைக் கூறிய கண்ணன், ''அம்மா! சோறு போடு. பள்ளிக்கு நேரமாகி விட்டது!'' என்றான்.

தங்கம்மாளுக்கு வியப்புத் தாளவில்லை.

தட்டில் சோற்றைப் பிசைந்து வைத்த அவள், ''கண்ணா! சற்று முன்பு வரை பள்ளிக்குப் போகமாட்டேன் என்று சொல்லி அழுதுகொண்டிருந்த நீ, நல்ல பிள்ளையாகத் திருந்தியது எதனால்?'' என்று வினவினாள்.

''அம்மா! என்னைத் திருத்தியது மாமாவின் கடிதம்தான்! எனக்குப் படிக்கத் தெரிந்திருந்தால், பிறரை நாடிப் போக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. கல்வியின் பயனை நான் இப்போதுதான் உணர்ந்தேன். இனி மேல் நான் தவறாது பள்ளிக்குச் செல்வேன். பாடத்தில் நன்கு கவனம் செலுத்துவேன். அடுத்து வரும் மாமாவின் கடிதத்தை நானே படித்துச் சொல்லுவேன். இது உறுதி'' என்று சொல்லிக்கொண்டே சாப்பிட்டுவிட்டு, பிறகு, பையைத் தோளில் மாட்டிக் கொண்டு பள்ளியை நோக்கி விரைந்து நடக்கலானான்.

# பூவைப்போல நனையலாம்

## தம்பி சீனிவாசன்

கொட்டும் மழையில்
வெட்ட வெளியில்
சொட்ட நனைவது
ஒரு சுகம்!

சின்னச் சின்னத் தூறலில்
சொட்டுச் சொட்டாய் நனையலாம்!
இன்னும் கொஞ்சம் மழையிலே
இன்னும் அதிகம் நனையலாம்!

புல்லைப் போல நனையலாம்!
பூவைப் போல நனையலாம்!
சில்சில் என்றே நனையலாம்!
சிரிக்கச் சிரிக்க நனையலாம்!

கொட்டும் மழையில், வெட் டவெளியில்
சொட்ட நனைவ தொரு சுகம்!
சின்ன வயதோர் மட்டும் அறியும்
சுகம் அது, தனி ரகம்!


[அன்புக் குழந்தைக்கு அறுபது பாடல்கள்' என்ற நூலிலிருந்து இது. குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவின் மணிவிழா வெளியீடு, பழனியப்பா பிரதர்ஸ்.]



Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Editor: K. Rajendran



பெயர் ........................................

வகுப்பு ........................................

பாடம் ........................................






பெயர் ........................................

வகுப்பு ........................................

பாடம் ........................................







பெயர் ........................................

வகுப்பு ........................................

பாடம் ........................................







பெயர் ........................................

வகுப்பு ........................................

பாடம் ........................................

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

# ப்ரியா ஃபன் ஸ்கோப்



இதோ, உங்கள் அறிவுத்திறனை சோதனை செய்ய ஓர் சிறிய விளையாட்டு. இங்கே காணும் படங்களில் இரண்டாவது படத்தில் எத்தனை வேறுபாடுகள் உள்ளன என்பதை கண்டுபிடித்து, வேறுபாடுகள் உள்ள இடங்களை அடையாளப்படுத்தவும். பிறகு, இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் முகவரியை எழுதி, ஒரு ப்ரியா மில்க்கீஸ் உறையுடன் கீழே காணும் முகவரிக்கு அனுப்பவும்.

★ இச்சலுகை எங்களுக்கு முதலில் கிடைக்கும் 1000 சரியான நுழைவுத்தாள்கள் அனுப்பியவர்களுக்கு மட்டும்.

பெயர் ____________________

முகவரி ____________________




## ப்ரியா மில்க்கீஸ்

**பேர்ல் ஃபுட் ப்ராடக்ட்ஸ்**
எர்ரமல்லூர் – 688 537 கேரளா

**ப்ரியா - உங்கள் அபிமான பிஸ்கட்**

Topads/PF/0284